T. 20809
G. 69309

# மன்றம்



0809
4E06

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மே மணி 8 1948

“மன்றம்”
விற்பனையாளர்கள்

மலாயாவுக்கு:

ஏ. அங்கமுத்து
தமிழ்நாடு புத்தக நிலையம்
த. பெட்டி எண் 118
6. ஈ போ ரோடு,
கோலாலம்பூர், மலாயா

இலங்கைக்கு:

எம். ஏ. ஹாதி சாஹிப்
159, செட்டியார் தெரு
கொழும்பு.

---

எல்லா ஹிக்கின்பாதம் புக்
ஸ்டால்களிலும்
“மன்றம்” கிடைக்கும்.

---

# ‘புது வாழ்வு’

[ மாத வெளியீடு ]

ஆசிரியர்: க. அன்பழகன், எம். ஏ.

விலை அணா 4

விற்பனை இல்லாத இடங்களில்
விற்பனையாளர் தேவை.

விபரங்கட்கு:—
நிர்வாகி “புதுவாழ்வு”
10 வேளாளத் தெரு,
புரசைவாக்கம், சென்னை



பதினெட்டாவது

# திராவிடக் கழக மாகாண மகாநாடு

★ ★

- மே 8, 9 தேதிகளில் -

தூத்துக்குடியில் நடைபெறும்

தலைவர் :

## பெரியார் ஈ. வெ. ராமசாமி

திறப்பாளர் :

## திரு. டி. பி. வேதாச்சலம்

கொடி உயர்த்துவோர் :

## திரு. கே. கே. நீலமேகம்

★ ★

செயலாளர் :

கே. வி. கே. சாமி

வரவேற்புத் தலைவர்கள்.

ஈ. வி. ஏ. வள்ளிமுத்து.

எஸ். நீதிமாணிக்கம்.

# மன்றம்

ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

★

## பொருளடக்கம்

மே தின விழா
காலச்சுழலில்
1848 - 1948
காரல் மார்க்ஸ்
மே தினம் ஓர் எச்சரிக்கை! (கவிதை)
தொழிலாளர் அணிவகுப்பு
அராபியர் கண்ட திராவிடம்
மலர்த் தோட்டம் (தொடர் கதை)
விடுதலை வேட்கை உயிரின் இயற்கை (கவிதை)
துர்கனிவ்
முட்டாள்! (கற்பனைச் சித்திரம்)
நெஞ்சே நில்லாய்!
காணுத காட்சி (கவிதை)
தேய்ந்த மெருகு (கதை)
அமைப்பு முறை வேண்டும்
ஆற்ருது அழுத கண்ணீர்
நீதிதேவனும் குடியானவனும் (கதை)
ஆச்சரியம்!
சுதந்திரம் ஏலம் போடப்படுகிறது.
மலர்க்காடு

30-79 செம்புதாஸ் தெரு, சென்னை 1

★

T020809
Sarasvathi Mahal Library. Thanjavur




மலர் 1] ※ மே 1948 ※ [இதழ் 5

# ★ மே தின விழா ★

**மா**நிலமெங்கும் மே தின விழா கொண்டாடப்படுகிறது. அலைகடலையும், மலைமுகடுகளையும், அரசியல் எல்லைகளையும், நிறவேற்றுமைகளையும் தாண்டி உலகத் தொழிலாளர் அனைவரும் கொண்டாடும் விழா மே தினமாகும். போராட்டத்தின்மூலம் புதுவாழ்வை அமைத்தவர்களுக்கும், புதுவாழ்வு வேண்டிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் மே தினம் புதிய சக்தியை அளிக்கிறது-நிலைமையைப் பலப்படுத்த, போராட்டங்களில் வெற்றிபெற!

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையா? என்ற கேள்வியை பெரு மூச்சுடன் கேட்பதோடு நில்லாமல், கெஞ்சும் உத்தேசத்தையும் விட்டு 'புதியதோர் உலகு செய்வோம்' என்ற போர் முழக்கத்துடன் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட உழைப்பாளர் போராடுகின்றனர். தங்கள் உழைப்பைக் காட்டி, உழைப்பின் பலனைக்காட்டி, உழைக்காதவர்களின் உல்லாச வாழ்வையும், உழைத்தோரின்



உளுத்த வாழ்வையும் காட்டி, சமூகநீதி கேட்கின்றனர். நாடெங்கும் அவர்கள் தேக்கிய வளமையும், நாள்தோறும் அவர்களை வாட்டும் வறுமையும் போராட்டத்திற்கு அவர்களைத் தூண்டுகின்றன. தொழிலாளியும்-முதலாளியும் சந்திக்க முடியாத அளவுக்கு வேற்றுமை வளர்ந்து, உலகெங்கும் இரு படைவரிசைகள் உண்டாகி, போராட்டம் நடைபெறுகிறது.

இன்று அந்தப் போராட்டம் உச்சநிலையில் இருக்கிறது. பழைய ஏகாதிபத்தியங்கள், பிடிதளர்ந்து, ஏதும் இயலாத நிலையிலிருக்கின்றன. அவைகளின் சுரண்டல் முறையின் ஏகபோக மிராசாக இருந்த காலனிப் பிரதேசங்கள் விலகிவிட்டன. பழைய ஏகாதிபத்தியங்கள் மங்கி மறையும் நிலையில், புது அமெரிக்க ஏகாதிபத்தியம் பழைய அமைப்பைப் பாதுகாப்பதில் மும்முரமாயிருக்கிறது. ஐரோப்பாவில் தோன்றியுள்ள தொழிலரசுகளைத் தடுக்க, அமெரிக்க அரசாங்கம் முயல்கிறது. தொழிலாளர் அரசுகளுக்கு எதிராக மேற்கு ஐரோப்பாவை ராணுவ தளமாக்க செய்யும் முயற்சியே மார்ஷல்திட்டம். டாலர் பீரங்கி சத்தத்தின் மூலம் மற்ற சத்தங்களை அடக்க முயலுகிறது. பொருளாதார நெருக்கடியால்ஏற்படும் கூக்குரலை டாலர் சத்தத்தினால் அடக்கப் பார்க்கிறது. தன் அமைப்பை ஒத்துக்கொள்ளாத நாடுகளிடம் பீரங்கியைக் காட்டி பயமுறுத்துகிறது. மீண்டுமொரு போர் என்ற பீதியின் மூலம் வேறுபக்கம் மக்களின் கவனத்தை மாற்றுவதுடன், ருஷியாவுக்கு எதிராக அதைப் பயன்படுத்துகிறது. அதற்குத் துணையாக இருக்கிறது ஆங்கிலோ-பிரெஞ்சு கூட்டுறவு. ஏகாதிபத்தியங்கள் போடும் கூச்சல் அவைகளின் நெருக்கடி நிலையை உணர்த்துகிறது. சமாளிக்க முடியாத நிலை, அதன் விளைவாகப் போராட்டத்தின் கொடுமை அதிகப்படுகிறது. மேற்கு ஐரோப்பாவில், இத்தாலியில், கிரேக்க நாட்டில், சீனாவில் அமெரிக்க டாலர் உலவுகிறது. தொழிலாளி-முதலாளிப் போராட்டம்! ஒரு பக்கத்தில் முதலாளி அரசாங்கங்களும், மறுபக்கத்தில் தொழிலாளர்



**அரசுகளும் நிற்கின்றன. ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் முதலாளி-தொழிலாளி போராட்டம், பழைய முறைக்கும்-புதிய சக்திக்கும் மோதுதல்!**

சென்ற மே தினத்திற்கும், இந்த மே தினத்திற்குமிடையில் இந்தியாவின் அசிரயலமைப்பில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. சுதந்திரம் கிடைத்து காங்கிரஸ் சர்க்கார் பதவி ஏற்று, கோட்டை கொத்தளங்களில் கொடி பறந்தால்கூட, பழைய காத்தான் காத்தானுகவே இருக்கிருன். அவன் கந்தல் உடை மாறவில்லே. கலக்கம் தீரவில்லே. காத்தானின் நிலே மோசமாகிக் கொண்டுதான் போகிறது. அதை மாற்றியமைக்க உடனடியாகச் செயல் தேவை. அனுதாபப் பேச்சும், "அருள் புரிவோம்" என்ற ஆறுதல் மொழியும், சத்வேதாந்தமும், சமரச கீதமும் நிலேமையைச் சீர்திருத்தா. இவைகளினுல் இல்லாமை, போதாமைக் குறைகளால் வாடுபவன், திருப்தி அடையவில்லே. சுதந்திரத்தின் மெல்லிய புன்னகை, சட்டதிட்டங்களின் சாவதானப் பார்வை இவைகளேவிட, கொடுமையால் பாதிக்கப்பட்ட கோடானுக்கோடி மக்கள் உடனடியாக உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் கேட்கிருர்கள். அவர்கள் வாழ விரும்புகிருர்கள்—சாவதற்குமுன்!

*தொழிலாளர் இயக்கங்கள் மீது வீசப்பட்ட தடையுத்தரவுகளும், புதுச் சட்டங்களும் தமிழ் நாட்டில் தொழிலாளர் நிலேயை மிகவும் பாதித்திருக்கிறது. முதலாளியிடம் பூசல் நேருகிற சமயங்களில் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தினிடம் முறையிடுவதைத் தவிர வேறு வழியில்லே. தொழிலாளரைப்பாதுகாக்கும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். முதலாளிகளின் கூட்டாட்சிக்கு தொழிலாளிகளேப் பலியிடக் கூடாது. வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்ட காரணத்தால் அதிகக் கூலிகேட்டு தொழிலாளர் போராடுகின்றனர். கோவையில் பெரும் வேலே நிறுத்தம் நடைபெறுகிறது. 40000 பேர்களுக்கு மேல் சிக்கி யிருக்கின்றனர். வேலே நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அரசியல் கட்சி மாறுபாடுகளினுல் அரசாங்கத்திற்குத்தொல்லே கொடுக்கிறர்கள் என்று கூறமுடியாது. அவர்களும் ஆட்சியிலமர்ந்துள்ள மந்திரிகளின் கட்சியைச் சேர்ந்தவர்களே. ஆனுல் தொழிலாளர்கள், தொல்லே தர வேண்டுமென்ற எண்ணத்தினுலல்ல; தங்களின் தொல்லேயைத் தவிர்க்க வேறு வழியின்றி வேலே நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.*

தமிழ் நாட்டில் உழவர் நிலையிலிருந்த சிக்கல் தீரவில்லை. சென்ற ஆண்டில் ஜமீன்—இனும் ஒழிப்புப் பிரச்சினையை மந்திரி சபை ஏற்றுக் கொண்டது. வரவேற்கத்தக்க திட்டங்களில் ஒன்று. ஜமீன்—இனும் ஒழிப்பு என்ற முறையில், கோடிக் கணக்கான பணத்தை ஜமீன்தார்கள் கையில் கொடுத்து, முதலாளிகளாக்காமல், மிகக் குறைந்த அளவுக்குக்கட்டணம் விதிக்க வேண்டும். நிலச் சீர்திருத்தங்கள்; அத்துடன் நில்லாமல், நிலத்தை உழுது விதைப்பவனுக்கு நிலத்தில் பங்கும் உரிமையும் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். நாட்டுக்கு உணவு கொடுப்பவன் உழவன்; அவனுக்கு உணவு கிடைத்தால்தான் அவன் உழைக்க முடியும்.

*ஓரிடத்தில் திரட்டப்பட்டு, தொழிற் சங்கங்களைப் போன்று கட்டுப் பாடுடன் உருவகப்படுத்தப்பட்ட தொழிலாளர்களைத் தவிர, எத்தகைய அமைப்புமின்றி நாடெங்கும் சிதறிக் கிடக்கும் உழைப்பாளரின் வகையும் தொகையும் ஏராளம். கைவண்டி இழுப்பவர்கள், கனமூட்டை சுமப்ப வர்கள், உழுது பயிரிடுவோர், உலைக்களத்தில் உழைப்பவர்கள், ஆடை வெளுப்பவர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், மர வேலைக்காரர்கள், மண் சுமைப் பவர்கள், இன்னோரன்ன தொழிலாளர் தங்களைக் காத்துக்கொள்ளும் அமைப்பின்றி, காப்பாற்றுவாருமின்றி கவனிப்பாருமற்று வாடி வதங்குகின்ற னர். வாழ்க்கை வயலில் கருகிய பயிராகவே அவர்களின் கூட்டம் காட்சி யளிக்கிறது. சிதறிக் கிடக்கும் அவர்கள் வறுமையின் கொடுமையைத் தாங்காது, ஆங்காங்கு மோதி, வாழ்வுக்காகப் போராடுகின்றனர்.*

தொழிலாளர் தினமாகிய இம்மே தினத்தில், நாட்டினுள் சிதறிக் கிடக்கும் தொழிலாளரை மட்டு மல்ல; நாட்டின் வெளி யேயும், கடல் கடந்த பர்மா, இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் சிதறிக் கிடக்கும் தமிழர்களை-உழைப் பாளர்களையும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். தாய் தந்தையரையும், மனைவி மக்களையும், உற்றார் உறவினரையும் பிரிந்து கூலிவேலை செய்து பிழைக்க வெளிநாட்டுக்குப் போன வர்கள், ரப்பர்த் தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களி லும் கண்ணீர் விட்டுக்கலங்கும் உழைப்பாளர்கள், அவர்களின் கவனம் வந்துதான் தீரும். பொன்னி நதிக்கரையில் பொன் கொழிக்கும் வயல்களிருக்க, வைகை நதிக்கரையில் வளஞ்சுரக் கும் தோட்டங்களிருக்க, பருத்தி விளையும் இடங்களும், பல வகை உலோகங்களைத்தரும் சுரங்கங்களும், மலைச்சரிவுகளும், அலைகடலும், பொன்னும் மணியும், பூவும் கனியும், தென்றலும்




மார்ச் :—

30—மார்ஷல் திட்டப்படி சீனுவிற் 46,30,00,000 டாலர்கள் உதவி செய்ய அமெரிக்கா மசோதா நிறைவேற்றியது.

— தொழிற் கல்விக்கு 1·5 கோடி ரூபாயும், மேற்கொண்டு 30 லட்சமும் செலவு செய்ய இந்திய அரசாங்கம் தீர்மானித்தது.

— இந்தியாவின் புது அரசியல் அமைப்பின்படி பொதுத் தேர்தல்கள் 1950-ல் நிகழும் என்று அ. அமைப்பு மன்ற நகல் திட்டக் கமிட்டித் தலைவர் அறிவித்தார்.

31—ஜெர்மனியில் ரஷ்யப் பகுதியிலுள்ள சோவியத் ராணுவ கவர்னர் பெர்லினிலிருந்து மேற்குப் பகுதிக்குச் செல்லும் பிரயாணிகளும், சாமான்களும் கடுமையாகச் சோதனையிடப்படும் என்று அறிக்கை வெளியிட்டார்.

— காஷ்மீர் பேச்சு வார்த்தைகளில் ஸ்தம்பிப்பு ஏற்பட்டது.

ஏப்ரல் :—

1—ஜெர்மனியில் ரஷ்யப் பகுதியில் பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவ புகை வண்டிகளுக்குத் தடை. அமெரிக்க, பிரிட்டிஷ் ராணுவத் தலைவர்கள் கண்டனம்.

— ரிஸர்வ் பாங்கு பேச்சு வார்த்தைகள் இரு டொமினியனுக்குமிடையே முடிவுபெற்றது.

2—தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் மசோதா இந்தியப் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

---

தேனும் அனைத்துமிருக்கின்றன. திராவிடநாட்டில், இவ்வளவு வளங்கள் தங்கி யிருக்கும் நாட்டில், மனிதன் தங்கி வாழ வழியின்றி, வேறு நாடுகளுக்கு ஓடவேண்டி யிருக்கிறது. இந்த நிலை மாறி, திராவிட நாட்டின் தனியரசு, தன் மக்களைத்திரும்ப அழைத்துக்கொள்ளும் பண்பும் செல்வநிலையும் பெறவேண்டும். மே தினம் அத்தகைய புதிய அழைப்புக்கும், நல்வாழ்வுக்கும் வழி அமைப்பதாகும்!

— கல்கத்தாவில் மத்திய அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் ஆரம்பமாயிற்று.

3—டாக்டர் பி. சுப்பராயனின் மந்திரிப் பதவி இராஜினமா ஒப்புக் கொள்ளப்பட்டதாகப் பிரதமரின் அறிவிப்பு.

— மத சம்பந்தமான அரசியல் கட்சி கூடாது என்று இந்தியப் பாராளு மன்றம தீர்மானம் நிறைவேற்றியது.

4—அபிப்பிராய பேதமே இராஜினமாவிற்குக் காரணம் என்று டாக்டர் சுப்பராயன் அறிக்கை வெளியிட்டார்.

— முப்பத்தைந்து மத்திய இந்திய சமஸ்தானங்கள், விந்திய பிரதேச சமஸ்தான யூனியன் என்ற அமைப்பில் ஒன்று சேர்ந்தன.

5—டாக்டர் சுப்பராயன் அறிக்கைக்குப் பிரதமரின் மறுப்பு.

— ஜினிவா சுதந்திரச் செய்தி மாநாட்டில் இந்தியத் தீர்மானம் நிறைவேறிற்று.

6—பெர்லினில் சோவியத்-பிரிட்டிஷ் விமானங்கள் மோதிக் கொண்டன. பிரிட்டிஷ் விமானத்திலிருந்த 16 பேர்கள் இறந்தனர்.

— ரஷ்ய ராணுவத் தலைவர் விமான மோதுதல் ஏற்பட்டதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

— ரஷ்யா - பின்லாந்து ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

— குடி வகைகள் மீதும், புகையிலை மீதும் அதிக வரி விதிக்கும் பட்ஜெட்டை ஸ்டாபோர்டு கிரிப்ஸ் லண்டன் பாராளு மன்றத்தில் கொண்டு வந்தார்.

7—மைசூர் சமஸ்தான அரசியலமைப்பு சபை முதன் முதலாகக் கூடி அரசியமைப்பு நகலைத் திட்ட ஆரம்பித்தது.

8—எட்டுப் பிரிவுகளாகப் பிரதேச வாரியாகப் பிரதேசப் படைகள் அமைக்க இந்திய அரசாங்கம் முடிவு செய்தது,

— அரபுத் தலைவர்களின் பிரதான அதிகாரி அப்துல் காதர் ஹுசைனி கொல்லப்பட்டார்.

— கல்கத்தா மத்திய அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் வாபஸ் வாங்கப்பட்டது.

10—காங்கிரஸ் திருத்தக் கமிட்டி இறுதி அரசியல் அமைப்பு நகலை வெளியிட்டது.

12—ஹிராகுத் அணைக்கட்டு பண்டித நேருவால் திறக்கபபட்டது.

14—காந்தி ஞாபகார்த்த நிதியில் 75 சத விகிதம் அந்தந்த மாகாணங்களிலேயே பயன் படுத்தப்படும் என்று ராஜேந்திர பிரசாத் கூறினர்.

15—இரு டொமினியன் மாநாடு கல்கத்தாவில் ஆரம்பமாயிற்று.

— பிரெஞ்சு இந்தியாவின் வருங்காலத்தை வாக்கெடுப்பின் மூலமாக முடிவு செய்ய வேண்டும் என்பதாக பிரெஞ்சு-இந்தியா பிரதிநிதிகள் முடிவு செய்தனர்.

16—மார்ஷல் திட்ட பிரமாணத்தில் 18 ஐரோப்பிய நாடுகள் கையெழுத்திட்டன.

17—இந்தியா-ஹைதராபாத் பேச்சு வார்த்தை முடிவுற்று ஒப்பந்தம் ஏற்பட்டது.

— பாலஸ்தீன் சமாதானத் தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிறைவேறியது.

19—சியாங்கே ஷேக்— சீனவின் தலைவரானர்.

— ஐ. நா. அசெம்பிளியில் பர்மா ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

— கஷ்மீர் பற்றிய புதிய தீர்மானத்தை இந்தியா நிராகரித்தது. பாக்கிஸ்தான் நகல் தீர்மானம் சமர்ப்பித்தது.

20—இத்தாலி தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி தோல்வியுற்றது. கிருஸ்தவ ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றது.

22—துணி நூல் சம்பந்தமான எல்லாக் கட்டுப்பாடுகளையும் ஒழிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்தது.

23—ஹைதராபாத்தில் புதிய அரசியலமைப்பு ஏற்படுத்த நிஜாம் பிரகடனம் வெளியிட்டார்.

24—அ. இ. கா. கமிட்டி பம்பாயில் கூடி காங்கிரஸ் அரசியல் அமைப்பு நகல் திட்டத்தைப் பரிசீலனை செய்தது.

# 1848-1948

## 1848-ம். ஆண்டு!

### சரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன் !!

ஐரோப்பிய நாடுகளில் புதிய கொள்கையொன்று பரவியது. தொழிலாளர் இயக்கங்கள் எங்கும் பலமடைந்தன. அடக்குமுறையையும், ஆதிக்க வெறியையும் எதிர்த்து, தங்கள் உரிமையை நிலைநாட்ட உழைப்பாளர் துடிதுடித்தனர். அவர்களது துணிவும் ஆவேசமும் ஆளும் கூட்டத்தினருக்கு அச்சத்தைக் கொடுத்தது. சிறிது அசைவு என்றால்கூட முன்னேறி அடக்கத் தயாராயிருக்கும் அதிகாரக் கூட்டம், முதல்முறையாகத் தப்பித்தால் போதும் என்று தன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் கவலை கொண்டது. அந்த நிலையில் 1848-ம் ஆண்டு பிறந்தது. வரும் ஆண்டில் என்ன நேருமோவென்று வல்லரசுகள் கலங்கின. புத்தாண்டு தொடக்கத்தில் பியாகரோ என்ற பத்திரிகை, "புதிய ஆண்டில் பொதுவுடைமையால் ஆபத்து இருக்கிறது," என்று அதிகாரவர்க்கத்தினரை எச்சரித்தது.

அதன் எச்சரிக்கை பொய்த்துப் போகவில்லை. 1848-ல் ஐரோப்பிய நாடுகளனைத்தையும் புரட்சி உலுக்கியது. அரசாங்கங்கள் அதிர்ந்தன; அரசபீடங்கள் கவிழ்ந்தன; அடக்குமுறைக்கு எங்கணும் எதிர்ப்பு வந்தது. போராட்டம்! புரட்சி! புரட்சி எங்கும் தலைதூக்கி நின்றது! முதல் முறையாக ஐரோப்பாவில் தொழிலாளரின் செங்கொடி பறந்தது!

1848! புரட்சிகளின் ஆண்டு! வால்ட் விட்மன் என்ற கவி பாடியதைப் போல!

> "சோம்பியிருந்த, உறங்கிக் கிடந்த சதுப்பு நிலத்திலிருந்து, திடீரென்று மின்னல் வேகத்தில் புரட்சி பாரைக் குலுக்கியது. அதன் வேகத்தால் அதுவே அதிர்ந்து ஆச்சரியப்பட்டது. அதனுடைய பாதங்கள் சாம்பலில், கந்தல் பரப்பில் படிந்திருந்தன. கைகளோ அரசர்களின் குரல் வளையைப் பிடித்துக் கொண்டிருந்தன."

* * * *

இங்கிலாந்தில் சார்டிஸ்ட் என்ற தொழிலாளர் இயக்கம் போராடியது. 1848 பிப்ரவரியில் பாரிஸ் நகரத்தில் தொழிலாளர் புரட்சி ஏற்பட்டது. போலந்தில் போராட்டம் தலை தூக்கியது. இத்தாலியில் "இளைஞர் இத்தாலி இயக்கம்" எழுந்தது. ஐரோப்பாவெங்கும், பாரிஸில், பர்லினில், பிரேக் நகரில், மிலான் நகரில், வியன்னாவில், போராட்டங்கள் நிகழ்ந்தன.

1847 நவம்பரில் லண்டனில் கூடிய கம்யூனிஸ்ட் லீக், கட்சியின் தத்துவம், திட்டம் இவைகளை விளக்கி ஒரு அறிக்கைத் தயாரிக்குமாறு மார்க்ஸ் ஏங்கெல்ஸ் இருவரையும் கேட்டுக் கொண்டது. அதற்கு இணங்கி இருவரும் ஒன்று கூடி கம்யூனிஸ்ட் அறிக்கையைத் தயாரித்தனர். அது 1848 பிப்ரவரியில் வெளியிடப்பட்டது. அது வெளி வந்ததிலிருந்து இந்த ஆண்டு



வரையிலும் ஒரு நூற்றாண்டு காலம் ஆகிறது.

ஒரு பக்கத்தில் ஜாரரசன், போப்பாண்டவர், அரச குடும்பத்தினர், பிரபுக்கள் சபையினர், அரசியல் வாதிகள், ஆட்சி அதிகாரிகள் நின்றனர். இவர்களை எதிர்த்துத் தொழிலாளர் எழுந்தனர்.

போராட்டங்களின் மத்தியில், புதிய சக்தி புதிய குரல் கிளம்பியது. அது தான் மார்க்ஸ் ஏங்கெல்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் அறிக்கையாகும்.

1848-ல் ஏற்பட்ட புரட்சிகள் அடக்கப்பட்டு விட்டன. ஆட்சி முறையைக் கைப்பற்றுவதும், கைப்பற்றியவுடன் அதைப் பாதுகாக்கும் திறமையையும், போராட்டத்தின் தன்மையையும், போக்கையும் சரியாக உணர முடியாததால் தொழிலாளர் வெற்றி பெற முடியவில்லை. 1848-49 புரட்சிக

னைத்தும் தோல்வியடைந்தன. "புரட்சிக்குத் தோல்வி" அதுதான் எந்தப் பக்கத்திலிருந்தும் வந்தது ஆனால் அவைகளினூர் புரட்சி மனப்பான்மை அழிந்து விடவில்லை. அழிந்தவை பழைய நம்பிக்கைகள், பழைய கொள்கைகள், தத்துவமற்ற ஆவேச உரைகள், முதலியனவேயே. அவைகளைப் போக்கி தொழிலாளர்களிடை நம்பிக்கையையும், விஞ்ஞான நீதியில் வளர்க்கப்பட்டதத்துவத்தையும் வெற்றியளிக்கும் திட்டத்தையும் கம்யூனிஸ்ட் அறிக்கை அளித்தது. புரட்சிகள் அடங்கின என்று அதிகாரவர்க்கத்தினர் அமைதியோடிருக்க முடியவில்லை. மிகப்பாடுபட்டு எதிர்ப்புகளை அடக்கிய நேரத்தில், அடக்க முடியாத புதிய சக்தி பொதுவுடைமைக் கொள்கை உருவில் வளர்வதைக் கண்டு கிலி கொண்டனர். இதை வால்ட் விட்மன் "அஞ்சியோடிய அரசர்கள் மீண்டனர். அவர்களுக்குப்பின், கொலைகாரன், மதக்குரு, வரி வசூலிப்போன், போர் வீரன், சட்ட நிபுணன், பிரபு, சிறையதிகாரி, வஞ்சகன் அனைவரும் வந்தனர். ஆனால்! அவர்களுக்குப் பின்னால் மெதுவாகப் புதிய உருவம் வந்தது" என்று கம்யூனிசம் வந்ததைக் குறிப்பிடுகிறார். பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படையாக முதற் பாடமாக, கம்யூனிஸ்ட் அறிக்கை வெளி வந்தது.

மறக்க முடியாத வரலாற்று ஆதாரங்களுடன் முதலாளி முறை வளர்ந்த விதத்தையும், அதன் வளர்ச்சியிலேயே அதன் அழிவும் கலந்திருக்கிறதென்றும், அதன் அழிவுக்குப்பின் தொழிலரசு நிலைக்குமெனவும், கம்யூனிஸ்ட் அறிக்கை உறுதியுடன் தெரிவித்தது. உலக அமைப்பில் தொழிலாளர் அனைவரும் ஒன்று கூடி, முதலாளித்துவத்தை முறியடிக்க வேண்டுமென்றும், புதிய தொழிலரசை உண்டாக்க, அரசியல் ஆட்சியைத் தொழிலாளர் கைப்பற்ற வேண்டுமென்றும் அறிக்கை கூறியது. புதிய அமைப்பின் நோக்கங்களையும். திட்டத்தையும், புரட்சி நடைபெற வேண்டிய முறையையும் கம்யூனிஸ்ட் அறிக்கை வரையறுத்தது.

கம்யூனிஸ்ட் அறிக்கை சுமார் முப்பது பக்கங்கள் கொண்ட சிறு நூல். ஆனால் அதைப் போன்று பெரும் புரட்சிப்புயலை உண்டாக்கிய நூல் வரலாற்றில் வேறு எதுவும் இருந்திருக்க முடியாது.

> தொழிலறிந்த ஏழை மக்கள்
> தொழில் புரிந்து செல்வர்பால்
> அழிவிலாமுதல்கொடுக்க
> அம்முதற்பணத்தினால்
> பழிமிகுந்த அரசமைத்துப்
> படைகள் தம்மை ஏவியே
> தொழில்புரிந்த ஏழைமக்கள்
> சோற்றிலேமண் போடுவார்!

முதலாளித்துவ முறையின் கீழ் தொழிலாளி தவித்தான். அவன் வாழ்நாளில் அவனுக்குக் கிடைத்த குறைந்த கூலி, பஞ்சம், பசி, பிணி, எதிர்பாராதவை, மரணம் இவைகளே. அவன் முதுகிலும் பெரும் பாரங்கள் ஏற்றப்பட்டிருந்தன. பாடுபட்டும் வாழ முடியாத கொடுமையில் தொழிலாளி தவித்தான். அந்நிலையில் கம்யூனிஸ்ட் அறிக்கை அவனைத்தட்டியது "பலமிக்க அமைப்பு என்று பணக்கார ஆதிக்கத்தைக் கண்டு மிரளாதே! அதன் வளர்ச்சியே அதற்குச் சவக்குழி தோண்டுகிறது. அதன் அழிவு நிச்சயம். தொழிலரசு அமைவதும் நிச்சயம்" என்று தொழிலாளிக்கு அது அறிவித்தது. தொழிலாளியின் கண்களில் புதிய ஒளி தோன்றியது. "ஆட்டிப்படைக்கும் அதிகாரக் கூட்டம், அது அழிந்து போவது நிச்சயம்" இந்த நம்பிக்கைச் சொல் அவனை நிமிர்ந்து நிற்கவைத்தது. "தொழிலரசு வரும். வாழ்வு வளம் பெறும்" என்ற இந்த வார்த்தை அவன்

காதினில் பாய்ந்து நலிவுற்ற உள்ளத்தைப் புலிவுள்ளமாகச் செய்தது.'! இறந்து போகும் மனிதன் கூட எழுந்து உட்கார்ந்து போராட ஆரம்பித்தான்.

கம்யூனிஸ்ட் அறிக்கையை அடிப்படையாக வைத்துத் தொழிலாளர் இயக்கங்கள் உருப்பெற்றன. அது வெளிவந்த கால்நூற்றுண்டுக்குள்-1871-ல் பாரிஸ் நகரத் தொழிலாளாகள் புரட்சி செய்து, வரவாற்றிலேயே முதல்முறை யாகத் தொழிலாளர் அரசாங்கத்தை உண்டாக்கினர்கள். தொழிலாளரின் புரட்சிக் கொடி பறக்க ஆரம்பித்தது பாரிஸ் புரட்சி அடக்கப்பட்டு, தண்டிக்கும் முறையில் புரட்சி செய்த தொழிலாளரின் இரத்தம் சிந்தப்பட்ட போதிலும், தொழிலாளரின் புரட்சிக் கொடி-புரட்சி நம்பிக்கை, அழிக்கப் படவில்லை.

1905-ல் ருஷியாவில் தொழிலாளர் புரட்சிநடைபெற்றது. அதுவும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. கடைசியாக 1917-ல் நடந்த ருஷிய புரட்சியில் தொழிலாளர் வெற்றிபெற்றனர். தொழிலரசு வெற்றிபெற்றது, கம்யூனிஸ்ட் அறிக்கை வெற்றி பெற்றது.

அது தோன்றியதிலிருந்து ருஷியவில் வெற்றி பெறும்வரை கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு · அதன் கொளகைக்கு எவ்வளவு எவ்வளவு அடக்கு முறைகள்! தொழிலாளரிடமிருந்து அதைத் தடுக்க, அதன் கொள்கைகள் பரவாமலிருக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் எண்ணமுடியாதவை. மதம் முழு பலத்தையும் உபயோகித்துப் பார்த்தது. கர்த்தரின் கருணை வேண்டித் தொழுவதை விட்டு, கம்யூனிஸ்ட் அழிவை வேண்டிப் போப்பாண்டவர்கள பிரசாரம் செய்தனர். கம்யூனிஸ்ட்களும், சோஷியலிஸ்ட்களும் மனித சமூகத்திற்கும் கடவுளுக்கும் ஏற்பட்டுள்ள புதிய எதிரிகள் என்று 1849-ல் போப் பையஸ் உத்திரவுகள் கொடுத்தார். தனிப்பட்டச் சொத்துரிமை இயற்கையின் சட்டமென்றும் தொழிலாளர் சமதர்மத்தை ஆதரிக்கக் கூடாதென்றும் போப்லியோ என்பவர் 1891-ல் அலறினர். தொழிலாளரின் சம்பளத்தைப் பற்றி மதம் கவனித்துக் கொள்ளுமென்று 1931-ல் வட்டிகான் அரண்மனையில் வாழும் போப் அறிவித்தார். அதன் பரம்பரை இன்றும் தன் பலத்தை உடயோகப் படுத்தியபடிதான் இருக்கிறது.

அரசியல் அடக்கு முறைகள் சொல்லி முடியாதன. 1871-ல் நடந்த பாரிஸ் தொழிலாளர் புரட்சிக்குப் பின் பாரிஸ் நகா முழுவதும் புரட்சிக்குப் பாடுபட்ட தொழிலாளரின் பிணங்கள் வீசி யெறியடபட்டிருந்தன. 1905-ல் நடந்த ருஷியப் புரட்சிக்குப் பின் சைபிரியாவும் தூக்கு மேடைகளும் மார்க்ஸின் மாணவர்களால் நிரபப்பட்டன. 1917-ல் ருஷியப் புரட்சி வெற்றியடைந்த போதிலும் அதற்குத் தொல்லைகள் ஏற்படாமலில்லை. வெளிநாட்டு எதிர்ப்பும், உள்நாட்டுக் கலகங்களும் தொழிலாளரை தொலைத்து விடவே முயன்றன. கடைசியாக ஏகாதிபத்தியங்களின் ஆதரவில் நாசிசமும், பாசிசமும், வளர்ந்து தொழிலாளரின் அரசாங்கமாக விளங்கும் சோவியத் ருஷியாவை அழிக்க முயன்றன, உலகப் பெரும் போரில் தொழிலாளரின் சக்தி வெற்றி பெற்றது. முன்கண்டிராத அளவுக்கு மேலும் வளர்ந்துள்ளது.

1848-1948 ஒரு நூற்ருண்டு காலமாகிவிட்டது. மார்க்ஸ் கண்ட முடிபுகள் சரியானதல்ல, அவர் காட்டும் மார்க்கம் தவருனது என்று தர்க்க ரீதியில் வாதாட எவரும் இன்னும்முன்வரவில்லை. எனினும் அன்று அதிகார வர்க்கம் புதிய சக்தியைக் கண்டு மிரண்டதைப் போலவே, இன்றும் அதிகாரக் கூட்டம் பொது உடமை வளர்ச்சி கண்டு கலங்கி, பொதுவுடைமைக் கொள்கை பரவாதவாறு தடுக்க முற்படுகின்றன. அன்று ஜார், போப், அரச குடும்பங்கள், ராத்சைல்ட் போன்ற பணக்காரர்கள், அரசியல் வாதிகள், முதலாளிகள் அணி வகுத்து நின்றதைப் போலவே இன்றும் பொதுவுடமையை எதிர்த்து வேலை செய்ய முன்னணி ஏற்பட்டிருக்கின்றது. அன்று காற்றோட்டமில்லாத சிறு அறைகளில் தலைமறைவாகப் பொதுவுடை

மையைப்பற்றி சிறுசிறு கூட்டங்களாக கூடிப்பேசினார்கள். அந்தச்சிறு அமைப்பு மாறி, மார்க்ஸ் கொள்கையை நடைமுறையில் கொண்டுவரப் பாடுபடும் தொழில் அரசுகள் தோன்றி விட்டன. சோவியத்நாடுகள், போலந்து யூகோஸ்லேவியா, ருமேனியா, ஹங்கேரி, ஸெக்கோ போன்ற நாடுகளில்— உலகில் ஐந்தில் ஒரு பகுதியில் கம்யூனிஸ்ட் அறிக்கை வெற்றி அளித்துள்ளது. மற்ற இடங்களில் அதற்கான போராட்டங்கள் நடைபெற்றவண்ணமிருக்கின்றன.

பொதுவுடைமை பரவுவதைக் தடுக்க எவ்வளவ மார்ஷல் திட்டங்கள், ட்ருமன் அறிக்கைகள் அட்லியின் மிரட்டல்கள். பெவினின் பேச்சுகள் எதிர்ப்பு முன்னணிகள், ஏகாதிபத்ய கூக் குரல்கள் எழுப்பப்பட்ட போதிலும், பொது வுடைமைப்பரவித்தான் தீரும். உலகமெங்கும் மக்கள் உள்ள இடங்களிலெல்லாம் அணுகுண்டு —ஆயுதப் பெருக்கம், டாலர்— பீரங்கி இவைகளால் கொள்கையை அழித்து விடமுடியாது. இவைகளால் மற்றொரு சண்டை வரலாம். அதில் பொதுவுடைமையல்ல. முதலாளித்துவம்தான் அழியும்.

ஒரு நூற்றாண்டுக்குள் மார்க்ஸ் முதலாளித்துவத்தின் இயல்புகளைப்பற்றி கூறியவை நிரூபிக்கப்பட்டன. அதன் அழிவு காலத்தை நோக்கி அது விரைந்து போய்க்கொண்டிருக்கிறது. பயம்-தவிர்க்க முடியாத அழிவு அதன் முன் நிற்கின்றன. 1848ல் உள்ள ஆபத்தை அறிவித்த "பியாக்ரோ" என்ற

செப்புதல் கேட்பீர் ! — இந்தச்
செகத் தொழிலாளர்கள் மிகப்
பலர் ஆதலின்,
சுப்பல்களாக — இனித்
தொழும்பர்களாக மிதித்திட
வேண்டாம் !
இப்பொழுதே நீர் — பொது
இன்பம் விளைந்திட உங்களின்
சொத்தை
ஒப்படைப்பீரே — எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு
முன்பே
(ஒப்படைப்பீரே !)

அந்தப் பத்திரிகை 1948ல் உள்ள நிலையை விவரிக்கும்பொழுது "பஞ்சத்தைப்பற்றிய பயம் பஞ்சத்தை வளர்க்கிறது. நெருக்கடிபற்றிய பயம் நெருக்கடியை அதிகரிக்கச் செய்கிறது. எதையும் மறைத்துக்கொண்டு பயம் பெரியதாக இருக்கிறது. வறுமையைப் பார்த்து பயம், பாங்கு முறியுமோ என்ற பயம், உறுதியைக் கண்டு பயம், சண்டைவரும் என்ற பயம்!'' என்று குறிப்பிடுகிறது. இந்த பயம்தான் ஆதிக்கக்காரர்களின் ஆர்பாட்டங்களின் காரணமாக இருக்கிறது. அதிகமாக நடத்தப்படும் எதிர்ப்பு முதலாளிக் கூட்டத்தின் பலத்தை அல்ல, பல வீனத்தையும் பயத்தையும் காட்டுகிறது.

உலகமெங்கும் ஒவ்வொரு நாட்டிலும் இரு அமைப்புகள் போராடுகின்றன.

சிறுசிறு பிரிவுகள் மறைந்து, தன் உழைப்பினால் வாழ்பவன், பிறர் உழைப்பினால் வாழ்பவன் என்ற இருபெரும் பிரிவுகளுக்கும் போராட்டம்நடைபெறுகிறது. ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கு மல்ல, ஒவ்வொரு நாட்டுக்குள்ளேயே நடைபெறுகிறது. அமெரிக்காவில் அடிமைகள் வேலைசெய்யும் தோட்டத்திலிருந்து, சீனாவின் நீண்ட சுவர்களின் அருகே நடக்கும் யுத்த களங்கள் வரைப் போராட்டம் விரிந்திருக்கிறது.

பஞ்சம், பிணி, சண்டை, சச்சரவு இவைகளை வளர்த்துக்கொண்டே போகும் பழைய முறை வெகு நாளைக்கு நீடிக்காது. அது அழிக்கப்பட்டுதான் போகும். அழிந்துதான் தீரும். பழைய முறை அழிந்து, பாலை

வனம் போன்றிருக்கும் வாழ்வில் புது முறை ஒளி வீசியதும் புதுயுகம் எழும். புது வாழ்வு, மலரும். வறுமை அகன்று வாழ்க்கை வசதிகள் பெருகி, அனைவரும் கூடி ஆனந்தமாகக் கழிக்கும் இன்ப வாழ்வை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது தொழிலாளர் உலகம்! இந்தக் குறிக்கோளை அடைய வேண்டி, எண்ணியதை எடுத்துரைக்க முடியாமலும், செய்ய முயன்ற முயற்சிகளில் வெற்றி பெற முடியாமலும், ஏங்கி மடிந்த பாட்டாளிகளின் எலும்பு கூடுகளின் மேல் தோன்றி நிற்கும் புரட்சி உருவம், ஒளி வீசும் புதிய உலகத்தை எதிர் நோக்குகிறது. புதிய ஒளியைத் தன்னிருகையாலும் ஏந்திப்பிடிக்கத் தயாராகவுள்ளது. போராடிப் போராடி அதன் உடைகந்தலுடையாகி விட்டது. அதன் முகத்திலே ஆழ்ந்த கருத்தும், உறுதியான நம்பிக்கையும் படிந்திருக்கின்றன. ஒளியும் ஓரளவுக்கு வீச ஆரம்பித்து விட்டது. பசி, பிணி, பகை நீங்கிய அறிவொளி வீசுங் காலத்தை ஏழையர் உலகம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தக் காலந்தான் வெறுப்புணர்ச்சி மறைந்து அன்பு மொழி பயிலும் காலம். அப்படிப்பட்ட நிலையை உண்டாக்கி, இன்ப வாழ்க்கைக்கான வழி வகுப்பதே கம்யூனிஸ்ட் அறிக்கையின் அடிப்படை நோக்கமாகும்.



## ★ மே தினம் ★

1889-ல் பாரிசில் கூடிய இரண்டாவது சர்வ தேசிய தொழிலாளர் காங்கிரசில்தான் மே தினம் பற்றிய தீர்மானம் நிறைவேறியது. அதன்படி மே முதல் தேதி தொழிலாளிகளின் உரிமையை பாதுகாக்க பாட்டாளி மக்களை ஒன்று சேர்க்கும் நாளாக மாறியது. தொழிலாளர்கள் தங்கள் உரிமையை வற்புறுத்த ஆரம்பித்தது முதல் வர்க்கப் போராட்டம் ஆரம்பித்தது. அதன் பிறகு ஒவ்வொரு மே தினமும் முதலாளிகளின் அடக்கு முறைக்கு ஆளாகிய தொழிலாளர்களின் ரத்தக் கண்ணீரைத் தான் கண்டு கொண்டிருக்கிறது. பிரிட்டனில் மே மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை மே தினமாகக் கொண்டாடப்படுகிறது. ரஷ்யாவில் **"மே தினம்"** அரசாங்க விடுமுறை நாள்.



காரல் மார்க்ஸ்

# காரல் மார்க்ஸ் ★

இரா. செழியன்

பத்தொன்பதாவது நூற்றாண்டின் மத்தியில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட், தொழிற்சாலை விஷயத்தில் அதிக அக்கரை காட்டியது தொழிற்சாலைகளுக்குப்போய், அங்குள்ள நிலையைப் புள்ளி விவர ஆதாரங்களுடன் அரசாங்கத்துக்கு அறிவிக்க, மேற்பார்வை அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அத்திட்டத்தின்படி இங்கிலாந்து, ஸ்காட்லாந்து தொழிற்சாலைகளனைத்தும் கண்காணிக்கப்பட்டன. நேரிற் சென்று நிலையைக் கவனித்து, புள்ளி விவரங்களைச் சேகரித்து, அதிகாரிகள் அரசாங்கத்துக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கைகளை அரசாங்கம் வெளியிட்டபொழுது, ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட பல புத்தகங்களாக வெளிவந்தன. தொழிற்சாலை சட்டங்களுக்கு, அவை மிகவும் உதவியாயிருக்குமாதலால் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், பிரபுக்கள் சபையினர் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதி அனுப்பப்பட்டது. அவைகளை அங்கத்தினர்கள் சரியாகப்படித்திருந்தால், தொழிற்சாலைகளைப்பற்றிய நுணுக்கங்களையும், தொழில் முறைகளிலுள்ள வேறுபாடுகளையும் தெளிவாக அறிந்திருக்கலாம்.

பார்லிமெண்டில் தொழிற் சட்டங்கள் வருகிறநேரத்தில், தொழில்முறையிலுள்ள குற்றங் குறைகளை நீக்கி, தொழில் வளர்ச்சிக்கு வழிகோல உதவியாயிருந்திருக்கும். அங்கத்தினர்கள் பலருக்கும் அனுப்பப்பட்ட புத்தகங்கள், பலரால் படிக்கப்படவில்லை. நீல அட்டைகளில் வரும் அரசாங்க வெளியீடுகள், தொழிற் சாலைகளைப்பற்றிய புள்ளி விவரங்களைத் தரும் கனத்த புத்தகங்கள், சிந்துவாரற்றுச் செல்லரித்து மடிய விடப்பட்டன.

பிரபுக்களில் சிலர், அப்புத்தகங்களை உபயோகித்தனர். அப்புத்தகங்களைப் படித்து, நாட்டின் நிலையைக் கண்டு தொழிலுக்கு நன்மை செய்ய அல்ல; அனைத்தையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலினால் புத்தகங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. புத்தகம் என்றால் படிப்பதற்கு உபயோகப்படுவது என்றுதான் நினைப்போம். ஆனால் பிரபுக்கள் அக்கனத்த புத்தகங்களை வேறு வழிகளில் உபயோகப்படுத்தினார்கள். மேஜையின் மேல் அப்புத்தகங்களை அடுக்கிவைத்து விட்டு, தூரத்தில் நின்று சுடுவார்களாம்! ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டும் எவ்வளவு பக்கங்களைத் துளைத்திருக்கிறது என்று கணக்கிட்டு, அதன் பலத்தை நிர்ணயிப்பார்களாம்! அரசாங்கத்தின் வெளியீடுகள் பொழுது போக்குக்காகப் பயன்படுத்தப்பட்டன.

மற்றும் சிலர், தங்களிடம் வந்த புத்தகங்களை வேறு வழிகளில் பயன்படுத்தினார்கள். பழங்காகிதக் காரனிடம் நிறுத்துப் போட்டு, எடையின் கணக்குப்படி பணம் வாங்கிக் கொண்டார்கள். இவ்வாறு ஏறத்தாழ மூன்று விதங்களில், அரசாங்கத்துப் புள்ளி விவரங்கள் பயன் பட்டன. செல்லரித்து அழிந்ததும், துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப் பட்டதும், பழங்காகிதமாக மாற்றப் பட்டதுமாக இவ்வழிகளில் புத்தகங்கள் பயன் படாது போயின. புத்தகத்தின் மதிப்பு

குண்டு துளைப்பதிலும், எடை நிறுப்பதிலுமே கணக்கிடப்பட்டது.

புத்தகக் கடைக்காரனிடம் பழங்காகிதமாகப் போன புத்தகங்கள், புழுதி படிந்து கிடந்தன. எவரும் அவற்றை ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை. தொழிலாளர் நிலையைப் போலவே, தொழிலாளர் நிலையைப் பற்றிய புத்தகங்களும் மங்கி எப்பொதும் கவனிப்பாரற்றுக் கிடந்தன. லண்டன் நகரத்தில் பழைய புத்தகக் கடையொன்றில், அத்தகைய புத்தகங்கள் அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருந்தன. தூசிபடிந்த அப்புத்தக அடுக்குகள் பக்கம் போகவே எவரும் விரும்பவில்லை. கடையில் இருக்கும் அனாவசியமான குப்பைக் கூளமாகவே அவை இருந்தன. புத்தகங்களைப் பார்க்க வந்த ஒருவர், அவற்றைப் புரட்டினார். அவரது செய்கைக் கடைக்காரனுக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது. தூசு கையில் ஒட்டிக் கொள்ளும் என்று எவரும் அவற்றைத் தொடுவதில்லை. அவை வேண்டுமென்றால் கூட எடை போட்டுப் பார்ப்பார்களே யொழியடன் என்ன இருக்கிறது என்று, எவரும் புரட்டிப் பார்த்ததில்லை. புரட்டிப் பார்த்தால் கூட தொழிற்சாலைகளின் வேலையாட்கள், வேலை நேரம், கூலி, தகராறுகள் இப்படியாக, இரண்டு மூன்று பக்கங்கள் படித்தாலே பசிவந்துவிடும் விதத்தில் புத்தகங்கள் இருக்கும். அன்று பார்த்தவர் புத்தகங்களின் மீதிருந்த புழுதியைத் துடைத்து, பக்கங்களைப் புரட்டியதால் களைப்படைந்துவிடவில்லை. மாறாக உள்கிடைத்த விவரங்களைக் கண்டு களிப்படைந்தார். ஏதோ விலைகூறி, அப்புத்தகங்களை அவர் தலையில் கடைக்காரன் கட்டினான். வந்தவரும் அப்புத்தகங்களைச் சுமந்து சென்றார். புத்தகங்களை எடுத்துச் சென்றவர், தொழிலாளர் நிலைபற்றிய புத்தகங்கள் மீது படிந்திருந்த தூசியைத்தட்டி, உள்பக்கங்களைப் புரட்டி, கருத்துக்களை அறியத் தொடங்கினாரோ, அவ்வாறே தொழிலாளரின் வாழ்வின் மீது படிந்திருந்த துன்பத்தைத் துடைக்க முன்வந்தார். தூங்கும் உள்ளங்களைப் புரட்டி, தன் ஆராய்ச்சிமூலம் புதிய கருத்துக்களைக் கண்டவர். அவர் யாரென்று கடைக்காரனுக்குத் தெரிந்திருக்காது.

அவர்தான் காரல் மார்க்ஸ். வறுமை என்னும் செல்லரித்து, பழமை எனும் புழுதி படிந்து, கொடுமை எனும் குண்டுகளால் துளைக்கப்பட்டு, சாய்ந்த சமூகத் தராசில் அற்பத் தொகைக்கு விற்கப்பட்ட தொழிலாளர் வாழ்வு காரல் மார்க்ஸால் தான் கண்டு பிடிக்கப்பட்டது.

“தளராது உழைக்குந் தன்மையைப் பெற்றவனே பேரறிஞன்.” இந்தவாசகம் மார்க்ஸ் வரலாற்றுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. தான் எடுத்துக் கொண்ட ஆராய்ச்சியில், இடைவிடாது அவர் ஈடுபட்டிருந்தார். அதற்கு வேண்டியிருந்த ஆயிரக் கணக்கான குறிப்புகளை அவரே தேடிப் பிடித்தார். மார்க்ஸ் நுனிப்புல் மேய்பவரல்ல. பயன்படும் என்று காணப்படும் எதையும் ஒன்று கூட விடாமல் படித்து, முக்கியபகுதிகளுக்குக் குறிப்பு எடுத்துக்கொள்வார். சிறு குறிப்பு என்றால்கூட, அதன் உபயோகம் அவருக்குத்தான் தெரிந்தது. ஆதாரமற்ற எதையும் முடிவாக விட்டுவிடுவதில்லை. மேலும் தன் கருத்துக்களை விஞ்ஞான முறையில் நிரூபித்தார். வரையறுத்து உறுதியாகக் கூற முடியாத எதையும், அவர் தன் புத்தகங்களில் சேர்த்ததில்லை. விபரங்களும், ஆதாரங்களும் கிடைக்கும்வரை பாடுபடுவார். எழுதிய பிறகும்கூட முன்னும் பின்னும் திருத்தி, தன் கருத்தைத் தெளிவு படுத்தியபடி இருப்பார்.

அவரைப்போல் சலியாது உழைத்தவர்கள் வேறு எவரும் இருந்திருக்க முடியாது. மாலை நேரத்தில், தன் நண்பர்களைச் சந்தித்த பிறகும், கூட்டங்கள் முடிந்த பிறகும், மார்க்ஸ் தன் அறையில் உட்கார்ந்து தன் வேலையில் ஈடுபட்டுவிடுவார். இரவில் நெடுநேரம் வரைபடிப்பது, குறிப்புகள் எடுப்பது, எழுதுவது, என்று ஓய்வின்றி இருப்பார். இரவில் இரண்டு, மூன்று

மணிக்கு மேல்தான் உறங்கப்போவார். அதுவும் தான் எடுத்துக்கொண்ட வேலையில் திருப்திகரமாக ஏதாவது முடிந்தால்தான். சிலசமயங்களில்நேரம் போனதுகூடத் தெரியாமல் வேலை செய்துகொண்டிருப்பார். காலையில் வெளிச்சம் ஆரம்பித்ததும் தான், பொழுதுவிடிந்தது அவருக்குத்தெரியும் அவ்வாறு இரவு முழுவதும் ஆராய்ச்சியில் ஆழ்ந்து விட்டு, பொழுது விடிந்ததும் உறங்கப் போவது அவருக்குப் பழக்கமாகிவிட்டது. ஒவ்வொரு நாட்டிலிருந்தும், மற்றொரு நாட்டுக்கு நாடோடியாக நுழைந்து, யாரென்று தெரியாமல் வாழநேர்ந்த காலங்களில், நகலில் எழுதிப் படிப்பதைக் குறைத்து, இரவில் இரண்டு மூன்று மணி நேரங்கள் ஆராய்ச்சிக்காக ஒதுக்கினார். இரண்டு மணி நேரம் என்பது வளர்ந்து இரவு பூராவுமே கண் விழித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமும் பழக்கமும் அவருக்கு உண்டாயின. இடைவிடாத உழைப்பும், தக்க வசதிகளின்மையும், அவரது உடல் நலத்தை அழித்தன, அவரைச்சோவியத்டாக்டர் நீண்ட நேர உழைப்பை விடுத்து, தக்க ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறினர். அதன்படி மார்க்ஸ் சில நாட்கள் தன்வேலையை நிறுத்தி, உலவிவருவதும் ஓய்வு எடுப்பதுமாக இருப்பார். உடல் நிலைசிறிது பலமடைந்ததும், பழையபடி திடீரென்று வேகமாக வேலைசெய்ய ஆரம்பித்து விடுவார்.

அவரைப் போல் தொடர்ந்து, சிறிது கூட அலுக்காமல் ஆராய்ந்தவர்கள் மிகச் சிலரே இருந்திருப்பார்கள் சிறு பகுதி என்றால்கூட அதற்காகத் தன் உழைப்பைக் குறைத்துக் கொள்வதில்லை. அதற்கான ஆராய்ச்சி நூல்களையும், விவரங்களையும் முழுதும் கற்றுத் தேர்ந்தபின் தன் முடிவை எழுத முற்படுவார். சிறந்த ஆராய்ச்சிக்கும், அவரது கடினமான உழைப்புக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவது அவர் எழுதிய "கேப்பிட்டல்" (மூலதனம்) என்ற புத்தகமாகும். அதில் எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியமும், சிறு முடிவுகூட ஆதாரமின்றி ஆராய்ச்சியின்றி, எழுதப்பட்டதல்ல. உதாரணமாக, "மூலதனம்" என்று அவரது நூலில் இங்கிலீஷ்தொழிற்சாலைகளைப் பற்றி 20 பக்கங்களே வருகின்றன அந்த 20 பக்கங்களை உருவாக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சி அளவிடற்கரியது. இங்கிலீஷ் தொழிற்சாலைகளைப் பற்றி அரசாங்கத்தார்வெளியிட்டிருந்த அறிக்கைகளை விடாமல் படித்து, அதைப் பற்றிய வேறு புத்தகங்களையும் நூற்றுக் கணக்கில் படித்தார். கடைசியில் தன் நீண்ட புத்தகத்தில் 20 பக்கங்களே எழுதினார். அதற்கு ஆயிரக்கணக்கான பக்கங்களைப் புரட்டியபின் தான் அசைக்க முடியாதன் முடிவுகளை உண்டாக்கினார்.

நீண்ட காலமாக இருக்க வீடின்றி உழைத்ததால், அவரது உடற்கட்டு சிதைந்தது, ஈரல் கோளாறு ஏற்பட்டு, வயிற்றில் புண் ஏற்பட்டது. கடைசிக் காலத்தில், டாக்டர்கள் இரவில் உழைப்பது கூடாது என்று

> எல்லார்க்கு மெல்லாம் என்றிருப் பதான
> இடம்நோக்கி நடக்கின்றது இவ்வையம்;
> கல்லாரும் அங்கில்லை; கல்விநல்காதக் கசடருக்குத்
> தூக்குமரம் அங்கே உண்டாம்;
> இல்லாரும் அங்கில்லை; பிறன்நலத்தை எனதென்று
> தனியொருவன் சொல்லான் அங்கே;
> நல்லாரே எல்லாரும் அவ்வையத்தில், நமக்கென்ன
> கிழியட்டும் பழம்பஞ் சாங்கம்!"
>
> —புரட்சிக் கவிஞர்.

தடுத்தனர். பின் இரவில் நீண்ட நேரம் கண்விழிப்பதை நிறுத்தினார். இருந்தபோதிலும், பகலில் தன் முழு வேலையையும் செய்ய ஆரம்பித்தார். சலியாத உழைப்பு, அதே அவரைக் கொன்றுவிட்டது என்னலாம். அதிக உழைப்பின்றி கவனமாயிருந்தால் மார்க்ஸ் இன்னும் நீண்ட காலம் ஆயுள் பெற்றிருக்கலாம்.

“மூலதனம்” என்ற புத்தகத்தை எழுதிமுடிக்க நீண்டகாலம் உழைத்தார். கொஞ்ச நஞ்சமல்ல, நாற்பதாண்டுகள்! நாற்பதாண்டு உழைப்பில் “மூலதனம்” உருப்பெற்றது. அவருடைய ஆராய்ச்சித் திறமையின் அழியாச்சின்னம். வரலாறு பொருளாதாரம் என்பவைகளில் முதலாவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சியின் ஆரம்பம்- தொழிலாளியின் நலனுக்கும், நம்பிக்கைக்கும் மூலதனமாக விளங்குவது மூலதனமேயாகும். தொழிலாளர் வரலாற்றில் மார்க்ஸின் முன், மார்க்ஸின் பின் என்று கால வரையறையே இரண்டாகப் பிரித்து எண்ணப்படுகிறது. மார்க்ஸிசத்தை வெறுப்பவர்கள் கூட, அவர் நூலில் காட்டப்பட்டுள்ள எந்தப் பகுதியையும் சுட்டிக்காட்டி தவறு என்று கூறிவிட முடியாது. அவ்வளவு தர்க்க ரீதியில், விஞ்ஞான முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

உலகப் பேரறிஞர்; மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல் முடித்தார்; நாற்பதாண்டுகள் உழைத்தார்; எனினும் பெரும் ஆராய்ச்சி செல்வத்தை அளித்தபோதிலும், வசதிகளற்ற வாழ்விலேயே அவர் உழன்றார். வறுமையில் வாடினார். பத்திரிகைகளுக்கு எழுதி அவர் பெற்ற ஊதியமும், அவரது இனிய நண்பர் ஏங்கெல்ஸ் அளித்த பதவியுமே அவரைப் பாதுகாத்தன.

நாற்பதாண்டுகள் உழைத்தார்! நாற்பதாண்டுகள் உழன்றார்! தொழிலாளர் இயக்கத்தின் தலைவராக விளங்கியதால் மட்டுமல்ல, உழைப்பில் எந்த உழைப்பாளியையும் மிஞ்சும் விதத்தில் இருந்தது. ஆனால் ஊதியமோ மிக மோசமான நிலையிலிருந்த தொழிலாளியின் தாழ்ந்த கூலியை விடக் குறைவாயிருந்தது. உழைப்பு, ஊதியம் என்பவைகளைப் பற்றி நீண்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டார், அவரது உழைப்பும், வருவாயுமே ஒன்றோடொன்று ஆராய முடியாதபடி மோதின. ‘மூலதனம்’ எனும் பெரும் செல்வத்தை அவர் உலகுக்கு அளித்தார். அவருக்கு உலகு அளித்தது வறுமை “நான் எழுதும் பொழுது உபயோகித்த புகையிலைக்குச் செலவிட்டபணம் கூட காப்பிடல் (மூலதனம்) எனக்குத்திரும்பத்தராது” என்று மார்க்ஸ் ஒருமுறை கூறினார்.

சலியாத உழைப்பு, கடுமையான ஆராய்ச்சி, அசைந்து கொடுக்காத கொள்கை, தோல்வியைக் கண்டு தயங்காத முயற்சி இவைகளே மார்க்ஸ் ஆராய்ச்சிகளைப் படிக்கும் பொழுது அவரைப் பற்றி நமக்குத் தெரிவன. புன்னகை தவழும் முகம், கண்களில் நீர் பெருக சிரித்துப் பேசும் இயல்பு, கனிந்த இரக்க மனப்பான்மை, எவரிடமும் அன்பு பாராட்டும் இதயம் இவைகளும் மார்க்ஸிடம் இருந்தன.

சிறு குழந்தைகளென்றால், மார்க்ஸுக்கும் பிரியமதிகம். அவர்களுடன் விளையாடுவதே பொழுது போக்காக இருந்தது. அவருடைய பெண் மக்களுக்கு அவரே விளையாட்டுத்தோழராயிருந்தார். அவர்களும் அவரை ஆழ்ந்த அன்புடன் நேசித்ததோடு, சமமாகவே பாவித்தனர். அவருடைய மக்கள் “அப்பா” என்றுகூட அழைப்பதில்லை. “மூர்” என்று அழைத்தனர். சுருண்ட மயிர், பரந்ததாடி, கறுத்த நிறம் இவைகள் மூர்வகுப்பினருக்கு இருப்பதைப்போலிருந்ததால், அவரை “மூர்” என்று குழந்தைகள் அழைத்தனர். நாளடைவில் அதுவே குடும்பப் பெயராகி நெருங்கிய நண்பர்களும் அவரை மூர் என்று குறிப்பிட்டனர். ஆனால், தொழிலாளர் இயக்கத் தலைவர்களும், அதில் ஈடுபட்டவர்களும் மார்க்ஸை தந்தை என்றே குறிப்பிட்டனர்.

விடுமுறை நாட்கள் வந்தால் குழந்தைகள் மார்க்ஸை சூழ்ந்து

கொண்டு, அறையிலிருந்து வெளியே இழுத்து வருவார்கள். பின் குழந்தைகளுடன் அவரும் விளையாட ஆரம்பித்துவிடுவார். காகிதத்தால் கப்பல்கள் செய்து தண்ணீர்த் தொட்டியில் மிதக்கவிடுவார்கள். கப்பல்கள் அதிகமானதும் கப்பற் சண்டை உண்டாகும் ஒருவர் கப்பலை மற்றவர்கள் எரிக்க தொடங்குவார்கள் தண்ணீர்த் தொட்டியைச் சுற்றி எல்லோரும் களிப்புடன் கப்பற் சண்டையைக் கவனித்தப்படி இருப்பார்கள். அவர்களில் அதிகமாகச் சிரித்து சத்தம் உண்டாக்குவது மார்க்ஸாகத்தான் இருக்கும்.

மாலையில் அதிகக் குளிர் இல்லாவிட்டால், நண்பர்களுடனும், குடும்பத்துடனும் மார்க்ஸ் வெளியே உலவப் போவார். வழி நெடுக சிரித்துப் பேசுவது, குழந்தைகளுக்குக்கதை சொல்லுவது, பெரும்புலவர்களின் பாட்டுக்களை மனப்பாடமாக பாடுவது முதலியவை மூலம், தன்னைச் சூழ்ந்து களிப்பைப் பரப்பி செல்வார். கூட்டமாக உட்கார வேண்டிய மைதானம் வந்ததும், குழந்தைகளின் குதிரை விளையாட்டு ஆரம்பமாகும். மார்க்ஸ் குதிரையைப்போல் மண்டியிட்டுக்கொண்டதும், அவருடைய மகள் ஒருத்தி அவர் முதுகில் ஏறி உட்கார்ந்துகொள்வாள். எதிர்ப்புறத்தில் அவருடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவரான லீப்னெக்ட் என்பவர் முதுகில் மற்றொரு மகள் உட்கார்ந்ததும் குதிரைச் சண்டை ஆரம்பமாகும். குதிரை வீரர்கள் சத்தம் கொடுத்ததும், "குதிரைகள்" கனைத்துக்கொண்டு தாவித் தாவி ஒன்றோடொன்று மோதும். தாக்குதல் ஆரம்பமானதும், குழந்தைகள் சத்தம்போடுவதுடன் பக்கத்திலிருக்கும்நண்பர்களும் இரு கட்சியாகப் பிரிந்து சத்தம் போடுவார்கள். ஆரவாரம் அதிகரிக்கும். அவர் பெண்கள் பெரியவர்களான பின், வேறு குழந்தைகளும், பின் பேரன் மார்களும் அவருடன் விளையாடினார்கள். பேரன்மார்களும் குதிரை விளையாட்டு விளையாடும் பொழுது அவருடைய நண்பர் எங்கெல்சும் குதிரையாக ஆக்கப்பட்டார். மார்க்ஸ், எங்கெல்ஸ், லீப்னெக்ட் மூவரும் குதிரையைப் போல மண்டியிட்டு விளையாடுவதைப் பார்த்தால் ஒருவருக்கு ஆச்சரியமாகத் தானிருக்கும். தன் நாட்டில் மார்க்ஸ் இருப்பது ஆபத்துஎன்று பயந்து, ஜெர்மன அவரை நாடு கடத்தியது.

தீவிர வாதியென்று பெல்ஜியம் அவரை உள்ளே வைத்துக் கொள்ள மறுத்தது. 1848-ல் பிரான்சில் நடந்த புரட்சிக்கு அவர்தான் காரணமென்று பிரெஞ்சு அரசாங்கம் கருதியது. அவரது முயற்சிகளுக்கு ஒத்துழைத்தவர் ஏங்கெல்ஸ் லீப்னெக்ட் என்பவர். ஜெர்மன் பொதுவுடமை இயக்கத்தில் தலைவராக இருந்தவர். அரசாங்கங்கள் கண்டு மிரண்ட இம்மூவரும் குழந்தைகளுக்காக மண்டியிட்டனர்.

மார்க்ஸின் குடும்பத்தில் ஒருவராகவே ஏங்கெல்ஸூம் பழகினார். குடும்பத்திலிருந்த குழந்தைகளும் அவரைத் தந்தையைப் போலவே மதித்து அன்பு பாராட்டினர்கள்.

மார்க்ஸின் குடும்பத்தில் சர்வாதிகாரம் செலுத்தியது லென்சென் என்ற பெண்மணியாகும். முதலில் மார்க்ஸின் மனைவி வீட்டில். வேலைக்காரியாக இருந்தவள். மார்க்ஸ் ஜெர்மனியை விட்டு வெளி நாட்டுக்குப் போகவேண்டியிருந்த பொழுது, அவர்களை விட்டுத் தனித்து வாழப் பிரியமின்றி அவர்களுடன் அயல் நாட்டுக்கு வந்தாள். போகப் போக மார்க்ஸ் குடும்பத்தில் ஒருத்தியாகவே ஆனாள். பார்க்கப் போனால் அந்தக் குடும்பத்திலனைவரும், மார்க்ஸ் உட்பட, லென்செனுக்கு கட்டுப்பட்டே நடந்தார்கள், குழந்தைகளைத் தாய்போல் பாதுகாத்துவளர்த்தாள். வெளியுலகுக்குச் சிங்கம்போலிருந்த போதிலும், மார்க்ஸ் அவளிடம் அடங்க வேண்டியிருந்தது. மார்க்ஸ் அவருடைய வேலையில் ஆழ்ந்திருக்கும்பொழுது பக்கத்தில் போய் அவரை அழைக்க எவரும் அஞ்சுவார். அந்தச் சமயத்தில் லென்சென் ஒருத்தியால் தான், மார்க்ஸைக் கட்டுப்படுத்தி அழைத்துவர முடியும். அலுத்துக் கொண்டு எவ்வளவு சத்தம் போட்ட போதிலும், மார்க்ஸ் அவளிடமிருந்து

தப்பமுடிவதில்லை. கடைசியில் எழுந்து அவள் சொற்படி கேட்பார். சிஙகத்தை அதன் குகையிலேயே லென்சென் அடக்கினாள். முதலில் சிங்கம் உறுமிய போதிலும் அவள் அதட்டியபின் ஆட்டுக் குட்டியைப் போல் அடங்கிவிடும்.

குடும்பத்திலும், நண்பாகளிடையும் மாாக்ஸ்வாழ்வு இன்பமாகக்கழிந்திருக்கும், வேறு தொல்லைகள் குறுக்கிடாதிருந்தால். வசதிக்குறைவால் அல்லற்பட்ட வாழ்வும், ஐரோப்பிய நாடுகளில் எங்கும் தங்க முடியாது, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிறகு அலைந்தோடிய நாடோடி வாழ்வும் துன்பத்தையே கொடுத்தன. அவரது கட்டுரைகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும், கண்டனஙகள வந்து கொண்டிருந்தன. 'மூலதனம்' என்ற நூல் வெளிவந்ததும்தான், அவர் பெயர் அசைக்க முடியாததாகியது. அவர் எண்ணப்படி, உலகத்தொழிலாளா அமைப்பு உண்டாகி, மார்க்ஸ் கொள்கைகள், அதில் ஒபபுக்கொள்ளப்பட்டன. தொழிலாளர் கூட்டுறவும், சமதர்ம நோக்கமும் பரவின. 1871-ல் பாரிசில் புரட்சி ஏற்பட்டு முதல் முறையாகத் தொழிலாளா, ஆட்சியைக் கைப்பற்றினார்.

"மூலதனம்" என்ற நூலில் முதல் பகுதிதான் மார்க்ஸ் காலத்தில் வெளிவநதது. தொழிலாளர் போராட்டங்களில் அதிகத் தொடர்பு பூண்டதால், மார்க்ஸால்மறுபகுதியையும்வெளியிட முடியவில்லை. மேலும் அவருடைய மனைவியும், மூத்தமகளும் இறந்தனர். அதனால் மார்க்ஸ் மிகவும் மனமொடிந்து போனார். இருந்தபோதிலும் தன் வேலையை மறநது விடவில்லை. "மூலதனம்" என்ற நூலின் இரண்டாவது பகுதியை முடித்துவிட விரும்பினார். உடல் நிலை தளர்ந்து போயிருந்ததால் வெளிநாட்டுக்கு ஓய்வெடுக்கப் போனார். மறுபடியும் லண்டனுக்குத் திருமப வந்ததும் உடல் நிலை திருந்தவில்லை.

1883 மார்ச்சு 14 ல் அவருடைய 65 வது வயதில் இறந்தார். அவர் வாழ்ந்ததைப் போலவே அவருடைய முடிவும் இருந்தது. புத்தகங்களும், குறிபபுகளும் மிகுந்திருக்கும் மேஜைக்கு எதிரில், அவா எழுதும்போது உட்காரும நாற்காலியில் அமர்ந்து, களைப்பினால் உறங்கும்பொழுது அப்படியே இறந்துவிட்டார்.

ஹைகேட் என்ற இடத்தில், ஆடம்பரமற்ற முறையில், மார்க்ஸ் குடும்பத்தினரின் புதைகுழி இருக்கிறது. அந்த இடத்தில் மாாகஸ் குடும்பத்தைச் சோந்த, நால்வர் புதைககப்பட்டிருக்கின்றனர். அந்தப் பெயர்களைப் படிக்கும் பொழுது வாழ்ந்தபோது அவர்கள காட்டிய உறுதியும், உழைப்பும், அன்பும், தன்னலமற்ற தன்மையும் ஞாபகத்துக்கு வரும.

காரல் மார்க்ஸின் மனைவி ஜென்னி வான் வெஸ்ட்பாலன், காரல் மாாக்ஸ், மார்க்ஸின் பேரனான ஹாரிலாங்கே, ஹெலன் டிமத் என்ற நால்வரும் அங்கு புதைககப்பட்டிருக்கின்றனர். கடைசியாகக் கூறப்பட்ட ஹெலன்டிமத் என்பவள் தான், லென்சென் என அழைக்கப்பட்டவள்.

மார்க்ஸ் குடும்பத்தில் பிறக்காவிட்டாலும், இரத்தத்தைவிட இதயத்தினால் அதிகமாகப பிணைக்கப்பட்டு, ஆரம்ப முதல் மாாக்ஸ் குடும்பத்தில் கலந்து, வயதுவந்து வசிகர மஙகையாகி மதிப்பும் செல்வமும் அவளைத் தேடி வந்த காலத்திலும், மணஞ்செய்து கொள்ளமறுத்து, மார்க்ஸ்குடுமபத்தின் ஏற்றத் தாழ்வுகளையும், இனபதுனபங்களையும் ஏற்று, அவா குடும்பத்தை நடத்திவந்த அன்பு மங்கை லென்செ ன், மாாக்ஸ் குடும்பத்தில், ஒருத்தியாகக் கருதப்பட்டதில் ஆச்சரியமில்லை.

# மே தினம் - ஓர் எச்சரிக்கை

[ கோவை இளஞ்சேரன் ]

1. படுக்கைக்கே ஓய்வளித்து மச்சா னோடு
பண்ணைக்கே வாழ்வளிப்பாள். அவள்வாழ் விற்கோ
வடுக்களையே பரிசாகப் பெற்றி ருப்பாள்.
வளமெல்லாம் படைத்திடினு முரிமை யின்றி,
அடுப்பினிலே நெருப்பேற்ற வகையு மின்றி,
அடிவயிற்றில் நெருப்பேற்றி அயரும் நாளில்
"அடுக்காது கொடுமை" யென அலறு கின்ற
அந்நாளில் மேதினத்தின் வாடை வீசும்.

2. கரம்பையினைப் பண்படுத்திக் கழனியாக்கிக்
கணக்கில்லாப் பொருள்குவித்த நாங்க ளெல்லாம்
நிரம்பாத மூளிகளாய் நலியும் போதில்
நலியாத உடலமைந்த நீவிர், சில்லோர்,
வரம்பில்லாச் சுவைபெறுதல் 'ஏன்? ஏன்?' என்றே
வல்லுழவர் கேட்டுவிடின் தளர்ந்த அன்னார்
நரம்பெல்லாம் முறுக்கேறித் துடித்துப் போகும்,
அத்துடிப்பே மேதினமாய் வெடித்துப் போகும்.

3. பல்லிளித்து வந்தவர்கள் பதவி பெற்றுப்
பழையவரைச் சுரண்டலோடு தாழ்த்துகின்றப்,
பொல்லாங்கு தீரத்தன் நாடு வேண்டிப்
பொங்கியெழுந் திராவிடரின் கிளர்ச்சி யெல்லாம்
வெல்லவரும் மேதினத்தின் மறுப திப்பாம்!
வளநாட்டை ஆள்வந்தீர்! திராவிடர்கள்
சொல்லுகின்ற மேதினத்தின் செய்தி உங்கள்
செயலுக்கே எச்சரிக்கைச் செய்தியாகும்!

4. அடிபட்டுத் தாழ்வடைந்த மக்கள் வாழ்வை
அமைப்பதற்கே யரசமன்றஞ் சென்ற நீங்கள்
பொடிப்பட்டைப், புகைச்சுருட்டு குறட்டை பற்றிப்
பொருளற்ற வாதங்கள் புரிந்தீ ரன்றி
மிடிபட்ட மக்களை நீர் நினைத்த துண்டோ?
மெலிந்தவர்கள் தம்முரிமை தாமே கொள்ளக்
கொடிபோட்டுக் கிளம்புகையிற் கொதிக்கின் றீரே!
கொதித்திட்டா லவரெழுச்சி மங்கிப் போமோ?

5. சிறையிட்டால் குறைதவிர்க்கு மெங்கள் வாழ்வின்
குறையீட்டைத் தகர்த்திடுமின்! என்றுழைப்போர்
அறைகூவி நெஞ்சமுங்கிக் கூறு கின்ற
முறையீட்டைப் புறக்கணித்தல் மடமை யாகும்!
முறையீடு முறைப்பாடாய் மாறிப் பின்னர்
முறைப்பாடுந் தாக்குதாய் மாறிப் போனால்
சிறையீட்டின் தலையீடு செல்லா தாகும்
சொல்லிவைத்தோம்! மேதினந்தான் வெற்றி சூடும்!

# தொழிலாளர் அணிவகுப்பு

( செசானே )

*சர்வ தேசீயத் தொழிலாளர் இயக்கங்கள் எப்படித் தோன்றின? அதன் அடிப்படை என்ன? அதன் முழு வரலாறு, இவைகளை விளக்க எழுந்ததே இக் கட்டுரை.*

உலகச் சரித்திரத்தில் 18-வது நூற்றாண்டின் இறுதி காலம் குறிப்பிடத் தக்கது. வீட்டிற்கொரு இராட்டினமும், கட்டுப் பஞ்சும் வைத்துக்கொண்டு நாளுக்கொரு முழம் துணி தயாரித்துக் கொண்டிருந்த நிலை ஒழிந்து, ஒரே நாளில் ஆயிரக் கணக்கான கெஜம் நீளமுள்ள துணிகளை தயாரிக்கக் கூடிய இயந்திரங்களைக் கண்டு பிடித்தனர். குடிசைத் தொழில் முறை அகற்றப்பட்டு, தொழிற்சாலை முறை வளர ஆரம்பித்தது, நெசவு இயந்திரங்களும், மற்றும் பல இயந்திரங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இயந்திரங்களை வாங்கி ஆலைகளை உண்டாக்கும் பணியை பிரபுக்கள் செய்தனர். தனிப்பட்ட மனிதன் தன் தேவைக்கேற்ற அளவு உற்பத்தி செய்யும் வழக்கம் போய்விட்டது. ஒரே நாளில் பல தொழிலாளர்கள் சேர்ந்து புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட இயந்திரங்கள் மூலம் அதிகமான அளவுக்குச் சாமான்களை உற்பத்தி செய்தனர்.

குடிசைத் தொழில் ஒழிந்து ஆலைத் தொழில் ஏற்பட்ட இந்த மாறுதலுக்குத் தான் "தொழிற் புரட்சி" என்று பெயர்.

தொழிற் புரட்சி ஏற்பட்ட பிறகு தான் தொழிலாளி-முதலாளி என்ற வர்க்கம் தெளிவாக ஏற்பட்டது. உழைக்க ஓர் கூட்டம், உழைப்பின் பலனை அனுபவிக்க ஓர் கூட்டம் என்ற நிலை உண்டாகியது. ஐரோப்பிய தேசங்கள் ஒவ்வொன்றிலும் தொழிற்சாலைகள் பெருகின. உற்பத்தியும் அதிகமாயிற்று. குறைந்த நேரத்தில் மிகக் குறைந்த உழைப்பைக் கொண்டு குடிசைத் தொழிலாளர்கள் தயாரித்ததை விட பண்மடங்கு அதிகமான பண்டங்களை ஆலை முதலாளிகள் தயாரித்தனர். அதனால் அவர்கள் குறைந்த விலையில் பண்டங்களை விற்க முடிந்தது. இது குடிசைத் தொழிலுக்கு பேரிடியாகியது. மக்கள் குறைந்த விலையில் விற்கும் ஆலை சாமானை வாங்கினரே தவிர, குடிசைத் தொழிலாளர் தயாரித்த பொருள்களை திரும்பிப் பார்க்கவும் மறுத்தனர். இதனால் பரம்பரையாக குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் பாடு திண்டாட்டமாயிற்று. ஆலையுடன் போட்டிபோடக் கூடிய அளவுக்குக் குறைந்த விலைக்குப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டியவர்களானார்கள். இது முடியாத காரியம். ஆகவே தொழிற் புரட்சி ஏற்பட்ட சில ஆண்டுகளுக்கெல்லாம் குடிசைத் தொழில் செய்து வந்தவர்களிடையே பெரும் மாறுதல் ஏற்பட்டது. அவர்கள் தனிப்பட்ட முறையில் ஆலைகள் ஆரம்பிக்க இயலாதவர்கள். ஆகவே அவர்களும் தொழிற்சாலைகளில் கூலியாகச்சென்றார்கள். இந்த மாறுதல் ஏற்பட்ட பிறகு தொழிலாளி,

முதலாளி என்ற இரண்டு வர்க்கம் எல்லா தேசங்களிலும் ஏற்பட்டது. இதற்கிடையில் 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் புகை வண்டி கண்டு பிடிக்கப்பட்டு பழக்கத்திற்கு வந்து விட்டது. இதனால் ஒரு தேசத்திற்கும், மற்றொரு தேசத்திற்குமிருந்த தொடர்பு அதிகமாகியது. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குத் தேவையான முக்கிய பொருள்களை சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இந்த பண்டமாற்று வியாபாரத்தைச் சுலபமாக முதலாளிகள் செய்தனர். முதலாளி வர்க்கம் வளர வளர உலக முதலாளிகளுக்குள் சுலபமாக ஒற்றுமை ஏற்பட்டது.

தொழிலாளியிடமிருந்து எந்த அளவு வேலை பெற முடியுமோ, அவ்வளவையும் முதலாளிகள் உறிஞ்சினர். தொழிலாளிகள் சார்பாக பேசுவதற்கு ஆட்கள் யாருமில்லை. அவர்களுக்கே உணர்வு வரவில்லை. எப்படியாவது உயிர் வாழ்ந்தால் போதுமென்று கொடுத்த கூலியை வாங்கிக் கொண்டு வேலை செய்தனர். இதுதான் 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிலாளர் நிலை.

இங்கிலாந்தில் குடிசைத் தொழிலாளருக்கு ஏற்பட்ட ஆபத்து விவசாயிகளுக்கும் ஏற்பட்டது. நீராவி இயந்திரம் ஏற்பட்ட பிறகு பிரிட்டிஷ் முதலாளிகள் கனடா, அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து தானியங்களைக் கொண்டுவந்து குறைந்தவிலைக்கு விற்க ஆரம்பித்தனர். இந்தச் சமயத்தில் ஆங்கில நாட்டு உழவர்கள் இன்னும் பழைய முறையிலேயே விவசாயம் செய்துவந்தனர். ஆகவே அவர்களால் பிறநாட்டு தானியங்களுடன் போட்டிப் போட்டுக்கொண்டு விற்க முடியவில்லை. அதனால் அவர்கள் வாழ்வும் சிதைய ஆரம்பித்தது. தங்களுக்கிருந்த சொற்ப நிலங்களையும் விற்றுவிட்டு எங்கேயாவது கூலிவேலை கிடைத்தால் போதும் என்று சுற்ற ஆரம்பித்தனர் ஆங்கில நாட்டு உழவர்கள்.

இம்மாதிரி மத்தியதர வகுப்பு என்ற ஒரு வகுப்பையே அழித்து முதலாளி, தொழிலாளி என்ற வகுப்புகள் ஏற்பட்டன.

அந்தக் காலத்தில் தொழிற்சாலைகளில் எந்த விதமான வசதியும் கிடையாது. முதலாளியும் அவன் ஏஜெண்டுகளும் வைத்ததுதான் சட்டம். தொழிலாளர்க்கென்று ஒரு மருத்துவ சாலை கூட கிடையாது. அரை வயிற்றுக் கஞ்சியை ஊற்றி காலை முதல் மாலை வரை வேலை வாங்கும் முதலாளிகள்தாம் தோற்றமளித்தனர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிலாளர் அனுபவித்த துன்பம் அளவற்றது. தொழில் வளம் பெருக பெருக முதலாளிகளின் கொடுங்கோன்மை இன்னும் வளர்ந்து கொண்டே போயிற்று. இந்த நிலையில் தான் தொழிற் சங்கங்கள் தோன்றின.

தொழிற்சாலையில் வேலை செய்தவர்கள் தங்கள் குறைகளை முதலாளிகளுக்குத் தெரியப்படுத்த ஒரு கூட்டுறவுச் சங்கம் தேவை என்பதை உணர்ந்தனர். அதன் பலன்தான் ஆங்காங்கே சிறு சிறு தொழிற் சங்கங்கள் உற்பத்தியாயின. இம்மாதிரி சிறு சங்கங்கள் இங்கிலாந்தில் ஏராளமாக உண்டாயின. நாட்கள் செல்லச் செல்ல தொழிற் சங்கங்கள் தங்கள் பார்வையை பக்கத்துநாடுகளுக்கும் செலுத்தின. போக்கு வரவு சாதனம் அதிகமான காரணத்தால் ஒரு நாட்டுக்கும், மற்றொரு நாட்டுக்கும் ஏற்பட்ட தொடர்பு அதிகமாயிற்று.

இங்கிலாந்து தேசத்து தொழிலாளியும் பிரான்சுநாட்டுத்தொழிலாளியும் தங்கள் தேவைகள் ஒன்றே என்பதை உணர்ந்தனர். தொடர்புகள் அதிகமாக ஆரம்பித்ததும் அத்துடன் முதலாளிகளின் பிடி இறுக இறுக, ஒரு நாட்டுத் தொழிலாளிக்கும், மற்றொரு நாட்டுத் தொழிலாளிக்கும் ஒற்றுமை வளர ஆரம்பித்தது.

ஆனால் பல நாட்டுத் தொழிலாளரும் ஒன்று கூடிச் சங்கம் ஆரம்பிக்க வெகு நாட்களாயிற்று.

இந்த காரியத்திற்கு அடிப்படையாக பிரிட்டிஷ் தொழிற்சங்கம் அடிக்கடி வெளிநாட்டுத் தொழிற் சங்கங்களுடன் தொடர்பை உண்டாக்கிக் கொண்டேயிருந்தது, அவ்வப்பொழுது மற்ற

நாட்டுத்தொழிலாளர் நிலை குறித்துத்தீர்மானங்கள் நிறைவேற்றுவது, கடிதங்கள்எழுதுவதுஇப்படிப் பல வேலைகளை பிரிட்டிஷ் தொழிற் சங்கம் தவறாமல் செய்து வந்தது.

1836-ல் பெல்ஜியம் தொழிலாளர் தலைவன் காட்ஸ் என்பவனை பெல்ஜிய அரசாங்கம்சிறையிலடைத்தது இதைக் கண்டித்து சகோதர தொழிலாளிகளுக்கு தங்கள் அனுதாபத்தைக் காட்டி ஒரு கடிதம் எழுதினர் பிரிட்டிஷ் தொழிலாளர் சங்கத்தார். இதைத் தொடர்ந்து சர்வ தேசிய தொழிலாளர் சம்மேளனம் ஒன்றை அமைப்பது குறித்து அறிக்கைகளை வெளியிட்டது பிரிட்டிஷ் தொழிற் சங்கம்.

ஸ்தாபன ரீதியாக சர்வதேச தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டுமென்று பாடுபட்டவர்களில் மாஜினி என்ற இத்தாலி நாட்டுத் தலைவனும் ஒருவன். "யங் இத்தாலி" இயக்கத்தை ஆரம்பித்தவன். இத்துடன் "யங் ஐரோப்பா"வுக்காக அவன் தீவிரமாக உழைத்தவன். மாஜினி தொழிலாளர் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவன்.

1838-ல் பிரிட்டிஷ் தொழிற் சங்கத் தலைவர் லாவட் என்பர் ஐரோப்பிய தொழிலாளருக்கு விரிவான அறிக்கையொன்று வெளியிட்டார்.

"செல்வத்தை உற்பத்தி செய்யும் சகோதரர்களே! நம்மைஆளுபவர்கள் ஒன்றுணபிறகு நாம் ஏன் தனித்து நிற்க வேண்டும்?" என்று லாவட் தன் அறிக்கையின் முடிவில் கேட்டிருக்கிறார். இந்த மாதிரி சர்வதேசிய அமைப்புக்காக இங்கிலாந்து முயன்று கொண்டிருக்கும்போது பிரான்சும் இதே வழியில் முயற்சி செய்து கொண்டிருந்தது.

கடைசியாகப் பலருடைய முயற்சிக்குப் பிறகு 1839-ம் ஆண்டு ஒரு சர்வ தேசிய தொழிலாளரின் மகாநாடு கூட்டுவதென்று முடிவு செய்யப் பட்டது. இதில் பிரான்சும், இங்கிலாந்தும் மும்முரமாக இருந்தன. ஆனல் எதிர்பாராத விதமாக இந்த மகாநாடு தடைப்பட்டது. லண்டனில் சார்ட்டிஸ்ட் இயக்கம் சம்பந்தமாக லாவட் கைது செய்யப் பட்டார். பிரான்சிலும் தலைவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. ஆனலும் தொழிலாளர்களின் கூட்டு முன்னணிப் பற்றிய பிரசாரம் வலுவடைந்து கொண்டே போயிற்று. தொழில் புரட்சிக்குப் பிறகு தாங்கள் எந்த தேசத்திலிருந்தாலும், தங்கள் தேவைகள் ஒரே மாதிரிதான் என்பதைத் தொழிலாளர்கள் நன்கு உணர்ந்தனர். இந்த நிலையில்தான் தொழிலாளர் உலகத்தில் மார்க்ஸ் தோன்றினர். முதலாளிகளை ஒழிப்பதற்கென்று 1847-ல் 'கம்யூனிஸ்ட் லீக்' என்ற ஒரு சர்வ தேசிய இயக்கத்தை ஆரம்பித்தார். அதே வருடம் நவம்பரில் அதன் இரண்டாவது காங்கிரஸ் நடை பெற்றது. அதற்குப் பல நாட்டுப் பிரதிநிதிகள் வராவிட்டாலும் மார்க்ஸும், எங்கெல்ஸும் வந்திருந்தனர் அந்தக் காங்கிரஸில்தான் மார்க்ஸ் தன் "கம்யூனிஸ்ட் அறிக்கையை" வாசித்து காண்பித்தார். "கம்யூனிஸ்ட் அறிக்கை"யில் தொழிலாளிகளின் விடுதலைக்குத் தெளிவான வழியை மார்க்ஸ் காட்டினர். மார்க்ஸின் சித்தாந்தப்படி வர்க்கவேற்றுமைகள் காரணமாக வரலாற்றில் ஏற்பட்ட போராட்டங்கள், நில முறையிலிருந்து வியாபார அபிவிருத்தி, முதலாளிகளின் தோற்றம், உலக மார்க்கெட்டின் வளர்ச்சி, இவைகளால் தேசிய எல்லைகளைக் கடந்து உலக முழுமைக்கும் இரு வகுப்புகளே முதலாளி-தொழிலாளி என்று மிகுவதை முடிவாகக் காட்டினர்.

அந்த அறிக்கை "உலகப் பாட்டாளி மக்களே; ஒன்று படுங்கள்!" என்ற அழைப்புடன் முடிகிறது, மார்க்ஸின் வேண்டுகோளின் படி 1848-ம் வருடம் உலகத் தொழிலாளர் காங்கிரஸ் கூடுவதாயிருந்தது. ஆனல் மறுபடியும் தடைப்பட்டது. இந்தத் தடவை இப்படி நேர்ந்ததற்குக் காரணம் அந்த வருடத்தில் ஐரோப்பாவில் நடந்த பொதுப் புரட்சியேயாகும். (முக்கியமாக பிரான்சிலும் ஜெர்மனியிலும்) இரண்டு தடவைகள் தடைப்பட்ட பிறகு 1863-ம் ஆண்டுதான் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி 1864-ம் ஆண்டு சர்வதேசிய தொழிலாளர் சங்கத்தைத் கூட்டுவதென்றும அதற்

குச் சட்ட திட்டங்களை தயாரிப்பதென்றும் முடிவுசெய்து ஒரு கமிட்டியையும் நியமித்தனர். பல வித தகாராறுகளுக்குப் பிறகு நிறுவப் போகும் சங்கத்திற்கு, சட்டதிட்டங்களைச் தயாரிக்கும் பொறுப்பு மார்க்ஸிடம் ஒப்படைக்கப்பட்டது. பல திறப்பட்ட தொழிலாளர் வகுப்புகளுக்கு ஏற்றவாறு 'மார்க்ஸ்' ஒரு அறிக்கையையும் சட்டதிட்டங்களையும் தயாரித்தார்.

கடைசியாக 1866-ல் முதலாவது சர்வதேசியச் சங்கம் ஜினிவாவில் கூடிற்று. அந்தக் காங்கிரஸுக்கு பிரான்சு, பெல்ஜியம் ஸ்விட்ஸர்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து, முதலிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஜினிவா காங்கிரஸ் விவாதித்த முக்கியமான சில விஷயங்கள் பின் வருமாறு :—

'சர்வதேசிய அமைப்பின் முக்கியத்துவம், உபயோகம், இதுவரைக்கும் தொழிலாளர் நிலை, இனிமேல் மாறக் கூடிய நிலை, பெண் தொழிலாளர் நிலை, வரிவிதிப்பு இன்னும் பல.

ஜினிவா காங்கிரஸுக்குப் பிறகு முதல் சர்வதேசியச் சங்கம் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தது. 1867-ல் பிரான்சிலும், இங்கிலாந்திலும் நடந்த வேலை நிறுத்தம் முதல் சர்வதேசியச் சங்கத்திற்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தேடிக்கொடுத்தது. உலகத் தொழிலாளர்களின் கூட்டு முன்னணி அப்பொழுது நன்ருகப் பயன்பட்டது. பிரான்சு நாட்டுப் பித்தளை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது ஆங்கில நாட்டுத்தொழிற் சங்கங்கள் மூலம் ஆயிரக்கணக்கில் பணம் வசூலிக்கப்பட்டு அவர்களுக்கு உதவிநிதியாக அனுப்பப்பட்டது. வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்த இந்தப் பொருளுதவி மிகவும் பயன் பட்டது. இதேமாதிரி இங்கிலாந்தில் தையற்காரர்கள் வேலை நிறுத்தம் செய்தபொழுது ஐரோப்பிய தேசங்கள் பொருளுதவி செய்தன.

இம்மாதிரி சர்வ தேசிய அடிப்படையில்தொழிலாளர்கள் ஒன்றுபட்டிருப்பதில் உள்ள நன்மை நாளடைவில் தெளிவுபடலாயிற்று. அதன் பலனாக பல தொழிற்சங்கங்கள் முதல் சாவதேசியத்தில் அங்கத்தினர்களாயினர். அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்றே ஒழிய சங்கத்திற்கு வரவேண்டிய அங்கத்தினர் கட்டணங்கள் வசூலாகவேயில்லை. ஒவ்வொரு தேசத்திலும் அதிகமான அளவுக்கு பாக்கி நின்றது.

1869-70-ல் இந்நிலை இன்னும் முற்றி விட்டது. எதிர்பார்த்த அளவுக்கு வசூல் பணம் வரவில்லை. தேசிய சங்கமிருந்த கட்டிடத்திற்கு வாடகையும், அங்கு வேலை பார்த்த காரியதரிசிக்கு சம்பளமும் கொடுக்கப் பணமில்லை. ஆனாலும் சங்கத்திற்கு மதிப்பு உயர்ந்திருந்தது. ஒரு நாட்டு தொழிலாளி, மற்றொரு நாட்டானை சகோதரன் என்று நினைக்கும் மனப்பான்மை வளர்ந்தது. இந்தச் சமயத்தில் தொழிலாளா தலைவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது.

சர்வதேசியச் சங்கத்தைப் போலவே தனிப்பட்ட முறையில் தொழிலாளர்களின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வந்தவர் பகுனின் என்பவர். இவருக்கும், மார்க்ஸுக்கும் கொள்கை வேற்றுமை ஏற்பட்டது. மார்க்ஸ் துண்டு துண்டாகக் காரியங்களை செய்யாமல் விரிவான அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சியை ஆங்காங்கே நிறுவ ஆரம்பித்தார். அவருக்கு உதவியாக அவர் தோழர் ஏங்கெல்ஸ் 1870-ல் தன் வியாபாரத்தை விட்டு விட்டு மார்க்ஸுடன் வேலை செய்ய ஆரம்பித்தார். இதனுல் மார்க்ஸுக்கென்று முதல் சாவதேசியச் சங்கத்தில் ஒரு தனிப்பட்ட கூட்டம் உண்டாகிவிட்டது. நாளடைவில் அவர் சக்தி வளர ஆரம்பித்தது. இது பகுனின் போன்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. மார்க்ஸ் சர்வதேசிய சங்கத்தையே கைப்பற்றி அரசாங்கங்களைக் கவிழ்க்கப்பார்க்கிருர் என்று பகுனின் குற்றம் சாட்டினர். இந்தப் போராட்டத்தினிடையில் 1872-ஹேக் நகரில் சர்வதேசியச் சங்கத்தின் காங்கிரஸ் கூடிற்று. இதில் பகுனின் கட்சியார் மார்க்ஸை தொலைத்துவிடு

வது என்று எண்ணியிருந்தனர். அதற்கேற்றுப்போல் அவர்களுக்குப் பெரும்பான்மையாகவோட்டுமிருந்தது. ஆனால் இந்த காங்கிரஸுக்கு மார்க்ஸே நேரில் வந்துவிட்டார். அவர் நேரில் வந்த பிறகு பகுனின் கோஷ்டியார் என்ன செய்ய முடியும்? பகுனினைச் சேர்ந்தவர்களை யெல்லாம் சங்கத்திலிருந்து மார்க்ஸ் வெளியேற்றினர். அதே காங்கிரஸில் அவருக்கு 65 சதவிகிதம் வோட்டுகிடைத்தது! ஐரோப்பிய தலைவர் தகராறிலிருந்து தப்புவிப்பதற்காக முதல் சர்வதேசிய சங்கத்தின் தலைநகர் லண்டனிலிருந்து நியூயார்க்குக்கு மாற்றப்பட்டது. அதற்குப் பிறகு சர்வதேசியச் சங்கமே மறைய ஆரம்பித்துவிட்டது. பல ஆயிர மைல்களுக்கப்பாலுள்ள நியூயார்க்குடன் தொடர்புகொள்ள ஐரோப்பிய தொழிலாளர்கள் மறுத்தனர். இத்துடன் பகுனினுக்கும், மார்க்ஸுக்கும் ஏற்பட்ட தகராறு முற்றியது. கடைசியாக 1876-ல் மார்க்ஸே முதல் சர்வதேசியச் சங்கத்தை கலைத்துவிட்டதாக அறிவித்தார். பின்னும் இரண்டு வருடங்கள் கழித்து பகுனின் கட்சியாரும் தங்கள் அமைப்பைக் கலைத்தனர். 1876 உடன் முதல் சர்வதேசியத் தொழிலாளர் சங்கம் ஒழிந்தது. இது கலைக்கப்பட்டதற்கு இன்னும் சில காரணங்கள் உண்டு.

பொதுவாக ஆரம்ப காலத்தில் இங்கிலாந்து நாட்டுத் தொழிலாளர்கள்தான் இதில் அதிக ஆர்வம் காட்டினர். ஆனால் சர்வ தேசியச் சங்கம் பரவ ஆரம்பித்த பிறகு பிரான்சு, ஜெர்மனி முதலிய தேசங்களிலுள்ள தொழிலாளர்களும் சேர்ந்தனர். அவர்களில் பெரும்பான்மையினர் தீவிர வாதிகளாயிருந்தார்கள். தீவிர வாதம் ஆங்கில நாட்டிற்குப் பிடிக்காத விஷயம். அத்துடன் கம்யூனிஸ்டுகளுக்குச்சங்கத்தில் இடம் கிடைத்தது. பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர்களுக்குப்பயம் வந்தது. தொழிற்சங்க நடவடிக்கையை மீறி அரசியல் துறைகளிலும் சர்வ தேசியச் சங்கம் வேலைசெய்ய ஆரம்பிக்குமோ என்று பயந்தனர்.

இத்துடன் மற்றொரு முக்கியமான விஷயம். சர்வ தேசிய தொழிலாளர் சங்கத்தைக் கலைக்க உதவியது. அதுதான் தேசியம். 1870–80 ஆண்டுகளில் சர்வ தேசிய மனப்பான்மை குறைந்து ஒவ்வொருவரும் அவரவர் நாட்டு வளனைக் கவனிக்க ஆரம்பித்தனர். சர்வ தேசிய மனப்பான்மை தளர தளர சர்வ தேசியச் சங்கமும் தன் பலத்தை இழந்துகொண்டே வந்து கடைசியாக அழிந்தது.

ஆனால் முதல் சர்வ தேசியச் சங்கத்திற்கு தொழிலாளர் உலகில் ஒரு தனி இடம் உண்டு. அதுதான் முதன் முதலாக சர்வ தேசிய ரீதியில் தொழிலாளரின் நலனைக் கவனிக்க ஆரம்பிக்கப்பட்ட சங்கம். தொழிலாளர்களின் பரஸ்பர ஒற்றுமைக்கு வழி கோலிய முதல் சங்கம் அது.

அதற்குப் பிறகுதான் பல தேசத்து தொழிலாளர் தலைவர்களும் ஒன்று கூடிப பேச ஆரம்பித்தனர்.

திட்டமாகச்சுட்டிக்காட்டும்வகையில் எந்தக் காரியத்தையும் முதல் சர்வ தேசியச் சங்கம் சாதிக்காவிட்டாலும், அது போட்ட கோஷங்கள் தொழிலாரின் அடிப்படைத் தேவைகளை மககள் முன்னிலையில் கொண்டுவந்து வைத்தது.

ஒரு நாளைக்கு எட்டுமணிநேர வேலையும், சர்வ தேசிய தொழிற்சங்க சம்மேளனம் நிறுவவேண்டிய அவசியமும், தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் சர்வ தேசியச்சட்டங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியமும் இன்னும் பலவும் முதல் சர்வ தேசிய சங்கத்தார் பிரசுரப்படுத்திய விஷயங்களாகும்.

* * *

முதல் சர்வ தேசியச் சங்கம் கலைக்கப்பட்டபிறகு அந்தந்த தேசங்களில் தொழிலாளர் சங்கங்கள் பெருகின. நாளடைவில் தொழிற்சங்கங்களிலும் பிளவுகள் ஏற்பட்டன. சோஷியலிஸ்டுகள்மிதவாதிகள், கட்சி பற்றற்றவர்கள் என பல வழியில் தொழிற்சங்கங்கள் பிரிந்தன. தொழிற்சங்கங்கள் வளர்ந்தபோதிலும் சர்வ தேசிய

அமைப்பு ஏற்படுத்துவதைக் குறித்து 1888-க்கு முன் எந்த முயற்சியும் நடைபெறவில்லை. பிரிட்டிஷ் தொழிற்சங்கம் 1888-ல் இரண்டாவது சாவ தேசிய அமைப்பு ஒன்று ஏற்படுத்துவது குறித்து ஒரு மகாநாட்டை பாரிஸில் கூட்டப்போவதாக அறிவித்தது. அதே சமயத்தில் ஜெர்மன் சோஷியலிஸ்டுகளும் ஒரு மகாநாடு கூட்டுவதாக அறிவித்தனர். அவர்களும் பாரிஸையே மகாநாட்டிற்கு இடமாகத் தேர்ந்தெடுத்தார்கள். இந்த நிலையில் இரண்டு மகாநாடுகள் 1889-ல் பாரிஸில் கூடின. இரு மகாநாட்டினரையும் ஒன்று சேர்த்துவைக்கச்செய்த முயற்சிகள் பயன்படவில்லை. ஆனால் பல தேசங்களில் தொழிலாளிகள் செய்யும் அக்கிரமங்களையும், தொழிலாளர்களின் துன்பங்களையும் மகாநாட்டிற்கு வந்திருந்த தலைவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர், இதன் பலனாக சோஷியலிஸ்டுகளும் மிதவாதிகளும் ஒன்றாகி மகாநாட்டை ஆரம்பித்தனர். இந்த மகாநாட்டிற்கு அமெரிக்கத்தொழிலாளர்பெடரேஷன் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தது. அந்த வாழ்த்துச் செய்திதான் "மே மாதம் முதல் தேதியை" தொழிலாளர் தினமாக கொண்டாடவேண்டுமென்று அமெரிக்கர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். அதன்படி பாரிஸ் காங்கிரஸ் மே முதல் தேதியை தொழிலாளர் தினமாகக் கொண்டாடத் தீர்மானித்தது. இது இன்னும் நிச்சயமாக 1891-ல் ப்ரெஸல்ஸ் காங்கிரசில் தீர்மானிக்கப்பட்டது. இப்படியாக இரண்டாவது சர்வதேசியச் சங்கம் தொடங்கப் பெற்றது.

ஆனால், சர்வதேசிய சங்கத்திற்குள் பல கட்சிகளிருந்தன. சோஷியலிஸ்டுகள் ஒருபுறம், மிதவாதிகள் ஒரு புறம், மார்க்ஸீய வாதிகள் மற்றொரு புறம் இப்படிப் பல வகுப்புகள் இருந்தன. அந்தந்த கட்சிக்கு தனிப்பட்ட அமைப்பு வேறு உண்டாகியது. 1904ல் பாரிஸில் கூடியசோஷியலிஸ்ட் காங்கிரஸ் சர்வதேசிய சோஷியலிஸ்ட் ஸ்தாபனத்தை உண்டாக்கியது. இந்த சோஷியலிஸ்ட் ஸ்தாபனத்தைதனக்கு சாதகமாகக் கொண்டு இரண்டாவது சர்வதேசிய சங்கம் வளர ஆரம்பித்தது. 1904-ல் ஆம்ஸ்டெர்டாமில் கூடிய காங்கிரஸ் இதைச் செவ்வனே செய்து முடித்தது. அதற்குப் பிறகு சோஷியலிஸ்ட் ஆதிக்கத்தில்தான் சர்வதேசிய சங்கம் வளர ஆரம்பித்தது. இதற்குள் ஐரோப்பிய நாடுகள் யுத்தத்தால் பாதிக்கப்படுமோ என்ற பீதி ஏற்பட்டது. சண்டை ஏற்பட்டால் தொழிலாளர்களின் நிலை என்ன? இந்தக் கேள்விக்கு இரண்டாவது சர்வதேசிய சங்கம் கொடுத்த பதில் தெளிவாக இருந்தது. "யுத்தங்கள் முதலாளிதத்துவ முறையினால்தான் உண்டாக்கப் படுகின்றன. அது தொழிலாளிகளுக்கு ஆபத்தைக் கொடுக்கும். சண்டையை ஒழிக்க முதலாளி வர்க்கத்தையே ஒழிக்க வேண்டுமென்று கூறினர் சர்வ தேசிய சங்கத்தார். நாட்கள் ஆக ஆக யுத்தத்தின் பீதி ஐரோப்பாவைச் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தது. எப்படியாவது யுத்தம் வராமல் தடுக்க வேண்டியது சாவ தேசிய சங்கத்தின் கடமை, கடைசியாக சங்கம் பின் கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது. "யுத்தம் ஏற்படாதவாறு அந்தந்த அரசாங்கத்திலிருக்கும் தொழிலாளர் பிரதிநிதிகள் முயல வேண்டும். அப்படி அவர்களால் முடியாமல் போனால் யுத்தத்தினால் ஏற்படும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு தொழிலரசை நிறுவ வேண்டும்.

இந்த அறிக்கை பலருக்குச் சரியாக விருந்த போதிலும், சிலர் இன்னும் தீவிரமான முடிவை எதிர்பார்த்தனர். அவர்கள், யுத்த முயற்சிகளைப் பாழாக்க, ஒவ்வொரு தேசத்திலும் தொடர்ந்தாற்போல் வேலை நிறுத்தங்களை ஆரம்பிக்க, யோசனை கூறினார்கள். ஆனால் இந்த தீவிர வாதங்கள பலனளிக்க வில்லை. சண்டை ஆரம்பிக்கும் வரை எல்லாத் தொழிலாளரும் அதை ஒழிப்பது பற்றி பேசிவந்தனர். ஆனால், சண்டை ஆரம்பித்த பிறகு, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தேசத்தின் பாதுகாபபைக் கவனிக்க ஆரம்பித்தனர். நிபந்தனையற்ற ஒப்பந்தத்தின் பேரில், அரசாங்

கம் யுத்தத்தில் வெற்றி பெற, உதவினர். சர்வ தேசியம் மறுபடியும் மறைந்தது ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர்களும்போர்க்கருவிகளைச் செய்வதில் முனைந்தனர். இரண்டாவது சர்வ தேசிய சங்கம் மறைந்தது.

மகா யுத்தம் (1914-18) முடியும் வரை, தொழிற் சங்கங்களின் நடவடிக்கை ஒத்தி வைக்கப்பட்டது. சொல்ல முடியாத துன்பங்களை உண்டாக்கிவிட்டு மறைந்தது மகா யுத்தம். மகா யுத்தத்தின் முடிவில், ரஷ்யத் தொழிலாளி வர்க்கம், அரசாங்கத்தைக்கைப் பற்றியது. ரஷ்யத் தொழிலாளர்களின் வெற்றி, உலகத் தொழிலாளரின் வெற்றி! யுத்தத்திற்குப் பின்னால் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி ஆகியவைகளில் ஏற்பட்ட குடியரசு அரசாங்கங்கள், ரஷ்யத் தொழிலாளருக்கு, பக்க பலமாக அமைந்தன. ரஷ்யத் தொழிலாளிகள் "லெனினின்" தலைமையின் கீழ் ஒன்றுபட்டுநின்றார்கள். தாங்கள் அடைந்த வெற்றி தங்கள் சகோதர தொழிலாளிகளுக்கும் கிடைக்க வேண்டு மென்று, தீவிரமாக வேலை செய்தனர். அதன் பலனைத்தான், 1919-ல், மாஸ்கோவில் மூன்றாவது சர்வ தேசிய சங்கத்தைக் கம்யூனிஸ்டுகள் கூட்டினார்கள். இதற்கு மிதவாதத் தலைவர்கள் போகவில்லை. இருந்தாலும் காங்கிரஸ் உற்சாகத்துடன் நடை பெற்றது. மூன்றாவது சர்வ தேசியத்தை ஆரம்பித்த கம்யூனிஸ்டுகள், தங்களை "மார்க்ஸ் ஆரம்பித்த காரியத்தை முடிக்கும் தொண்டர்கள்" என்று கூறிக்கொண்டார்கள். ஆகவே இந்தச் சங்கத்தில் எல்லோரும் அங்கத்தினராக முடியவில்லை. மிதவாதிகளும் சோஷியலிஸ்டுகளும், தங்களுக்கென்று, தனிப்பட்ட ஸ்தாபனத்தை உண்டாக்கினார்கள். 1919-ல் ஆம்ஸ்டர் டாமில் கூடி, தொழிற் சங்கங்களின் சர்வ தேசிய பெடரேஷன் ஆரம்பித்தார்கள். இது முதல் ஆம்ஸ்டர் டாம் பெடரேஷனுக்கும் கம்யூளிஸ்டுகள் அதிகமாயிருந்த மூன்றாவது சர்வ தேசிய சங்கத்திற்கும் போராட்டம் அதிகமாகியது, மகா யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சரியான வழியில் உபயோகப் படுத்துவதை ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் தடுக்கிறது என்று கம்யூனிஸ்டுகள் குறை கூறினர். இந்த வேற்றுமை வளர வளர, ஐரோப்பிய தொழிலாளர் உலகம் இரண்டாகப் பிரிந்தது. 1921-ல் கூடிய ஆம்ஸ்டர்டாம் பெடரேஷனின் காரியக்கமிட்டி கம்யூனிஸ்டு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் சர்வ தேசிய தொழிற் சங்க பெடரேஷனில் அங்கத்தினராவதைத் தடை செய்தது. இதற்குப் பிறகு ஆம்ஸ்டர்டாம் பெடரேஷனும் கம்யூனிஸ்டு பெடரேஷனும் தங்கள், தங்கள் பாதையிலேயே சென்றன.

தொழிலாளர்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய உழைப்பதும், படிப்படியாகச் சீர்திருத்தங்கள் செய்து பார்லிமெண்டரி முறைப்படி அரசியலதிகாரத்தை கைப்பற்றுவதும் ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் கொண்டிருந்த கொள்கை. தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்க, அரசியல், தொழிலாளரின் கைக்கு வர வேண்டும் என்று தீர்மானமாகக் கம்யூனிஸ்டுகள் கூறினர். இந்த அடிப்படைக் கொள்கை வேற்றுமையின் காரணமாக ஆம்ஸ்டர்டாம் பெடரேஷனுக்கும் கம்யூனிஸ்டு பெடரேஷனுக்கும் விரோத மனப்பான்மை வளர்ந்து கொண்டே போய்கொண்டிருந்தது. இதற்கிடையில் 1926-ல் இங்கிலாந்து தேசத்தில் புதியதொரு பிரச்சினை உண்டாகியது. அங்குள்ள சுரங்கத் தொழிலாளாகள் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்தனர். இந்த வேலை நிறுத்தத்தை ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் ஆதரித்தது. அதையொட்டி வேலை நிறுத்தம் ஆரம்பித்தவுடன், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்ய பெடரேஷன் முன்னுக்கு வந்தது. தொழிலாளர் யூனியன்கள் ஏற்பட்ட பிறகு சர்வதேசிய ரீதியில் கவனத்தை உண்டாக்கிய முதல் வேலை நிறுத்தம் இதுதான். ஆகவே ஒவ்வொரு நாட்டுத் தொழிற்சங்கமும் வேலை நிறுத்தம் வெற்றி பெற உதவுவ

தாக வாக்களித்தன. சரியாக 1926-ம் ஆண்டு மே மாதம் நான்காம் நாள் வேலை நிறுத்தம் ஆரம்பமாயிற்று. உடனே ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் எல்லா தேசத் தொழிற் சங்கங்களுக்கும் தந்தியடித்து பிரிட்டிஷ் தொழிலாளருக்கு உதவி செய்யும்படிக் கூறினர். அதன்படி இங்கிலாந்துக்கு வந்து கொண்டிருந்த கப்பல்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. ஐரோப்பிய தேசங்கள் பலவற்றில் அனுதாப வேலை நிறுத்தங்கள் நடந்தன,

தொழிலாளர் வரலாற்றில், இதுவரை இந்த மாதிரி நடந்ததேயில்லை. வேலை நிறுத்தம் ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள், பல தொழிற் சங்கங்களின் சார்பாக, வாழ்த்துச் செய்திகளும் உதவி நிதியும் வந்து குவிந்து கொண்டிருந்தன. ஆங்கில நாட்டின் ரயில், ஆலை, தோல் மற்ற எல்லாத் தொழிலாளரும் உணர்ச்சியுடன்வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர். இந்த சமயத்தில் கம்யூனிஸ்ட் பெடரேஷன் நடந்துகொண்டதுதான்போற்றத்தக்கது. பிரிட்டிஷ் தொழிற்சங்கம் "ஆம்ஸ்டர்டாமின்" பகுதி என்ற போதிலும் தொழிலாளரின் பொது நன்மையை உணர்ந்து, கம்யூனிஸ்ட் பெடரேஷன் தன்னாலான உதவியைச் செய்தது. ஆனால் எல்லோருடைய உழைப்பும் விழலுக்கிறைத்த நீராகவே மாறிற்று! வேலை நிறுத்தம் ஆரம்பித்த ஒரு வாரத்திற்கெல்லாம், திடீரென்று பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கினர். இதனால் ஐரோப்பிய தொழில் உலகில் பெரிய நெருக்கடி உண்டாயிற்று. ஆம்ஸ்டெர்டாம் பெடரேஷன் பெரியதொருஏமாற்றத்தையடைந்தது. இந்த சந்தாப்பம் கம்யூனிஸ்டுகளுக்கு வசதியான சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. பிரிட்டிஷ் தொழிற்சங்கத்தலைவர்கள் தொழிலாளரைக் காட்டிக்கொடுத்துவிட்டார்களென்று கூறியது. தங்களுடைய பிற்போக்கான கொள்கையால் ஆம்ஸ்டர்டாம் பெடரேஷன் வேலைநிறுத்தத்தைவெற்றியுடன்நடத்த முடியாதபடி செய்துவிட்டனர் என்று கம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்தனர். இப்படியாக விவாதம் வளர்ந்து கொண்டே போனது.

1930-31-ல் உலக மார்க்கெட் நிலை கெட்டது. பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பாங்குகள் முறிந்தன. ஆலைகள் மூடப்பட்டன. தொழிலாளர்கள் வேலையின்றியும், குறைந்த கூலி வாங்கிக்கொண்டும் தவித்தனர். அந்த வருடங்கள் உலகப் பொருளாதாரத்தை தலை கீழாக்கின.

இதைத் தொடர்ந்தாற்போல் 1933-ல் ஜெர்மனியில் நாஸிசம் ஆட்சி பீடத்திலமர்ந்தது, அதற்குப் பிறகு உலகம் மறுபடியும் யுத்த பீதியில் ஆழ்ந்தது. தொழிலாளர் ஒரு வசதியுமில்லாமல் தேசியம் சர்வதேசியம் இரண்டுக்குமிடையில் அகப்பட்டுக்கொண்டு தவித்தனர். கடைசியாக 1939-யுத்தம் வந்தது. யுத்தத்தின்போது கம்யூனிஸ்டு ஆதிக்கத்திலிருந்த மூன்றாவது சர்வதேசியச் சங்கம் கலைக்கப்பட்டது. இதற்குப் பிறகு எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த 8 ஆண்டுகள் தொழிலாளிகளுக்குக் கொடுத்த தொல்லை அளவில்லாதது. நேரிடையாகத்தொழிலாளர்தாம்போரின்பாரங்களைத் தாங்க வேண்டியிருந்தது.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால், தொழிலாளரின் ஒப்பற்ற தலைவன் மார்க்ஸ் கூறியபடி, இன்றைய தினம் உலகத்தில் மிஞ்சியிருப்பது முதலாளி தொழிலாளி என்ற இரண்டே இனம் தான். முதலாளி வர்க்கத்தை வளரவிட்டு, மறுபடியும் போர் உண்டாகும் வழியை இனியும் விட்டு வைப்பது தவறு. பாட்டாளி மக்கள் ஒன்றுகூட வேண்டும். முதலாளி வர்க்கம் அடியோடு அழிக்கப்படவேண்டும். இதைச் செய்ய சர்வதேசிய அடிப்படையில் வலுவான முன்னணி தேவை. அதற்கு இந்த மே தினம் ஆரம்ப நாளாகட்டும். "உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்!"




[முன் இதழ் தொடர்ச்சி]

## பாண்டரீனு:

இத்ரிசியும், டிமிஷ்க்கும் தனித் தனியே இவ்வூரைப்பற்றி எழுதியுள்ளார்கள். க்யூலண்டிக்கு வடக்கே பண்டலாயினி கொல்லம் என்று வழங்கப்படும் இடமே பாண்டரீனு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. திராவிடம் வந்த பல வெளிநாட்டு வழிப்போக்காளர்களெல்லோரும் இவ்வூரைச் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார்கள். மாலிக் இபின் தீனர் என்பவா இங்கு ஒரு மசூதி கட்டியதாகச் சொல்லப்படுகிறது. பாண்டரீனுவைப் பற்றி இத்ரிசி கூறுவதாவது:—

"பாண்டரீனு மனீபாரிலிருந்துவரும் ஆற்றின் முகத்துவாயில் அமைந்திருக்கிறது. இந்தியாவிலிருந்தும், சிந்துவிலிருந்தும் வரும் கப்பல்கள் இங்குதான் நங்கூரம் பாய்ச்சுகின்றன. மக்கள் ஆடம்பர வாழ்வினராக இருக்கின்றனர். சந்தையில் ஏராளமான பொருள்கள் குவிந்துகிடக்கின்றன. வாணிபம் செழித்தோங்கிக்கொண்டிருக்கிறது. இந்த நகருக்கு வடக்கே மலையொன்றிருக்கிறது. அதில் மரங்களும் சிற்றூர்களும், கால்நடைகளுமிருக்கின்றன. மலைச் சரிவில் விளையும் ஏலக்காய் எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மிளகுக் கொடிகள் எங்கனும் பரவிக்கிடக்கின்றன. அது உலகில் வேறு எங்கும் கிடைப்பதில்லை," என்பதாகும்.

இதனையொட்டி கடலில் நீண்டிருக்கும் பாறையில் காலடிபோல் செதுக்கிவைத்திருக்கிறார்கள். கி. பி. 1498-ம் ஆண்டு கப்பாட்டில் வந்திறங்கிய வாஸ்கோடகாமா இவ்வூரை யடுத்துள்ள இடத்தில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இபின் பட்டூடா கூறுவதாவது:—

"பாண்டரீனு ஒரு பெரிய அழகான நகரமாகும். தோட்டங்களும், கடைவீதிகளும் கவின்பெற விளங்குகின்றன. மூன்று பகுதிகளில் முஸ்லிம்கள் நிரம்பியுள்ளனர். ஒவ்வொரு பகுதியிலும் ஒரு மசூதி இருக்கின்றது. இந்தத் துறைமுகத்தில்தான் சீனநாட்டுக் கப்பல்கள் மாரிக்காலங்களில் ஓய்வெடுத்துக்கொள்ளுகின்றன" என்பதாகும்.

## ஷாலியாட்:

இது பேபூரோடு ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறது. இதைப் பலச்சன்னூர் அம்சத்தை சேர்ந்த சாலியத்தோடு ஒப்பிடுவதே சரியாகும் என்று நயினர் கூறுகிறார். இபின் பட்டூடா கூறும்பொழுது "ஷாலியாட் அதே பெயருடைய துணியை உற்பத்தியாக்கும் ஒரு அழகுள்ள நகரம்" என்று குறிப்பிடுகிறார்

## சிந்தாபூர் :

முசூதி, இத்ரிசி, டிமிஷ்க், அப்துல் ப்விதா ஆகியோர் இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். இதன் கடற்கரையிலுள்ள வளைகுடாக்களில் முதலைகள் நிரம்பக் கிடப்பதாக மசூதி எழுதியுள்ளார். இத்ரிசி குறிப்பிடும்போது இது கப்பல் நங்கூரம் பாய்ச்சுவதற்கேற்ற வகையிலுள்ள வளைகுடாவில் அமைந்திருக்கிறது என்றும், சிறந்த வணிகத்தொழில் நடக்குமிடமென்றும், அழகான கட்டிடங்களையும், வளப்பமான கடைவீதிகளையும் கொண்டதென்றும் கூறுகிறார். சதாசிவகாட் என்று வழங்கப்படுவதே சிந்தாபூர் என்று சொல்லப்படுகிறது. இது தானாவிலிருந்து மூன்றுநாள் பிரயாண தூரத்திலிருப்பதாக அப்துல் ப்விதா கூறுகிறார்.

## கூடாபரீத் :

இபின் குர்தாதபே இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பெரியாறு கடலொடு கலக்குமிடத்திலுள்ள அழிமுகம் என்பதே கூடாபரீத் என்று அழைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பருவக் காற்றுக் காலங்களில் பெரியாற்றின் முகத்துவாரம் மணலால் மூடப்பட்டுப் புதிய முகம் தோன்றுதலால் அவ்விடத்திலுள்ள ஊருக்கு அழிமுகம் என்று பெயர் வந்திருக்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது. சங்க கால இலக்கியங்களில் இதுதான் முசிறித் துறைமுகம் என்று குறிப்பிடப் படுகிறது. இங்குதான் யவனரின் வாணிகம் சிறந்தோங்கி யிருந்ததுமாகும். இதன் வடக்கே கொடுங்களூர் இருக்கிறது. கொடுங்களூர் தற்பொழுது கிராங்கனூர் என்று அழைக்கப்படுகிறது. அராபியர்கள் அதை கபாஷ்கான் என்று அழைத்தனர்.

## கரூரா :

கரூர் என்பதன் திரிபே கரூரா என்பது. சேரமன்னர்களின் தலைநகரான திருவஞ்சிக்களமே கரூரா என்று சொல்லப்படுவதாகும் என்றும், திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரைத்தான் அது குறிப்பிடுகிறது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பழந்தமிழ் நூல்களில் வஞ்சி என்று குறிப்பிடுவது கரூரைத்தான். வெளிநாட்டு வணிகர்கள் செல்லக் கூடிய கடைசி உள்நாட்டு ஊர் இதுதான் என்று டிமிஷ்க் கூறுகிறார். திருவஞ்சிக்களம் என்பது கொடுங்கருளூக்குப் பக்கத்திலிருக்கிறது என்பர்.

## கவ்லம் :

க்யூலான் அல்லது கொல்லம் என்று அழைக்கப்பெறும் ஊரே கவ்லம் என்று அராபியர்களால் உணர்த்தப் பட்டது. இபின் குர்தாதபே, சுலைமான், இப்னுல் பக்கி, இத்ரிசி, யாகூத், காஜ்வானி, டிமிஷ்க், அப்துல் ப்விதா முதலிய எட்டு ஆசிரியர்கள் கொல்லத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

இபின் குர்தாதபே கொல்லத்தில் மூங்கிலும், மிளகும் மிகவாகக் கிடைக்கின்றன என்று எழுதியுள்ளார்.

சுலைமான் கூறுவதாவது:—

"மஸ்காட்டிலிருந்து ஹிந்த் துறைமுகங்களுக்கு வரும் கப்பல்கள் நேரே கூகம்மலீ (கொல்லம்) நோக்கி வருகின்றன. சாதாரணமான காற்று வீசிக்கொண்டிருக்கும்போது மஸ்காட்டிலிருந்து (கொல்லம்) வந்து சேர ஒரு மாத காலம் வேண்டும். கூகம்மலீயில் கோட்டைக் கொத்தளம் ஒன்று இருக்கிறது. இந்தத் துறைமுகத்தில் சீனக்கப்பல் வந்து தங்கினால் 100 திர்காம் (ஒருவித நாணயம்) சுங்கங் கட்டவேண்டும். மற்றக் கப்பல்கள் ஒன்றிலிருந்து பத்துவரையிலும் வேறுபடும் அளவு தீனார் (மற்றொருவித நாணயம்) சுங்கமாகக் கொடுக்கவேண்டும். இங்குள்ள கிணறுகளில் இனிய சுவை மிக்க நல்ல நீர் கிடைக்கிறது. கூகம்மலீ (கொல்லம்) யிலிருந்து ஹார்கண்ட் போக ஒருமாதகால

பிரயாணம் பிடிக்கும். கப்பல்கள் இங்குதான் நல்ல நீரை முகந்து கொள்ளும்.''

இத்ரிசி கூறுவதாவது :

''கூளம்மலீ (கொல்லம்) யிலிருந்து ஐந்து மைல் தொலைவில் மலீ தீவு இருக்கிறது. மலை யடர்த்தியில்லாத அழகிய பரந்த வெளியைக் கொண்டதாகும். எங்ஙனும் பயிர் வகைகள் செழித்திருக்கின்றன. மிளகுக் கொடிகள் இங்கு நன்கு வளர்கின்றன,'' என்பதாகும்.

அபூ பிலாப் கூறுவதாவது:—

''நான் கூளம் (கொல்லம்) சென்றேன். அங்குள்ள மக்கள், வழிபாட்டிடம் ஒன்று கொண்டிருந்தார்கள். அதில் உருவ வழிபாடு இல்லை. அந்த மண்டபத்தின் தூண்களெல்லாம் திமிங்கிலத்தின் முதுகெலும்புகளாலானவை. என்றாலும் அவர்களெல்லாம் மீனுணவு உண்ணும் பழக்கமுடையவரல்லர். அவர்கள் முஸ்லிம்களைப்போல பிராணிகளை வெட்டமாட்டார்கள். அவர்களுடைய மன்னன் இறந்தபொழுது சீனாவிலிருந்து ஒருவனைத் தேர்ந்தெடுக்க முயற்சித்தார்கள். மழை நீர் தேங்கிய குளங்களிலிருந்து குடி நீரைப் பெற்றனர்'' என்று கூறுகிறார்.

டிமிஷ்க் கூறுவதாவது:—

''மிளகு, சேகரிக்கப்பட்ட அன்றே கப்பலில் ஏற்றப்படுகின்றன. பல் வேறு விதமான வாசனைத் திரவியங்கள் இங்கு கிடைக்கப்பெறுகின்றன,'' என்று குறிப்பிடுகிறார்.

''மிளகு நாட்டின்'' (மலீபார்) கடைசி நகரம் இது என்று இதைப் பல அராபிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

## ராஸ்குமுரீ :

குமரி முனையே இந்தப் பெயரால் அழைக்கப்படுகிறது. அப்துல் ப்விதா இதைப்பற்றிக் கூறும்போது மனீபாரை யடுத்து மாபாரில் (பெரிய மலபாரில்) இது முதல் நகரமாகும் என்றும், இதே பெயர்கொண்ட மலை யொன்று இருக்கிற தென்றும் குறிப்பிடுகிறார்.

## பாட்னி :

பட்டினம் என்ற சொல்லின் திரிபே பாட்னி என்று சொல்லப்படுகிறது. பட்டினம் என்பது கடற்கரையைச் சார்ந்திருக்கும் நகரைத்தான். பாட்னியைப்பற்றி அராபிய ஆசிரியர்கள் கூறியுள்ள கூற்றிலிருந்து அது கிழக் கரையாக இருக்கவேண்டும் என்று கொள்ளப்படுகிறது. இந்நகரைப்பற்றி இபின் பட்டுடா கூறும்போது ''கல்லாற் கட்டப்பட்ட அழகான மசூதி'' இவ்வூரிலிருப்பதாகக் கூறியுள்ளார். தமிழ் நாட்டில் வேறெங்கும் காணமுடியாத அவ்வளவு அழகான கல்லாற் கட்டப்பட்ட மசூதி இன்றும் அங்கு காணப்படுகிறது. இதைப் பெரிய மாபாரிலுள்ள ஒரு நகரம் என்று டிமிஷ்க் அறிவிக்கிறார்.

## டாஷ்டன் :

இராமனதபுரம் மாவட்டத்திலுள்ள தேவிப்பட்டினமே டாஷ்டன் என்று அழைக்கப்பட்டது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தேவிப்பட்டினம் ராமனதபுரத்திலிருந்து பதினேராவது மைலில் இருக்கிறது. இது பெரிய மாபாரில் தொண்டியை அடுத்து விளங்கும் நகராகும் என்று டிமிஷ்க் குறிப்பிடுகிறார். இது அந்த நாளில் சிறந்ததொரு துறைமுகப் பட்டினமாக இருந்திருக்க வேண்டும்.

## தண்டா :

தொண்டித் துறைமுகம் அராபியர்களால் தண்டா என்று அழைக்கப்பட்டது. டிமிஷ்க், தண்டா பெரிய மாபாரிலுள்ள ஒரு சிறந்த நகரம் என்று குறிக்கிறார். இது காளையார் கோவிலி

விருந்து ஏறத்தாழ இருபது மைல் தொலைவிலிருக்கிறது. சங்க காலத்தில் இவ்வூர் பெருமை வாய்ந்த வொரு துறைமுகப் பட்டினமாக விளங்கி வந்தது. சீன நாட்டு வாணிகம் இப்பட்டினத்தில் செழித்தோங்கியிருந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

## அபாதூர் :

மாபாரிலுள்ள ஏழு சிறந்த நகரங்களில் இதுவும் ஒன்று என்று டிமிஷ்க் கூறுகிறார். பாக்ஜலசந்தியிலுள்ள அதிராம்பட்டினம் என்ற துறைமுகம் அபாதூ என்று அராபியர்களால் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது பட்டுக்கோட்டையிலிருந்து ஏழாவது மைலிலிருக்கிறது. அதிராம் பட்டினம் அதிவீரராம பட்டினம் என்ற சொல்லின் திரிபாகும். 1562-7ல் ஆண்ட அதிவீரராமன் என்ற பாண்டிய அரசனால் இந்தப்பட்டினம் சீர்திருத்தப்பட்டது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இது ஒரு முக்கிய துறைமுகப் பட்டினமாக விளங்கி அராபிய கலாச்சாரம் பரவத் தொடங்கியதால் முஸ்லிம் மதத்தைத் தழுவியவர்கள் இவ்வூரில் பெரும் பகுதியினராக விளங்குகின்றனர். இவ்வூருக்கும் இலங்கைக்கும் வாணிகத் தொடர்பு இப்பொழுதும் இருந்து வருகிறது.

## மனிபாட்டன் :

தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினத்தைத்தான் அப்துல் ப்விதா இவ்வாறு அழைக்கிறார். இது மாபாரின் கடற்கரையைச் சேர்ந்தவொரு பட்டினம் என்று அவர் குறிப்பிடுகிறார். ரஷீத்-அல்-தீன் என்பவர் நாகப்பட்டினத்தை மலிபாட்டன் என்று அழைக்கிறார், தாலமி என்ற கிரேக்க அறிஞன் நிகமாஸ் என்று அழைக்கிறான். இது ஈராயிரமாண்டுகட்கு முன்னரே சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியிருந்திருக்கிறது.

## க்ஆய்ரா :

டிமிஷ்க் காவேரிப் பட்டினத்தைத்தான் க்ஆய்ரா என்று அழைத்துள்ளார். பெரிய மாபாரிலுள்ள மிகப் பெரிய நகரங்களில் ஒன்று அது என்று டிமிஷ்க் கூறுகிறார். அந்தக்காலங்களில் சோழநாட்டின் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது கவேரிப் பட்டினமாகும். இது காவிரிப்பூம்பட்டினம் என்றும், புகார் என்றும், பூம்புகார் என்றும் சங்ககால இலக்கியங்களில் வழங்கப் பெறுகின்றன. காவிரி கடலொடு கலக்குமிடத்தில் ஒரு சிற்றூராகத் தற்பொழுது காட்சியளிக்கிறது.

## கஞ்ச :

காஞ்சிபுரம், கஞ்ச என்று அழைக்கப்பட்டது அராபிய எழுத்தாளரால்! கஞ்சிபுரத்தைப் பற்றி இபின் குர்தாதபேயும், இத்ரிசியும் குறிப்பிடுகிறார்கள். அரிசியும், புஞ்சைப் பயிர்களும் இங்கு மிகவாக உற்பத்தியாவதாக இருவரும் கூறியிருக்கிறார்கள். பழவகைகளும் தேங்காய்களும் கிடைப்பதாகவும் எழுதியுள்ளார்கள். சாமண்டாரிலிருந்து இது முப்பது மைல் தொலைவிலிருப்பதாக இத்ரிசி கூறுகிறார். சாமண்டார் என்று குறிப்பிடப் படுவது சதுரங்கப் பட்டிணமாக இருக்கலாமோ என்று எண்ணவும் இடமேற்படுகிறது.

## குப்ரா-வா-கபீர் :

கங்கைகொண்ட சோழபுரமே குப்ரா-வா-கபீர் என்று குறிக்கப் பெற்றிருக்கிறது இதைப்பற்றி டிமிஷ்க் கூறும்போது, இது மாபாரிலுள்ள ஒரு அழகான நகரமாகும் என்று கூறுகிறார். இது திருச்சி மாவட்டத்தில் ஜயங்கொண்ட சோழபுரத்திலிருந்து ஆறு மைல் தொலைவிலிருக்கிறது. கி.பி. 1011-44-ல் ஆண்ட சோழ மன்னனான இராஜேந்திர சோழன் காலத்தில், அவனால் அழகுபடுத்தப்பட்ட நகரந்தான் கங்கைகொண்ட சோழபுரம். இது ஏறத்தாழ நூறு ஆண்டுகள் சோழரது தலைநகராக இருந்து வந்தது. இராஜேந்திர சோழன் வடநாட்டில் கங்கைவரை சென்று வென்று வந்ததின் நினைவுக்குறியாக வைக்கப்பட்ட பெயரே கங்கை கொண்ட சோழபுரம்.

## மந்தரி :

மந்தரி என்று அழைக்கப்பட்டது, மதுரையைத்தான் இதையே மந்தூர்க்பூன் என்றும், மந்தூர்க்பூ என்றும் மந்திர், பீன் என்றும் குறிப்பிட்டனர். மசூஊதி யாகூத் காஜ்வானி, அப்துல் ப்விதா ஆகியோர் மதுரையைப்பற்றிக் குறிப்பு எழுதிவைத்துள்ளனர். அபூதுலாப் ஜாஜுஅல்லாவிலிருந்து காஷ்மீருக்குப் போய் அங்கிருந்து காபூலுக்குச் சென்று, பின்பு இந்தியக் கடற்கரை வழியாகத் திரும்பி மதுரை நகருக்கு வந்து சேர்ந்ததாக அவர் கூறியுள்ளதாக யாகூத் அறிவிக்கிருர். இவ்வூரையடுத்துள்ள காடுகளில் மூங்கிலும் சந்தனமும் ஏராளமாக இருந்தன வென்றும், இவ்வூரிலுள்ளார் வேண்டும் குடிநீரைக் குளத்திலிருந்தே பெற்றுக் கொண்டார்களென்றும், யாகூத் அறிவிக்கிருர். மூங்கிலிலிருந்து எடுக்கப்பட்ட தபாஷீர் என்ற பொருள் வெளியூர்களுக்கு இவ்வூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அவர் கூறுகிருர். காஜ்வானி கிட்டத்தட்ட யாகூத் கொடுத்த கருத்தைக் கொடுக்கிருர். மந்தூர்பீன் என்று சொல்லப்பட்ட இந்த மதுரைப்பட்டினம் பாண்டிய மன்னரது தலைநகராக இருந்தாலும், பண்டைக் காலந்தொட்டுப் பெரியதொரு நகராக விளங்கி வந்ததாலும், வாணிகம் ஓங்கியிருந்ததாலும், அராபிய நாட்டார் பலரும் இந்நகர் நோக்கி வந்திருக்கின்றனர்.

## க்காயின் :

காளையார் கோவில் என்று இற்றைக்காலத்தில் வழங்கப்படும் ஊரே க்காயின் என்று அரபி நாட்டவரால் அக்காலத்தில் அழைக்கப் பட்டிருக்கிறது இவ்வூரைப் பற்றி டிமிஷ்க் கூறும்போது, மாபாரிலுள்ள மிகப் பெரிய நகரங்களில் இதுவும் ஒன்று என்று குறிப்பிடுகிருர். காளையார் கோவில் என்பதே கானப்பர் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுர மாவட்டமும், புதுக்கோட்டையின் தென்பாகமும் சேர்ந்த பகுதியாகிய கான நாட்டில் காளையார் கோவில் சிறப்புப்பெற்றதொரு வாணிப நகராக இலங்கி வந்திருக்கிறது. இற்றைப் பொழுது செட்டிநாட்டின் முக்கிய பகுதியாக இருக்கும் காரைக்குடிதான் கான நாட்டின் எல்லைப்புறக் காவற்படை தங்கியிருந்த ஊராக அக் காலங்களில் விளங்கி யிருந்திருக்க வேண்டும். அராபியரின் வாணிகத் தொடர்பு இப்பகுதிகளோடு ஒன்றியிருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. * * *

* * * இதுகாறும் கூறியவற்றிலிருந்து அரபிநாட்டார் திராவிடத்தின் எல்லைக்குட்பட்ட, மேலைக் கடற்கரையிலுள்ள மங்களூரிலிருந்து குமரிமுனை வரையிலும், பின் கீழக்கடற்கரையில் குமரிமுனையிலிருந்து காஞ்சிபுரத்தை யொட்டி விளங்கும் மாபலிபுரம் வரையிலுமுள்ள பல துறைமுகப் பட்டினங்களோடு தொடர்புகொண்டிருந்த தன்மை தெள்ளிதின் புலனுகின்றது. அவர்கள் எல்லோரும் உள்நாட்டு நகரங்களைக்காட்டிலும் கடற்கரைப் பட்டினங்களோடுதான் நெருங்கிய தொடர்புகொண்டிருந்திருக்கிறர்கள். உள் நாட்டு நகரங்களில் மிகச் சிறப்புவாய்ந்தனவான வஞ்சி, காஞ்சி, கங்கை கொண்ட சோழபுரம், கரூர், மதுரை, காளையார்கோவில் ஆகிய நகரங்களை மட்டுமே அவர்கள் நன்கு அறிந்திருக்கின்றனர். மேலும் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு எவ்வளவு கல்கள் தொலைவு என்றும், பிரயாணம் எவ்வளவு நாட்கள் ஆகும் என்றும் வரையறுத்துக் கூறியிருக்கிறர்கள். இந்த வரையறை மேலும் மேலும் வரும் அராபியருக்கு வழிகாட்டியாக இருந்திருக்

கிறது. இந்த நோக்கத்தோடேயேதான் திராவிடத்தின் சில அறிவுபற்றிய குறிப்புகளை மிகக் கவலைகொண்டு அவர்கள் எழுதிவைத்துள்ளார்கள். திராவிடத்தைக் கண்டதும் அவர்களுக்கு மகிழ்ச்சிதரும் பொருளாகக் காட்சியளித்தது 'மிளகு'. ஆகவேதான் திராவிடத்தை 'மிளகு நாடு' என்று பொருள்படும் "மலிபார்" என்று அழைத்தனர்.

மோதும் அலைகள் முப்புறமும் மொய்த்து நிற்க, இடையில் இறுமாந்து கிடக்கும் இன்பத் திராவிடத்தை, அலைகடலில் கலமேறி கடந்துவந்த அராபியர் அதன் கடற்கரைப் பட்டினங்களிலே நின்று மக்களைக் கண்டனர்; அவர்கள் கண்ட விதத்தைக் காண்போம்.

(தொடரும்)



முழங்கால் சேற்றினிலே முக்கி விளைத்தவன்

ஒரு சகோதரன் அவன் பள்ளப்பயல் — அதை

மூக்குக்கு நாக்குக்குந் தண்ணீர் காட்டித்

தின்னும் மோசக்காரன் மேலாம்.

# ஏ. என். இரத்தினம் அண்ட் கோ

★

எல்லோரும் விரும்பும் புகழ் பெற்ற

திருவாரூர்

A. N. இரத்தினம் அண்ட் கம்பெனியாரால்

தயாரிக்கப்படும்

## பிர்மா மார்க் புகையிலையை

உபயோகியுங்கள்

குணம்! மணம்!! காரம்!!!

நிறைந்தது

★

தலைமை ஆபீஸ்:
A. N. இரத்தினம் & கோ
திருவாரூர்

கிளை ஆபீஸ்:
A. N. இரத்தினம் & கோ
9. பிராட்வே-சென்னை 1.

# விடுதலை வேட்கை
# உயிரின் இயற்கை

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

★

மெத்தை வீட்டு வெள்ளை நாய்,
வீட்டு வாசற் படியிற் போய்க்
கத்திக் கொண்டே சற்று நின்று
கறுப்பு நாயை வா என்று
கத்திக் கத்திக் கூவிற்று.
கறுப்புத் தெருநாய் போயிற்று.
"மெத்தை வீட்டில் வசிக்கின்றாய்
வேலைக் கென்ன புசிக்கின்றாய்?"
என்று கறுப்பு, வெள்ளையுடன்
இளித்துக் கொண்டே சொன்னவுடன்
"ஒன்றும் இங்கே குறை இல்லை
உரைப்பேன் கேட்பாய் என் சொல்லை
அன்றன்றைக்கும் பாற் சாதம்
அப்பம் ரொட்டி நவ நீதம்

பன்றியைப் போல் வீங்குகின்றேன்
பட்டு மெத்தையில் தூங்குகின்றேன்
இருப்பாய் நீயும் என்னோடே"
என்றது வெள்ளை ஆன்போடே.
காதால் கேட்ட கறுப்புதான்
"கழுத்தில் வடுவாய் இருப்பதேன் ?
ஏதோ சொல்வாய்" என்றதே
இளித்துக் கொண்டே நின்றதே.
"ஏதாகிலும் செய்யாமல்
எனது கழுத்து நையாமல்
காதோரத்தில் வார்கொண்டு
கட்டிவைக்கும் வடுவுண்டு."
அதனைக் கேட்ட கறுப்புதான்
"அடிமையாய் நீ இருப்பதேன் !
கதிதான் கெடநீ நடப்பதா ?
கட்டுப்பட்டுக் கிடப்பதா ?
சதிராய் உன்னிடம் அண்டேனே !
சதையில் ரத்தம் சுண்டேனே !
இதனால் அஞ்சி ஓடுதுபார் !
இன்னும் ஓடுது ஓடுதுபார் !

# மலர்த் தோட்டம்

(தொடர் கதை)

[சென்ற இதழில் :—

**தோ**ட்டத்தில் ராஜுவை விட்டுப் பிரிந்த பவானி அன்று இரவு நெடு நேரம் தூங்காமல் இன்ப உணர்வு அலைகளை உள்ளத்தில் எழுப்பிக் கொண்டிருந்தாள். மறு நாள் காலை தோட்டத்தில் ராஜுவும் பவானியும் சந்திக்கிறார்கள். சில நாட்களில் ராஜு தன் ஊருக்குப் போய் விடுகிறான். போதும் போது பவானியின் விரலில் ராஜுவின் மோதிரம் ஏறுகிறது. இரண்டு கோடைகள் கழிகின்றன. மோதிரம், கைக்குட்டை, தோட்டம், மணமலர்கள் பவானியின் நினைவுக்குறிகளாகின்றன. ராஜுவின் சித்தப்பா சிவானந்தம் பிள்ளை ஊரிலிருந்து வந்திருக்கிறார்; உடன் ராஜு வரவில்லை. பிறகு,.....................]

**சி**வானந்தம் பிள்ளை வந்த அன்று பகல் சாப்பாடு எங்கள் வீட்டில் ஏற்பாடானது. சமையல் வேலை முழுவதையும் சமையற்காரனை நம்பி விடாமல் மாமியே சமையலில் ஈடுபட்டார்கள். சமையற்காரன் உதவியாகவே இருந்தான். பெரிய பாத்திரங்களைத் தூக்கி எடுக்கமட்டும் அவன் வந்தான். மற்றக் காரியங்களனைத்தும் மாமியின் கண்காணிப்பில் நடந்தது.

மாமி அடுப்பங்கரையில் நுழைந்து விட்டால் எனக்குதான் வேலை அதிகரிக்கும். விநாடிக்கு விநாடி கூப்பிட்டு ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டிருப்பார்கள்; சமையலில் எனக்கும் பழக்கம் உண்டாக வேண்டுமென்பதாக, சிறு, சிறு வேலைகளை எனக்குக் கொடுப்பார்கள், அடுப்படியில் மாமி உட்கார்ந்து கொண்டு, சாமான்களை எடுத்துவர என்னை அனுப்பும் பொழுதுதான் தொல்லைகள் வரும்.

"போய் சீரகம் எடுத்து வா" என்ற கட்டளை பிறந்ததும், சாமான் அலமாரியில் அதைத் தேடி பார்ப்பேன். ஒரே அளவில் இருபது, முப்பது டப்பிகள் இருந்தன. அவைகளில் சீரக டப்பா, எது என்று கண்டு பிடிப்பது? கொஞ்சநாள் கஷ்டப்பட்டபின், எளிதில் பொறுக்குவதற்காக ஒவ்வொரு டப்பி மீதும் பெயர் எழுதி ஒட்டினேன். அதுவும் சரிப்பட்டு வரவில்லை

"மிளகு டப்பாவை எடுத்துவா," என்று மாமி உத்திரவிட்டதும், உடனே அதை எடுத்துவந்து மாமியின் அருகே வைத்தேன். அதைத் திறந்துபார்த்து,

"மிளகு கேட்டால் கடுகைக் கொடுக்கிறாயே," என்று மாமி அலுத்துக் கொண்டார்கள்.

"வெளியே எழுதியிருக்கிறதே!"

"எழுதியிருந்தால் உள் இருக்கும் கடுகு மிளகு ஆகிவிடுமோ? திறந்து பார்க்க வேண்டும்."

அந்தப் பிசகு எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. சமையற்காரனைக் கூப்பிட்டுக் கேட்டேன். "அந்த டப்பி காலியாயிருந்தது; அதில் போட்டுவைத்தேன்," என்று அவன் சமாதானம் சொன்னான். காலியாயிருந்த அவன் மூளையில் எதைப் போட்டு அடைப்பது?

அங்குமிங்கும் நான் போய்க்கொண்டிருக்கும்பொழுது சாந்தா என் பின்னால் சுற்றிக் கொண்டிருப்பாள். அவள் உதவிக்கு இருப்பதால் வேலை தான் இரட்டிக்கும். சர்க்கரை எடுத்துக்கொண்டு அலமாரியை மூடிய பின் அவளுக்காக மறுபடியும் திறக்க வேண்டிவரும். வரும் பொழுது போகும் பொழுதெல்லாம் கற்கண்டு, திராட்சை, வெண்ணெய் ஏதாவது அலுக்காமல் கேட்டுக்கொண்டே இருப்பாள். அவள் அருகில் இருந்தால், தட்டில் இருக்கும் முந்திரிபருப்பில் பாதி காணமற் போய் விடும். தோட்டத்திலிருந்து வீடு வருவதற்குள் அவளிடம் கொடுக்கப்பட்ட கருவேப்பிலைக் கட்டு கரைந்து, ஓரிரண்டு கொத்துகளே மிஞ்சும். எங்கேயாவது பார்த்துக் கொண்டு வழியில் போட்டு விடுவாள். ஒரு சமயம் பால் சொம்பை எடுத்துவர என்னை மாமி அனுப்பினார்கள். சொம்பை, தான் எடுத்து வருவதாக சாந்தா பிடிவாதம் செய்தாள். அவளிடம் கொடுத்தனுப்பினேன்.

மாமியிடம் போனதும், "பவானி, பால், தண்ணீர் மயமாயிருக்கிறதே? யார் கலந்தது?" என்று கேட்டார்கள்.

"அப்படியே எடுத்து அனுப்பினேன்."

"இதோ பார்! நான் சொல்வது பொய்யா?" என்று இரண்டு சொட்டு கீழே விட்டார்கள். வெள்ளை நிறமிருந்ததே யொழிய, தண்ணீரா யிருந்தது. வேறு யாரும் செய்திருக்க முடியாது. சாந்தாவைக் கேட்டேன்.

"கொஞ்சம் சிந்திவிட்டது, தண்ணீரை விட்டேன்," என்று சாந்தா சமாதானம்சொன்னாள். சொம்புவேறு நசுங்கியிருந்தது. கீழே உருட்டி, பாலைக் கொட்டிவிட்டு, ஏதோ சமாதானம் சொல்கிறாள். நல்லவேளை! சொம்பு நசுங்கி யிருந்ததை மாமி பார்க்கவில்லை.

இவற்றைவிட சமையல் வேலைகளை மாமி எனக்கு இடும்பொழுதுதான் திண்டாட்டம் வந்துவிடும். "இரண்டு கல் உப்பை இதில் போடு," என்று எனக்காகக் காத்திருப்பார்கள்.

இரண்டு கல் உப்பு! அதன் அளவு எனக்குப் புரிவதில்லை. உப்பு ஜாடியை அப்படியே எடுத்துவந்து மாமி பக்கத்தில் வைத்துவிடுவேன்.

"எடுத்துப் போடு, இளவரசி, நிற்கிறாயே! எப்பொழுதுதான் உப்பும் புளியும் போடக் கற்றுக் கொள்வது?" என்று மாமி கேலி செய்வார்கள்.

ஒரு பிடி உப்பை எடுத்துப் போடுவேன். அதுவே பயமாயிருக்கும்; அதிகமாகிவிட்டால் என்ன செய்வது? பொட்டாசியத்தை தண்ணீரில் போடுவதைப்போல, மிக மெதுவாக உப்பைப் போடுவேன்.

"இன்னொரு கை எடுத்துப் போடு! ஒன்றும் குறைந்துவிடாது," என்று மாமி கூறுவார்கள்.

மற்றொரு பிடி உப்பைக் கலக்கியதும், "எப்படி இருக்கிறது?" என்று மாமி கேட்டதும், நான் சுவை பார்த்துவிட்டு, "சரியாயிருக்கிறது" என்ற முடிவுக்கு வருவேன்.

"சரியாயிருக்கிறதா?" என்று மறுபடியும் மாமி அதட்டும்பொழுது, உப்பு போதாது என்று தான் தோன்றும். என்னுடைய தடுமாற்றத்தைப் பார்த்ததும் "படித்த லட்சணம், உப்பு போட்டு சரிபார்க்கக்கூடத் தெரியவில்லை," என்று குத்திப் பேசுவார்கள்.

"எங்கள் பள்ளிக் கூடத்தில் சமையல் பாடம் சொல்லித் தருவதில்லை"

என்று நான் போய் விடுவேன். உண்மையில் எந்தப் பள்ளிக் கூடத்தில்தான் சமையல் பாடம் வைத்திருந்தார்கள்?

"மடையா" "மடையா" என்று வாத்தியார் 'புத்திசாலி'களைப்புகழ்ந்த போதிலும், மடைத்தொழில் பாடத்தில் சேரவில்லை. அதில் மாமிதான் எனக்கு வாத்தியார். முதலில் கஷ்டமாயிருந்த போதிலும், வேடிக்கையாகவே அது பழக்கப்பட்டுவிட்டது.

சிவானந்தம் பிள்ளை வந்த அன்றைக்கு, பகல் முழுவதும் எனக்கு வேலை சரியாயிருந்தது. இரவு சாப்பாடு முடிந்ததும், களைப்பினால் அயர்ந்து, என் அறையில் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தேன். வெளித் திண்ணையில் மாமா, சிவானந்தம் பிள்ளை, பட்டா மணியர், அவருக்குத் தெரிந்த இரண்டு மூன்றுபேர்கள் சீட்டாடிக் கொண்டிருந்தனர். அங்கு நடந்த பேச்சு என் காதில் சரியாக விழவில்லை. கொல்லென்று சிரிப்பு வரும். பிறகு வரும் வார்த்தைகள் புரிவதில்லை. மத்தியில் சாந்தாவின் கீச்சுக்குரலும் கேட்டது. பட்டா மணியருடன் அவள் வம்பளந்து கொண்டிருந்தாள். கதவுக்கு உட்புறத்தில் வெற்றிலைத் தட்டுடன், திண்ணைப் பேச்சைக் கவனித்துக்கொண்டு மாமி உட்கார்ந்திருந்தார்கள். நான் பத்திரிகை மீதுள்ள எழுத்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சாந்தா அறைக்குள் வந்து, சோம்பல் முறித்தாள். "ஏன் வந்துவிட்டாய்?" என்றேன்.

"அப்பா போய் படுக்கச் சொன்னார்கள்."

"தூங்குவதுதானே!"

"தூக்கம் வரவில்லை."

"பாடத்தைப்படி."

"பரீட்சையெல்லாம் முடிந்து விட்டது. அடுத்த வாரத்திலிருந்து லீவு."

எனக்கும் சோம்பலாக இருந்தது. சாந்தாவோ படுக்கைக்குப் போகவில்லை; பென்சிலால் கிறுக்கிக்கொண்டிருந்தாள். பென்சிலை வாங்கி வைத்தேன். அவள் வெளியே போக எழுந்தாள்.

"எங்கே போகிறாய்?"

"திண்ணைக்கு"

"அங்கு போகாதே! அப்பா அதட்டுவார்கள்."

"திண்ணையில் உட்காரவில்லை வாசற்படியில் இருக்கிறேன்."

"அம்மா உட்கார்ந்திருப்பார்கள் பேசாமல் போய் தூங்கு."

"தூக்கம் வரவில்லை," என்று அலுத்துக் கொண்டாள். பின், அருகில் வந்து, என் தலைப் பின்னலை அவிழ்த்தபடி "அக்கா, ராஜு ஏன் வரவில்லை தெரியுமா?" என்றாள்.

"ஏன்?"

"பட்டணத்தில் இருக்கிறாராம்."

"அது யாருக்குத்தான் தெரியாது."

"ராஜுவுக்குக் கல்யாணம் நடக்கப் போகிறதாம்."

"உனக்கு யார் சொன்னது?"

"இந்த வருஷமே கலியாணம் செய்துவிட வேண்டுமென்று அப்பாவிடம் அவர் சொன்னார்." சாந்தா, என் தலைமயிரைக் கலைத்தபடி, "அப்பா வந்து...." என்று ஆரம்பித்தாள்.

"அப்பா என்ன சொன்னார்?"

"அப்பா ஒன்றும் சொல்லவில்லை."

"ராஜுவின் சித்தப்பா, வேறு ஏதாவது முக்கியமாகச் சொன்னாரா?"

சாந்தா சிறிது நேரம் யோசித்தாள். "அக்கா! அவர்கள் வீட்டில் வண்டி மாடு வாங்கியிருக்கிறார்களாம்; அது முரட்டுத்தனமாக......"

"சே, அதுவல்ல. ராஜுவைப் பற்றி என்ன சொன்னார்?"

"அவர் ஒன்றும் சொல்லவில்லை. 'யாருக்கப்பா கல்யாணம்; ராஜுவுக்கா?' என்று கேட்டேன். அப்பா என்னை அதட்டி உள்ளே போகச் சொன்னார்கள். நான் வந்துவிட்டேன்" என்று சாந்தா எழுந்தாள்.

"திண்ணைக்குப் போகிறாயா?"

"இல்லை, படுக்கப் போகிறேன்."

"திண்ணைக்கு வேண்டுமானல் போ."

"அப்பா வைவார்கள்."

"வைதால் வந்து விடு."

"போகட்டுமா?" என்று சாந்தா அடி யெடுத்து வைத்தாள்.

அதற்குள் "அம்மா, வையும்" என்று திரும்பினுள்.

"அம்மா ஒன்றும் சொல்லமாட்டார் கள். நீமட்டும் பேசாமல் அங்கு உட் கார்ந்திருக்க வேண்டும்."

"எனக்குத் தூக்கம் வருகிறது" என்று கண்ணைக் கசக்கினுள்.

"தூக்கம் வரவில்லை என்ருயே!"

"இப்பொழுது தூக்கம்" என்று ஓடிவிட்டாள்.

அமைதியான நீர்ப்பரப்பில் கல்லைப் போட்டால் அலைகள் உண்டாகின்றன. அதே சமயத்தில் கல்லும் மறைந்து விடுகிறது. அதைப்போல் முக்கிய மான இரண்டு மூன்று வார்த்தை களைப் போட்டுவிட்டு சாந்தா ஓடி விட்டாள். சிறு கல் குமுறலை உண்டாக்குவதில்லை; நீர்ப்பரப்புக்கு அழகையே கொடுக்கும். தெளிந்த நீரில் வட்டம் வட்டமாகத் தவழ்ந் தோடும் சிறு சிறு அலைகளே உண் டாகும். சாந்தா சொன்னதும் என் எண்ணங்கள் வட்டமிட்டன.

சிவானந்தம் பிள்ளை வந்திருக்கிருர், ராஜுவின் திருமணத்தைப் பற்றி மாமாவிடம் பேசியிருக்கிருர். இந்த வருஷமே நடந்துவிடவேண்டு மென் றும் முடிவாகச் சொல்லிவிட்டார்.

காலையில் அவரைக் கண்டதும் ராஜுவைப்பற்றி கேட்டது என் கவ னத்துக்கு வந்தது. அதை நினைத்ததும் எனக்கே வெட்கமாயிருந்தது.

அறைக்குள் உலவினேன். உட் கார்ந்து கண்களை மூடினேன். எதைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்று எனக்கே புரியவில்லை. வரை யற்ற நிலையில் மனம் சுற்றிக்கொண் டிருந்தது. கண்களைத் திறந்து சுற் றும் முற்றும் பார்த்தேன். விளக்கு ஒன்றுதான் என்னை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தது. அதை அடக்கி விட்டு நாற்காலியிலேயே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன்.

* * *

"பவானி! இங்கே வாயேன்" என்று பக்கத்து வீட்டம்மா கூப்பிட்டார்கள். அருகில் போனதும் ஏதோ ரகசியம் சொல்வதுபோல காதருகே குனிந்து லோலக்கைத்தொட்டுப் பார்த்தார்கள். "இதுதான் புதிதாகச் செய்ததா?"

"ஆமாம்" என்று தலையசைத் தேன். அவர்களுக்குப் பக்கத்தி லிருந்த இன்னெருவரும் லோலக்கைப் பார்த்தார்கள்.

"அழகாயிருக்கிறது. ஆனல் இந்த மாதிரி எத்தனை நாளைக்கோ! அது தான் நாளுக்குநாள் மணிக்கு மணி மாறுகிறதே!"

"நான் போகிறேன்," என்று வந்து விட்டேன். நான் திரும்பும்பொழுது "அந்தப் பெண்ணைத் தன் பிள்ளைக் குக் கேட்கத்தான் நேற்று அவர் வந் தார்....." என்று பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் மற்றவருக்குச் சொல்லி யது என் காதில் விழுந்தது. நான் வேக மாக நடந்து வீட்டுக்குள் போய் விட் டேன்.

ஏதாவதொரு வேலையை உன்னிப் பாகச் செய்தால் தேவலை என்று தோன்றியது. ஆனல் எதுவும் கவனத் துக்கு வரவில்லை. நீரில் மிதந்திடும் மலரைப் போல, வானில் உலாவிடும் பறவையைப் போல கவலையற்று நட மாடிக் கொண்டிருந்தேன்.

"என்னடியம்மா, ஆட்டபாட்டம் அதிகமா யிருக்கிறது, காலையிலி ருந்தே" என்று மாமி இடித்து விட்டுப் போனுர்கள். வாய்க்குள்ளாகவே பாடிக் கொண்டிருந்ததை நிறுத்தி னேன். "சாந்தா கழுத்தில் மின்னல் சங்கிலியை ஏன் போட்டாய்? தொலைத்துவிடப் போகிருள். கவன மாயிரு"

"சரி, மாமி" என்றேன். பக்கத்தி லிருந்த மேஜை மேல் வெற்றிலைத் தட்டும் அதன் கீழ்க் காகிதங்களும்கிடந் தன. அவற்றில் மஞ்சள் காகிதமும் ஒன்று நீட்டிக் கொண்டிருந்தது. அதை எடுத்தேன். அதனுள்ளிருந்து

மாமாவுக்கு வந்த கடிதம் ஒன்று விழுந்தது. யாரோ ஒருவருடைய கல்யாணப் பத்திரிகை. கீழே "இப்படிக்கு சிவானந்தம் பிள்ளை" என்றிருப்பதை பார்த்து ஆச்சரியத்துடன் படித்தேன். மேலே பார்த்ததும் திடுக்கிட்டேன். "எனது தமையனார் மகன்......செல்வ ராஜுவுக்கும்" வேறு யாரோ ஒருவருடைய மகள் யாரோ ஒரு பெண்ணுக்கும் திருமணம்......நிச்சயிக்கப்பட்டிருப்பதால் ......... வர வேண்டுகிறேன்" திக்பிரமை அடைந்து நின்றேன். மறுபடியும் படித்தேன். நல்ல அச்சில், கொட்டை கொட்டையாக எழுதப்பட்டிருந்தன, படிப்பவர் கண்ணும் மனமும் கூசும்வகையில்! அந்தத் தாளின் பின் பக்கத்தில் சிவானந்தம் பிள்ளை ஏதோ கிறுக்கியிருந்தார்.

மாமாவுக்கு வந்திருந்த கடிதத்திலும் அதேவிதமான கையெழுத்து இருந்தது. தன் தமையன் மகன் ராஜுவுக்குப் பெண் பார்த்து, தான் முடிவு செய்துவிட்டதாகவும், தன் பிள்ளையின் கல்யாணத்தையும் சேர்த்து நடத்திவிட ஆவலுள்ளவராயிருப்பதாகவும், அதற்காக வருவதாகவும் சிவானந்தம் பிள்ளை எழுதியிருந்தார்.

கல்யாணப் பத்திரிக்கையையும், கடிதத்தையும் பார்த்தவுடன் தலை சுழல்வதுபோலிருந்தது. அப்படியே உட்கார்ந்துவிட்டேன். எவ்வளவு மாறுதல்! எவ்வளவு அதிர்ச்சி! நொடிப்பொழுதில் இடிபோன்ற தாக்குதல்! வெறுப்புடன் அந்த அழைப்பிதழை மேஜையின் மேல் வீசியெறிந்தேன். சற்று முன் குளிர்ச்சியாயிருந்த சுற்றுப்புரம் வெம்மையாகத்தோன்றியது. ஒன்றும் புரியாத நிலையிலிருந்தேன். குன்றின் மீது நின்று இயற்கையின் கோலக் கண்டு களிக்கும் நேரத்தில் காலடியிருந்த கற்பாறை நழுவி, அடிப்படை தெரியாத ஆழத்தில் வீழ்ந்துகொண்டிருப்பதைப்போலிருந்தது. பித்துப் பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்தேன் எவற்றின் மீதும் அடங்காத வெறுப்பு ஏற்பட்டது. எங்கேயாவது ஓடிவிடலாமா என்ற எண்ணம உண்டானது.

தலையாரி சத்தம் போட்டபொழுது தான் உணர்வு வந்தது. வீட்டுத் தபாலை அவன் சில சமயங்களில் கொண்டுவருவது வழக்கம். வழக்கம் போல் பத்திரிகை மட்டும் தபாலில் வந்திருந்தது. "பவானி! ஏதாவது வந்திருக்கிறதா?" என்று மாமி கூடத்திலிருந்தபடி கேட்டார்கள்.

திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. பக்கத்திலிருந்த வெற்றுக் கவரைக் கையில் வைத்துக்கொண்டு "எனக்கு மாத்திரம் ஒரு கவர் வந்திருக்கிறது" என்றேன்.

"கடிதாசியா!..."

மற்ற சமயமாயிருந்தால் நானும் சிரித்துக்கொண்டு மதில் சொல்லியிருப்பேன் "பத்மா தான் எழுதியிருக்கிறாள். நாளைக் காலை இங்கு வருகிறாள் ரயில்வே ஸ்டேஷனுக்கு நான் போகவேண்டும்."

தலைவலி என்று சொல்லிக்கொண்டு பகல் முழுவதும் அறையிலேயே அடைந்துகிடந்தேன். விவரிக்க முடியாத சஞ்சலம். விபரித எண்ணங்கள் தோன்றி மறைந்தன. எத்தகைய முடிவுக்கும் வரமுடியவில்லை. யோசிக்க யோசிக்க நிலைமை பயங்கரமானதாகவே காணப்பட்டது.

ராஜுக்கு வேறு திருமணம் நிச்சயித்துவிட்டார்கள். அதைத் தடுத்து மாற்ற முடியுமா? முடியாது. அதை நினைத்து அழுது அறையினுள் புழுங்குக் கிடக்கவேண்டியதுதான்.

எண்ணங்கள் தோன்றிமறைந்தன. எத்தகைய முடிவுக்கும் வர முடியவில்லை, சங்கடமும் வேதனையும்தான் அதிகரித்தன, யோசிக்க, யோசிக்க நிலைமைப்பயங்கரமானதாகவேதோன்றியது.

வீட்டில் தங்குவது முடியாத காரியமென்றே எனக்குப்பட்டது. தங்கியிருந்தால் ஏதாவதொரு திருமணத்துக்கும் உடன்படவேண்டியதுதான் என்று நினைத்தேன். குழப்பமிருந்த நேரத்தின திடீரென்று வருகிற சிறு வழிகூட சரி யென்றுதான்தோன்றும் அன்றைக்கு நானிருந்த நிலையில் தப்பும் வழி யொன்றைத் தேடிக்கொண்டிருந்தேன், வீட்டை விட்டுஎங்கே போவது? அந்தக் கேள்விக்கு எளிதில் பதில்

கிடைக்கவில்லை. சென்னைக்குப்போய் ராஜுவை நேரில் பார்ப்பது. அது சரியானதாக தோன்றவில்லை. கடைசியாக என்னுடன் படித்த பத்மாவின் ஊருக்குப்போய் அங்கிருந்து பார்த்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தேன். அங்கு போனவுடன் நிலைமையைவிளக்கி மாமாவுக்கும் ராஜுக்கும்கடிதங்களெழுதுவதுஎன்று நினைத்தேன். மேலும் மனத்திலேற்பட்ட கலக்கம் என்னுடன் பழகிய பத்மாவுடனிருந்தால் குறையும். தெளிவும் உண்டாகும்.

இருட்டுவதற்கு முன்னதாகவே வீரப்பனைக் கூப்பிட்டு, ரயிலுக்குப் போக விடியற்காலையில் வண்டியைத் தயாராக வைக்கும்படி சொன்னேன், சாப்பிட்டவுடன் எங்கள் வீட்டிலேயே படுத்துக்கொள்ளும்படியும் கூறினேன்.

* * *

நிம்மதியற்ற தூக்கத்துக்குப் பின் கண் விழித்தேன். ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக முதல் நாள் நான் செய்த ஏற்பாடுகள் ஞாபகத்துக்கு வந்தன. போவதா? வேண்டாமா? எங்கே போவது? போன்ற கேள்விகள் திரும்பதிரும்பச் சுழன்றன. கண்ணொளியைத் திடீரென்று இழந்தவன் பார்வையற்ற உலகில் திரிவான்; ஒளி இழந்தோமே என்று ஓரிடத்தில் நிலை பெற்றுஇருக்கமுடியாது; அப்பொழுது தான் அமைதியின்மையும அவசரமும் உண்டாகும். கடிகாரத்திலிருந்து நான்குமணி யொலிகள் சிதறின. சிதறியிருந்த எண்ணங்களை சேகரித்துச் புறப்பட நிச்சயித்தேன். நாலைந்து துணிமணிகளை சிறிய தோற்பெட்டிக்குள் திணித்தேன். அதற்குள்ளிருந்த கைப்பெட்டியை எடுத்தேன். சிறு மோதிரம். அன்புடனும் ஆனந்தத்துடனும் ஒளிவிட்ட அம்மோதிரம் இருட்டில் ஒளியிழந்து இருந்தது. அதை வைத்துப் போக மனமில்லை. விரலில் இட்டுக் கொண்டேன்.

பத்மாவின் வீட்டுக்குப்போய் இன்னும் இரண்டொரு வாரத்தில் வந்து விடுவதாகவும், அதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டாமென்றும் மாமாவுக்குக் கடிதம் எழுதி அவர் மேஜையின்மேல் வைத்துவிட்டு திரும்பினேன். சாந்தா நல்ல தூக்கத்திலிருந்தாள். கடைசிமுறையாக விடை பெற்றுக் கொள்வதுபோலிருந்தது. நான் விளையாடிய கூடம், உறங்கிய இடம், படித்த மேஜை, புத்தகங்கள், ஒரு சுற்றுப் பார்த்தேன். சாந்தாவின் அருகிற்சென்றேன். நெற்றியில் வியர்வை வழிந்து, தலை மயிர் சுருண்டிருந்தது வியர்வையை• துடைத்து, தலை மயிரை ஒதுக்கிவிட்டு, கீழே கிடந்த போர்வையை காலில் போர்த்தேன். சாந்தவை விட்டு ஏன் பிரியவேண்டும்? எனக்கேப் புரியவில்லை. விளக்கை அடக்கிவிட்டு, கதவை மெதுவாகச் சார்த்தி கூடத்துக்குள் வந்தேன்.

''பவானி!'' என்று மாமி கூப்பிட்டாரகள். நான் அசையாது நின்றேன். மறுபடியும் படுக்கையில் உட்கார்ந்து கூப்பிட்டார்கள் பதில் சொன்னேன். நாக்கு குழறி உதடுகள் அசைந்தனவே யொழிய சொற்கள் வெளிவரவில்லை.

''பவானி! பவானி! என்ன வேண்டும்.''

''ஸ்டேஷனிக்குப் போகிறேன்.''

'' அதற்குள்ளாகவா ?''

'' நாழியாகிவிடுமே.''

''சரிபோ குளிர் காற்று அடிக்கும் மப்ளரைக் கட்டிக்கொண்டு போ சீக்கிரம் வந்துவிடம்மா.''

கண்ணில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு தெருக் கதவைத் திறந்தேன். வெளியில் ஒரே இருட்டாயிருந்தது. திண்ணையில் வீரப்பனைத் தேடினேன். அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. தாழ்வாரத்தில் நின்று ''வீரப்பா, வீரப்பா'' என்று கூப்பிட்டேன் சிறிது நேரத்துக்கெல்லாம் திண்ணையிலிருந்து இறங்கி வந்தான்.

''வண்டியைக்கட்டு', என்று அதட்டினேன் வண்டி மாடுகளை ஓட்டி வந்து வண்டியைக் கட்டினான். வெள்ளை மாடுகளும், வீரப்பன் கட்டியிருந்த பெரிய தலைப்பாகையும்தான் வண்டியிருக்கும் இடத்தைக் காண்பித்தன. தட்டுத்தடுமாறி வண்டியில் ஏறினேன் வண்டி நகர்ந்தது.

இலக்கிய ஆசிரியர் — —

# துர்கனிவ்

புதருக்குப் பக்கத்திலிருந்து 'கீச்' 'கீச்' என்ற சத்தம் வந்தது. அச்சத்தத்தைக் கேட்டு' தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் அப்பக்கம் போனான். பாம்பொன்று தவளையைப் பிடித்துக் கொண்டிருந்தது. பாம்பின் பிடியிலிருந்து தப்பி தவளை துள்ளிக் குதித்தோட, அதை விடாமல் சீறிப் பாய்ந்து பாம்பு பின்வந்தது. ஒன்றோடொன்று போராடின. உயிர் வேண்டி தவளையும், உணவு வேண்டி பாம்பும் போராடின. பாம்பும் தவளையும் போராடுவதை சிறுவன் பார்த்துக் கொண்டிருந்தான். பாம்பு என்றதும் அஞ்சி ஓடாமல், ஆச்சரியத்துடன் அவற்றைக் கவனித்தான். ஆச்சரியத்தால் மலர்ந்த சிறுவனின் முகத்தில் சஞ்சலம் உண்டானது. அவனது சிந்தனையில் சிறு தடுமாற்றம் ஏற்பட்டது. பாம்பும் தவளையும் ஏன் போராடுகின்றன? தத்துவ ஞானிகளும் தர்க்க வல்லுநர்களும் ஆராய வேண்டிய கேள்வி. அதை அச்சிறுவன் தன்னையே கேட்டுக் கொண்டான். எதிரில் உயிர்ப் போராட்டம் நடைபெற்றது. அவன் சிந்தனையில் பெரும் போராட்டம் குமுறியது.

"ஐவான்! ஐவான்!" என்று வீட்டிற்குள்ளிருந்து வளர்ப்புப் பெண் கூப்பிட்டாள். அந்த இடத்தை விட்டு சிறுவன் அகன்றான். பாம்பும் தவளையும் போராடிய காட்சி அவன் மனதை விட்டு அகலவேயில்லை. பாம்பும் தவளையும் ஏன் போராடின என்ற கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொண்டான். அதற்கு விடையை எச் சந்தர்ப்பத்திலும் எதிர் பார்த்தான்.

"அகில உலகங்களையும், அண்ட சராசரங்களையும், அனைத்துயிரையும் அருள மிக்க ஆண்டவன் உண்டாக்கினார்." அத்தகைய அருள் மிக்க ஆண்டவன் தவளையையும் படைத்து அதன் அருகில் பாம்பையும் ஏன் படைத்தார் என்று சிறுவன் கேட்டுக் கொண்டான்.

"பரமண்டலத்திலுள்ள பரம பிதா அனைத்தையும் பாதுகாத்து வருகிறார்" பாம்புக்கு பாதுகாப்பு அளித்தாரே யொழிய தவளைக்குப் பாதுகாப்பளிக்க அப் பரமபிதா தவறி விட்டார் என்று சிறுவன் எண்ணினான்.

"மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான். உயிர் கொடுத்தவன் உணவு கொடுப்பான். சிறு பறவைக்கும் அதன் உணவை பக்கத்திலேயே கருணைமிக்க கர்த்தர் உண்டாக்கினார்" இந்த உபதேசத்தை பையன் ஏற்றுக் கொள்ள மறுத்தான், பாம்புக்கு உணவு கொடுக்க முன்வந்த கடவுள தவளையின் உயிரைப் பாதுகாக்க ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. உணவு கிடைத்ததும் "இன்றைக்குக் கிடைத்த உணவு உன்னுடையது" என்று உணவுக்கு முன் கூறும் பிரார்த்தனையை பாம்பு கூறலாம். பாம்பின் நஞ்சினால் துடிதுடிக்கும் தவளை தன்னையும் பாம்பையும் படைத்தவனை தயாபரனே என்று எப்படி துதிசெய்யும்? ஆண்டவனின் படைப்பில் உள்ள அலங்கோலம் சிறுவனின் உள்ளத்தில் அலைமோதச் செய்தது. நீண்ட நாட்களாகச் சிந்தித்தான்.

பின் தன்னுலகிலிருந்து ஆண்டவனை
அகற்றிவிட்டு, அந்த அனுதை உலகுக்
குப் பாடுபட்டான். பாப்பு—தவளை
போராட்டத்திலிருந்து மதக் கேட்பாடு
களிலிருந்த பயபக்தியும், ஆண்டவன்
அருளிலிருந்த நம்பிக்கையும் போய்
விட்டன! சிறு வயதிலேயே பெரிய
கேள்வியைக் கேட்டுவந்த அச் சிறு
வன் தான் பிற்காலத்தில் உலகம் போற்
றும் உயர்தரச் சிந்தனைச் சிற்பி,
இலக்கிய ஆசிரியனுக விளங்கினுன்.
ஐவான் துர்கனிவ் - ருஷிய இலக்கிய
ஆசிரியர், உலக இலக்கிய அறிஞர்கள்
முதல் வரிசையில் விளங்குபவர், அவர்
தான் பாம்பு-தவளைப் போராட்டத்தை
சிறுவயதிலேயே சிந்தித்தவர்.

ருஷிய நாட்டின் உணவுக் களஞ்சிய
மாக விளங்கும் உக்ரேன் பகுதிக்கு அரு
கில் 1818 அக்டோபர் 28-ந் தேதி துர்
கனிவ் பிறந்தார். அவருடைய தாய்
பெரும் பணக்காரக் குடும்பத்தைச்
சேர்ந்தவள். அவள் பேரில் ஏராள
மான சொத்து இருந்தது. அவருடைய
தந்தை இராணுவ அதிகாரியாக இருந்
தார். பார்ப்பதற்கு அழகுடன் விளங்கி
ஞர். செல்வ மிக்கத் தாயும், வனப்பு
மிக்கத் தந்தையும், இருந்தும் துர்கனிவ
இளம் வயதில் இன்பம் பெறவில்லை.
மாறுபட்ட குணதிசயங்களுக்கும்
பெற்ருேர் இருவரும் எடுத்துக்காட்டாக
விளங்கினுர்களாம, முரட்டுத்தனமான
கணவன், பணக்காரத் திமிர் பிடித்த
மனைவி, இருவருக்குமிடை சண்டை
நிகழாத நாளே கிடையாது. குற்ற
வாளியைப் பராமரிப்பதுபோல துர்
கனிவை இருவரும் கொடுமைப் படுத்தி
ஞர்கள். தாயன்பு இளம் குழந்தைக்
குக் கிட்டவில்லை, சிறுவனைக் கண்ட
தும் தந்தை எரிந்து விழுந்தார், ஒவ்
வொரு நாளும் வீட்டில் நடக்கும் அம
ளியையும், தனக்குக் கிடைக்கும்
தண்டனைகளையும் நினைத்து குழந்தை
கண்ணீர்விடும். சிரித்து விளையாட
வேண்டிய சிறு வயதில் அழுத கண்
ணும், சிந்திய மூக்குமாக துர்கனிவ்
இருந்தார். கன்னத்தில் வழிந்து, உதட்
டில் தேங்கி, நாக்கு நுனிப்பட்டதும
உப்பாக சுவைக்கிற கண்ணீர்த் துளி
களைப்பற்றி பிற்காலத்திலும் அவருக்கு
ஞாபகம் வந்தது. வேதனை மிக்க
வாழ்வு சிந்தனையைத் தூண்டுவதுண்டு
துர்கனிவின் வேதனை வாழ்வும் சிந்
தனையாளராக அவரை மாற்றிற்று.
நல்ல வேளையாக துர்கனிவின் இளம்
வயதிலேயே தந்தை இறந்தார். தாய்-
தாய் என்ற சொல்லுக்கே பழி உண்
டாக்கும் பண்பினள். அவரை ஆட்டி
வைத்தாள். இலக்கியத்தில் துர்கனி
வுக்கு அடங்காத ஆசை உண்டானது.
ஆனல் தாய் அதைத்தடுத்தாள். இலக்
கிய ஆசிரியரென்ருலே துர்கனிவின்
தாய்க்குப் பிடிக்காது. அதிலும் ருஷிய
இலக்கிய மென்ருல்எரிந்து விழுவாள்,
இலக்கியத்தில் ஈடுபட்டிருந்த துர்
கனிவை அவள் வேறு வழிக்குத்
திருப்ப முயன்ருள். பணக்காரக் குடும்
பத்தில் திருமணம் செய்து, அரசாங்
கத்தில் உயர்தர வேலையில் அமர்த்த
அவள் திட்டமிட்டாள். தாயும் தந்
தையும் நடத்திய வாழ்வை நினைத்
தாலே திருமணம் என்ற வார்த்தை
கசந்துவிட்டது, இலக்கிய ஆசிரியனுக
வரத்துடித்த துர்கனிவ் அரசாங்க
உத்தியோகத்தில் அக்கரை செலுத்த
வில்லை. ஒருவரையொருவர் அறிந்து
கொள்ள மறுத்தனர். கடைசியில்
பொறுக்க முடியாத அளவுக்கு வேற்
றுமை முற்றி, இருவரும் ஒன்ருக வாழ
முடியாமல் பிரிந்தனர். பல ஆண்டுகள
கழித்து, தாய் நோய் வாய்ப்பட்டிருந்த
நேரத்தில் துர்கனிவ் தாயைப் பாாக்க
முயன்ருர். தாய் பிடிவாதமாக மறுத்து
விட்டாள். வீட்டிற்குள் அனுமதிக்
கவே அவள் விரும்பவில்லை. கடைசி
யாக இறக்கும் தருவாயிலிருந்த
தாயைப் பார்க்கத் துர்கனிவ் போனுர்.
அவர் போவதற்கு சற்று முன்னதா
கவே இறந்துவிட்டாள். தான் இறந்த
பின்னும் தன் பிள்ளைவாழ்வதை அவள்
பொறுக்கவில்லை. பிள்ளைக்குச் சேரக்
கூடாது என்பதற்காக எல்லாச் சொத்
துக்களையும், வந்த விலைக்கு. அது கூட
வல்ல, மிக மோசமான குறைந்த
விலைக்கு விற்றுவிட்டு, மிருந்திருந்த
சொத்துக்களையும் வீட்டையும்,
தீ வைத்துப் பொசுக்கி விடும்படி
உத்தரவிட்டிருந்தாள். எவ்வளவு
தாயன்பு! இறந்த தாய்க்குத் தன்
கடைசி வணக்கத்தைத் துர்கனிவ்
அளித்தார்.

சிறுவயதிலேயே துர்கனிவுக்கு இலக்கியப் பயிற்சி கிடைத்தது. அவரை வளர்த்த பெண்ணிடமிருந்தும், பின் முறையாக ஆசிரியர்களிடமிருந்தும் துர்கனிவ் பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் முதலிய அயல் மொழிகளைக் கற்று அவற்றில் வல்லவரானார். வீட்டில் அவருடைய பெற்றோர்கள் பிரெஞ்சு மொழியிலேயே பேசிக்கொண்டார்கள். அவருடைய தாய் பிரார்த்தனையைக்கூட பிரெஞ்சு மொழியில் சொன்னாளாம். மாஸ்கோ, பீரஸ்பர்க் பல்கலைக் கழகங்களில் பயின்றபின் பேர்லின் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கில மொழிகளில் துர்கனிவுக்கு முறையான கல்வியறிவும், இலக்கியப் படிப்பும் தரப்பட்டன. அவற்றைத் தாய் தந்தையரிடமிருந்தும், உயர்ந்த சம்பளத்தில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களிடமிருந்தும் துர்கனிவ் பழகிக் கொண்டார். ஆனால், எந்த ருஷிய மொழியின் அழியாத இலக்கிய ஆசிரியராக அவர் வந்தாரோ அந்த மொழியைத்—தாய் மொழியை வீட்டுவேலைக்காரர்களிடம் கற்றுக்கொண்டார்!

அவரது முதல் புத்தகம் வெளி வந்ததும், துர்கனிவின் புலமை மற்ற எழுத்தாளர்களின் கவனத்தை இழுத்ததுடன், மதிப்பாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்டது. அது வெளி வந்த ஆண்டில்தான் அவருக்கு முன்னிருந்த கொகோல் என்ற பிரபல எழுத்தாளர் இறந்தார். தம்பரம்பரையைச் சேர்ந்தவர், தனக்கு முன் வழி காட்டியாக இருந்தவர், இலக்கிய ஆசிரியர் என்ற முறையில், கொகோலைப் புகழ்ந்து துர்கனிவ் மதிப்புரை எழுதியிருந்தார். வேறு நாடாயிருந்தால் அதைப்பற்றி மதிப்பாக எல்லோரும் கருதுவார்கள். ஆனால் துர்கனிவ் வாழ்ந்தது ருஷியாவில், எழுதியது ருஷிய மொழியில், ஆட்சி செய்தது ஜார் அரசாங்கம். புதிய இலக்கிய ஆசிரியன், மக்களிடம் மதிப்பு எய்தியவன், சிந்தனையாளன் எவரைக் கண்டாலும் ஜார் அரசாங்கம் சந்தேகத்துடனேயே பார்த்தது. கொகோலைப் பற்றி துர்கனிவ் எழுதியதும், அவரின்மீது அரசாங்கத்தின் அடக்கு முறை பாய்ந்தது. அவர் அவருடைய கிராமத்தைவிட்டு வெளியேறக் கூடாது என்று தடை செய்யப்பட்டார். கிராமத்துக்குப் போனதும் எழுதுவதில் ஈடுபட்டார். சிறை எப்பொழுதும் சிந்தனையைக் கிளறுமேயொழிய சிதைத்துவிடாது. சில ஆண்டுகள் கழித்து அவருக்குக் கிராமத்தைவிட்டு வெளியேறும் உரிமை கிடைத்தது. ருஷியாவை விட்டு துர்கனிவ் வெளிநாட்டுக்குக் கிளம்பினார். முதலில்ஜெர்மனியிலும் பின்பாரிசிலும் வாழ்ந்தார்.

பாரிசில் வாழ்ந்தபொழுதுதான் துர்கனிவின் புலமை அயல்நாடுகளுக்குத் தெரிந்தது. வெகு சீக்கிரத்தில் ஐரோப்பிய இலக்கிய ஆசிரியர்களின் தலைவராக துர்கனிவ் விளங்கினார். அவரால் ருஷிய நாட்டுக்கு அயல் நாடுகளில் மதிப்பேற்பட்டதுடன், ருஷிய இலக்கியமும் வேற்று மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் படிக்கப்பட்டது. ஐரோப்பிய இலக்கிய ஆசிரியர்களின் அரசனாக துர்கனிவ் விளங்கினார். அவருடைய நிலைமை கண்டு ஜாரரசனே பொருமைப்பட வேண்டும். மக்களை வாட்டி வதைத்து ஆட்சிசெய்தான் ஜாரரசன். மக்களின் மனதைக் கவர்ந்து துர்கனிவ் ஆட்சிசெய்தார். ஜாரரசன் நடத்திய சண்டைகளில் கிடைத்த வெற்றியும் தோல்வியும் மக்களுக்குத் துன்பத்தையே கொடுத்தன, ருஷியாவைக் கொடுங்கோல் நாடாகவே இகழ்ந்தனர். துர்கனிவின் இலக்கிய வெற்றிகளால் ருஷியாவுக்கு புகழ் வந்தது, இலக்கியம் வளர்ந்தது. தூரத்தில் பாரிஸ் நகரிலிருந்துகொண்டு துர்கனிவ் ருஷிய நாட்டுக்குச் சேவை செய்தார். பிரெஞ்சு நாட்டினரே வியக்கும் முறையில் பிரெஞ்சு மொழியில் பயிற்சி இருந்த போதிலும், துர்கனிவ் ருஷிய மொழியிலேயே எழுதினார். மன்னனின் செங்கோலைவிட, எழுத்தாளனின் எழுதுகோலே நாட்டுக்கு இன்பத்தையும், மதிப்பையும் தந்தது.

அவரது புகழ் பரவிய போதிலும் ருஷிய நாட்டில் அவருக்கு எதிர்ப்பு இருந்தது. கண்டனங்களும், இழிவைத் தூவுகிற மதிப்புரைகளும் அவர்

மீது வீசப்பட்டன. அவர்காலத்தில் வாழ்ந்த டால்ஸ்டாய் என்ற இலக்கிய ஆசிரியரே அவரை வெறுத்தார்.

டால்ஸ்டாயுக்கும் துர்கனிவுக்கும் இடையேயிருந்த உறவே இருவரின் மனப்பாங்கையும் வெளிப்படுத்தும். துர்கனிவுக்குப் பொறாமை என்பது துளிக்கூட இருந்ததில்லை. சிறு இலக்கிய முயற்சியைக் கூட, பெரிதும் பாராட்டி, ஊக்குவிப்பார் அவரால் தான் ருஷிய இலக்கியம் பிரான்சிலும், வெளிநாடுகளிலும் பரவியது. டால்ஸ்டாய்க்கு ஊக்கமளித்தது துர்கனிவ் தான். டால்ஸ்டாயின் இலக்கியம் பரவ வெகுவாகப் பாடுபட்டார். டால்ஸ்டாயின் முதல் புத்தகம் வெளிவந்ததும், அதன் பிரதிகளை தன் நண்பர்களிடமும், இலக்கிய மதிப்பாசிரியர்களிடமும் தந்து, பாராட்டுரைகளை எழுதும்படித் தூண்டினார். தன் நாட்டைச்சேர்ந்த இளம் இலக்கிய ஆசிரியன் மதிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். அவருடைய தனி முயற்சியால் தான் டால்ஸ்டாய் வெளியுலகுக்கு அறிமுகப்பட்டார். ஆனால் டால்ஸ்டாய் துர்கனிவை வெறுத்தார். துர்கனிவ் எவ்வளவோ நல்ல முறையில் டால்ஸ்டாய்க்காகப் பாடுபட்ட போதிலும் அவரை டால்ஸ்டாய்க்குப் பிடிக்கவில்லை. துர்கனிவுடன் பழக மறுத்து, பதினாறு ஆண்டுகள் டால்ஸ்டாய் வெறுப்புணர்ச்சியுடன் இருந்தார். டால்ஸ்டாய் கிருஸ்துவ மதத்தில் தீவிரமாக ஈடுபட்டபின், "அன்பே கடவுள்" "விரோதியிடமும் அன்பாயிரு" என்ற மதக் கோட்பாட்டின் படி, துர்கனிவைச் சந்திக்க ஒத்துக் கொண்டார். தன்னைப் பொறுத்த வரையில் நட்பு முறையிலேயே இருப்பதாகவும் விரோத மனப்பான்மையும், வெறுப்புணர்ச்சியும் துளிக்கூட தன்னிடம் கிடையாதென்றும், சந்திக்கத் தயாரென்றும் துர்கனிவ் பதிலளித்தார். இருவரும் சந்தித்தனர், நட்பு உண்டாகவில்லை. மத நம்பிக்கையற்ற துர்கனிவ் டால்ஸ்டாயின் ஆவேசமான மதக்கொள்கைகளை ஒத்துக் கொள்ளவில்லை. மதக்குரு போல், வாழ்ந்து வந்த டால்ஸ்டாயால் மத நம்பிக்கையற்றவனுடன் பழகவே முடியவில்லை. துர்கனிவ் 1880-ல் ருஷியாவிற்கு திரும்பியபொழுது, புஷ்கின் என்ற ருஷ்யப் புலவர் பாராட்டுக் கூட்டத்திற்கு டால்ஸ்டாயை அழைத்தார். டால்ஸ்டாய் அழைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். துர்கனிவ் இறக்கும் வரையில் அவரைத் தீராத ஆக்கிரத்துடன் டால்ஸ்டாய் வெறுத்தார்.

துர்கனிவ் மரணப் படுக்கையில் இருக்கும்பொழுது பழைய நண்பனை, பார்க்க விரும்பினார். டால்ஸ்டாய் இணங்கவில்லை, கடைசியாக அன்பு ததும்பிடும் நட்புக் கடிதத்தை டால்ஸ்டாய்க்கு எழுதினார். அதில் அவரை இலக்கியத்துக்குப் பாடும்படி வாழ்த்தி, தன் மனப் பூர்வமான மதிப்பையும், நட்பையும் தெரிவித்தார்.

துர்கனிவ் அன்புள்ளம் கொண்டவர் எவரையும் மதித்துப் பேசும் இயல்பினர். மாறாத பண்பும் நட்பை போற்றி வளர்க்கும் தன்மையும் உடையவர். பெரும் புகழ் வாய்ந்த ஆசிரியராக விளங்கிய சமயத்திலும் தன்னைப் பார்க்க விரும்பிய எவரையும் சந்தித்து அன்புரை பேசத் தவறியதில்லை. முன்பின் அறியாத இளம் எழுத்தாளர்களை வரவேற்று, அவர்களைப்பற்றி தன் நண்பர்களிடமும், மதிப்பாசிரியர்களிடமும் உயர்வாகச் சொல்வாராம். எவரிடத்தும் வெறுப்போ, வேற்றுமையோ, பாராட்டியதில்லை. டால்ஸ்டாய் தன்னை வெறுத்து மரணப்படுக்கையில் கூட நண்பனென்று பார்க்க மறுத்த போதிலும், துர்கனிவ் டால்ஸ்டாயிடம் நட்பே பாராட்டினார். மனிதத் தன்மையில் காணப்படும் மாறுபாடுகளில் இதுவும் ஒன்று. கிருஸ்தவ மதமே அன்பு உலகை உண்டாக்கும் என்று டால்ஸ்டாய் எழுதியும் பேசியும் வந்ததோடல்லாமல், கிருஸ்துவ வேதங்களில் கூறப்பட்டபடி தன் வாழ்க்கையை அமைத்து, மதக் கோட்பாடுகள்படி துறவியைப் போல வாழ்ந்தார். மற்றவர்களை மதிக்கும் தன்மை, மாற்றானை நேசிக்கும் பண்பு, எளிமை, அடக்கம், உயர்ந்த குணம், மூதவியவை டால்ஸ்டாய் போற்றிய கிருஸ்

தவ மதத்தின் முக்கிய வாசகங்கள். ஆனால் எந்த பண்புகளுக்காக ஒரு மதத்தை டால்ஸ்டாய் போற்றி வாழ்ந்தாரோ, அவற்றில் சில அவரிடத்தே காணப்படவில்லை. ஆனால் துர்கனிவ் மத நம்பிக்கையற்றவர், அவரிடம் அந்த நற்பண்புகளனைத்தும் காணப்பட்டன. மதநம்பிக்கையற்றால் நல்ல பண்புகள் மறைந்து, கெட்ட செய்கைகளே அதிகமாகும் என்பவர்களுக்கு துர்கனிவ் டால்ஸ்டாய் இவருடைய விளக்கமே மறுப்பாகும். டால்ஸ்டாய் மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையோடிருந்த போதிலும், அவர் துர்கனிவை வெறுத்தார். பழகவும் மறுத்தார். மத நம்பிக்கையற்ற போதிலும் துர்கனிவ் டால்ஸ்டாயை மதித்து பெருந்தன்மையுடன் நட்புரிமை பாராட்டினார். டால்ஸ்டாய் ஓர் மதவாதி, துர்கனிவ் மனிதாபிமானம் கொண்டவர். "தற்பொழுதைய வரலாற்றில், பண்பாடமைந்த நல்லோன் என்ற பழையப் பெயருக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் துர்கனிவ்" என்று ஒரு ஆசிரியர் கூறுகிறார்.

1883-ல் பாரிஸ் நகரில் துர்கனிவ் இறந்தார். ஐரோப்பிய இலக்கிய ஆசிரியர்களனைவரும், கண்ணீர் ததும்ப தங்கள் வணக்கத்தைத் தெரிவித்தனர். ருஷியா அப்பொழுதுதான் உணர்ந்தது. அவரது உடல் ருஷியாவுக்குக் கொண்டுவரப்பட்டு, ஆடம்பரமாக அடக்கஞ் செய்யப்பட்டது. காலத்தின் போக்கு! அவரை வெறுத்துக் கண்டனஞ் செய்தவர்களே அவரைப் புகழ்ந்து பேசத் தொடங்கினார்கள். டால்ஸ்டாய்க்கும், துர்கனிவின் பெருமை அப்பொழுதுதான் தெரிந்தது. துர்கனிவைப் பற்றி பாராட்டுக் கூட்டத்தில் பேச ஒப்புக்கொண்டார். ஆனால், அரசாங்கம்—ஜார் ஆட்சி அந்தக் கூட்டத்தைத் தடை செய்து விட்டது. ருஷியாவுக்குப் பெருமை தரும் சிறு காரியத்தைக்கூட ஜாராட்சி அனுமதித்ததில்லை.

துர்கனிவ் காலத்தில்தான் ருஷிய இலக்கிய அமைப்பு உச்சநிலை அடைந்தது. கதையமைப்பில் இன்றளவும் வேறு எவரும் அவர் திறமையை அடைந்ததில்லை. ஜார்ஜ்மூர் போன்ற மதிப்பாசிரியர்கள் பண்டைய காலத்திலிருந்துவந்த இலக்கிய பரம்பரையில் துர்கனிவின் கலைக்கு ஈடும் எடுப்பும் இடையாதெனக் கூறுகின்றார். மிகப் படித்தவரும், கல்வி கேள்விகளிலும் இலக்கிய அறிவிலும் துர்கனிவுக்கு அடுத்தபடி வேறு எவரும் இன்றளவும் வரவில்லை. அவர்வாழ்ந்த காலத்தில் ஐரோப்பிய இலக்கிய ஆசிரியர்கள், கதைப்போக்குக்கும், அமைப்புக்கும் துர்கனிவின் யோசனையைக் கேட்டு அதன்படி கதை எழுதுவார்களாம்.

தாயன்பு தெரியாத இளமை, வீடு என்று ஒரு அமைதியான புகலிடத்தை ஏற்படுத்திக் கொள்ளாத வாழ்க்கை முறை, உள் நாட்டில் புயலெனக்கிளம்பிய கன்டனம், அயல் நாடுகளில் நாடோடி வாழ்வு, இவைகளிடை துர்கனிவ் எழுதினார். ருஷிய நாவல் இலக்கியம் உயர்ச்சி அடைந்தது. புதிய செல்வத்தால் உலக இலக்கியம் பெருமையுற்றது.



# மன்றம்

(அறிவு விளக்க மாத வெளியீடு)

## கட்டண விபரம்

| | உள் நாடு | | | வெளி நாடு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஒரு ஆண்டுக்கு | 5 | 0 | 0 | 7 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 3 | 0 | 0 | 4 | 0 | 0 |
| தனி இதழ் | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளிப்புற அட்டைக்கு விகிதம் | | ரூ. 100 |
| உட்புற அட்டைக்கு | ,, | ,, 75 |
| முழுப் பக்கத்திற்கு | ,, | ,, 50 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ,, 25 |

விற்பனைக் கழிவு 25% முன் பணம் பிரதி ஒன்றுக்கு 1

---

## 'மன்றம்' அலுவலகத்திற்கு

செக்கோ, டிராப்டோ அனுப்புகிறவர்கள்

**மானேஜர், 'மன்றம்'**

என்று தெளிவாகக் குறிப்பிடக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

*மற்ற விபரங்கட்கு :—*

நிர்வாகி, 'மன்றம்'

**30-79, செம்புதாஸ் தெரு, சென்னை—1.**

துர்கனிவ் சித்திரம்

# ★ முட்டாள்! ★

ஒரு ஊரில் முட்டாள் ஒருவன் இருந்தான். எத்தகைய சஞ்சலமுமின்றி, அமைதியுடன் அவன் வாழ்ந்தான். தன்னை ஒரு வடிகட்டின முட்டாள் என்று ஊரார் ஏளனமாகக் கருதுவது கொஞ்சங் கொஞ்சமாக அவனுக்குத் தெரியவந்தது.

அது அவன் மனதை உறுத்தியது. மிகவும் வருத்தமடைந்து, அந்த ஏளனத்தை எவ்வாறு ஒழிப்பது என்று அவன் யோசித்தான்.

அவனுடைய மந்த புத்தியில் திடீரென்று ஒரு யோசனை உதயமாயிற்று. கொஞ்சங்கூட தாமதிக்காமல், தன் எண்ணத்தை அவன் செய்கையில் காட்ட ஆரம்பித்தான். அவனுடைய நண்பன் உயர்தர ஓவியனொருவனின் திறமையை வியந்து பேசினான்.

“அட இழவே! அவன் பெயர் மறந்துபோய் பல நாட்களாகின்றனவே. . . . உனக்கு இது தெரியாதா? நீ இப்படி பத்தாம் பசலிப்பேர்வழியா யிருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை” என்று முட்டாள் விடாமல் பேசினான்.

அவனுடைய நண்பன் பயந்துபோய், முட்டாள் கூறியதைச் சரியென்று ஒப்புக்கொண்டான்.

“ஆகா! மிக அழகான புத்தகத்தை நேற்று படித்தேன்” என்று மற்றோர் நண்பன் ஒரு சமயம் அவனிடம் சொன்னான்.



“அதுதானே! அதைப்பற்றி பேசவே வெட்கப்பட வேண்டும். சுத்த உதவாக்கரைப் புத்தகம். அது எல்லோருக்கும் தெரிந்ததே! உனக்குக் கொஞ்சங்கூடத் தெரியவில்லையா? பாவம், சுத்த பத்தாம்பசலிப் பேர்வழி நீ” என்று முட்டாள் சுடச் சுடப் பேசினான்.

இந்த நண்பனும் அலறிப்போய், முட்டாள் கூறியது சரி என்று ஒப்புக்கொண்டான்.

“அவர் எனக்கு நன்றாகத் தெரிந்தவர், மிக நல்லவர். தங்கமான பேர்வழி,” என்று வேறோர் நண்பன் முட்டாளிடம் ஒருவரைப் பற்றிப் புகழ்ந்தான்.

முட்டாளுக்குக் கோபம் வந்துவிட்டது. “அட நாசகாலமே! அவன் அயோக்கிய சிகாமணியாயிற்றே! ஊர்த் தாலி யறுத்து, குடும்பங் குடும்பமா கசுற்றத்தாரை யெல்லோரையும் குடிகெடுத்த கொடும்பாவியாயிற்றே! ஊரில் எல்லோர்க்கும் அவனுடைய யோக்யதை தெரியும். பாவம்! உனக்கு ஒன்றும் தெரியவில்லை. வடிகட்டின பத்தாம் பசலிப் பேர்வழி” என்று முட்டாள் சத்தம் போட்டான்.

இந்த நண்பனும் மிரண்டுபோய், முட்டாள் சொன்னதை ஒப்புக்கொண்டு ஓடிப்போனான். எல்லோரும் அவனைப் புகழ்ந்தார்கள்.

“என்ன அறிவு! எவ்வளவு நாவன்மை! அடடா, அவன் பெரிய புத்திசாலி” என்று முட்டாளை எல்லோரும் கொண்டாடினார்கள்.

கடைசியாகப் பத்திரிகை ஆசியர் ஒருவர் முட்டாளை அழைத்து, தன் பத்திரிகையில் மதிப்பாசிரியர் பகுதியை ஒப்படைத்தார்.

எதைக் கொடுத்தாலும் மனம் போனபடி தாறுமாறாகக் கண்டித்தும், தாழ்த்தியும் முட்டாள் மதிப்புரைகள் எழுதினான்.

எந்த கட்டுப்பாடுகளும் மதிப்பீடுகளும் கூடாது என்று முட்டாள் கூறினானே, அதுமாறி அந்தமுட்டாளே கட்டுப்பாடான மதிப்பாளனாக மாறினான். எல்லோரும் அவனைக் கண்டு பயந்தார்கள். ஆரம்ப எழுத்தாளர் அவனைப் பின்பற்ற ஆரம்பித்தனர்.

பாவம், அந்த இளைஞர்கள் வேறு என்ன செய்வார்கள்? பொதுப்படையாக ஒரு தனிப்பட்டவனைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாது என்றாலும், இதில் முட்டாளைப் பின்பற்றாவிட்டால் பத்தாம் பசலிப் பேர் வழியாக வேண்டுமே என்று பயந்தார்கள்.

கோழைகளிருந்த இடத்தில் முட்டாளுக்கு நல்ல மதிப்பிருந்தது.



# நெஞ்சே! நில்லாய்!

[ எழினி ]

“நெஞ்சே! அவசரப்படாதே! நில்!”

“ஏன்?”

“சற்றுப் பொறு, சொல்கிறேன்”

“எடுத்தடி வைக்கும்போதே தடை செய்கிருயே......”

“சினங் கொள்ளாதே!...... நெஞ்சே! தடை செய்யக் காரணம் உண்டு. சொல்லுறேன் கேள்!”

“அன்ப! நான் உன்னோடு சேர்ந்து கிளம்பும் ஒவ்வொரு பொழுதும் இப்படித்தான் ஆகிறது. ஏதாவது பகட்டு மொழி பகன்று, என்னைத் தடுத்து, எனது பயணத்தைத் தடை செய்து விடுகிருய். வர வர உன்னோடு வாழ்வதே அரிதாகிவிடும் போலிருக்கிறதே”

“நெஞ்சமே! அதோபார்! என்றும் நம் முன்வர வெட்கப்பட்டு, நாணி ஒதுங்கி நிற்பதையே தன் பழக்கமாகக் கொண்டிருந்த அவள், நம் முன்வந்து நிற்பதைப்பார்! அவளது ஒளியுமிழும் நெற்றி மாசுபடிந்த மாணிக்கம்போல் காட்சி யளிக்கிறது. அவள் முகத்திலே என்றுமில்லாத வாட்டம் தவழ்கிறது. அவளது சிரிப்பிலே சுவை காணப்படவில்லை. தன் மெல்லிய காலின் பெருவிரலால், நிலத்தைத் தோண்டிக் கொண்டு குனிந்த தலையுடன் ஏதோ கூறுவாள்போல் நிற்கின்ருளே! அதன் காரணத்தை நாம் அறிந்து செல்ல வேண்டாமா?”

“தோழ! அவள் நிற்கும் நிலையைக் கண்டவுடனேயே காரணம் உனக்கு விளங்கவில்லையா, அவளது பொய்மைச் சிரிப்பும், பொலிவிழந்த தோற்றமும், மாறுபட்ட முகமும், மயங்கிய நோக்கமும் நாம் வெளியூருக்குச் செல்வதை அவர் விரும்பவில்லை என்பதைக் காட்டுகின்றதே! அவள் இதை வெளிப்படையாகச் சொல்ல நாணுகிருள். பொருள் தேட வேண்டிய தன் இன்றியமையாமையை அவள் அறிவாளா? அபலை! ஆகவே நீ தயங்காதே புறப்படு போவோம்!”

பொருள் தேடும் பொருட்டு, வேற்றூர்ச் செல்ல நினைக்கிருன் காதலன். அவன் செல்லும் வழி ஓமை மரங்கள் நிறைந்ததொரு காட்டு வெளி, அவ்வழி முழுதும் நெல்லியனது கொட்டைகள் பரந்திருக்கின்றன. விளையாடுவதற்கென்று, இளஞ்சிருகள், பாறையின் மீது குவித்து வைத்திருக்கும் வட்டுக் காய்களைப் போல, நெல்லிக்காய்கள் வழி நெடுக குவிந்து கிடக்கின்றன. கதிரவனின் கதிர்கள் பட்டுத்தெறிக்கும் தன்மை வாய்ந்த பாறைகளும், வழிப்போக்காளர்களின் கால்களைச் சிதைக்கும் கூரிய கற்களும், பரந்து படடுக் கிடைக்கும் கூழாங் கற்களும் மேட்டு நிலமாகிய அக்காட்டு வழியில் கிடக்கின்றன. இத்தகைய தன்மைவாய்ந்த காட்டு வழியில் காதலன் செல்ல நினைப்பதை அறிந்த காதலி, விட்டுப் பிரியும் மனமில்லாதவளாய் அவன் முன் வருகிருள். காதலனுக்கு விடை கொடுப்பாள்போல் புன்முறுவல் புரிகிருள். என்ருலும் அது உள்ளத்தோடுபொருந்திய உண்மைச் சிரிப்பல்ல நாணமும் வருத்தமும் அவளை வருத்த, தலை குனிகிருள். காதலனிடம் ஏதோ சொல்ல நினைத்து வெளியிட நாணி, ஆழ்ந்த சிந்தனை செய்வர்ளாய் நிலத்தைப் பெருவிரலால் கிண்டிக்கொண்டிருக்

கிருள். இத்தகைய அவளுடைய நிலையைக் கண்ட தலைவன் தன் நெஞ்சை விளித்துக் கூறுகிறன், "நெஞ்சே! அவசரப்படாதே! நில்!" என்று

"ஓவியம் போல் அவள் அசையாது நிற்கும் தன்மையைப் பார்த்தாயா, நெஞ்சே!"

"ஆம்! அப்படிநிற்பது அவளுடைய பரம்பரைப் பழக்கம். அதற்காக நீ ஏன் கவலைகொள்கிருய்?"

"அவள் முகம் எதையோ கூறுவது போல் காணப்படுகிறதே! நன்கு உற்றுப் பார்!"

"காதலுடையாரை விட்டுப் பிரிவது அறநெறி அல்ல, என்று பழங்காலந் தொட்டு கூறிவரும் மொழியைப் பழக்கத்தில் கொண்டுவர இயலாமல், அவ்வளவிலேயே மறந்து விட்டாயா என்று கேட்பது போல் உன்னை முகக்குறிப்பால் கேலி செய்கிருள் அக்கள்ளி! அதை ஒரு பொருட்படுத்தாதே, வா போகலாம்! காலந் தாழ்த்தாதே! புறப்படு!"

"நெஞ்சமே! உனக்குச் சிறிது கூட இரக்கம் தோன்றவில்லையா?"

"எனக்கே அறிவுரை கூற ஆரம்பித்து விட்டாயா! தோழ! உன் போக்கு நன்ருய் இருக்கிறது!"

"அதோ அவள் நிலையைப்பார்! கலங்கிய கண்களிலிருந்து வழியும் நீர், அவளது கண்ணின் பாவையையே மறைத்துவிட்டது! ஏங்கி நிற்கும் அம்மங்கை நல்லாளுக்குத் தேற்றுமொழி கூறிப் பிறகு புறப்படுவோம், சற்று பொறுத்திருப்பாய் நெஞ்சமே!"

"தோழ! அவள் பொய்க் கண்ணீர் வடிக்கிருள். அதை ஒரு பொருளாகக் கொள்ளாதே. சிந்தையை அவள் பக்கம் செல்லவிடாதே! திரும்பு இப்பக்கம்! வா, போவோம்!"

"அவள் இடுப்பில் அணைத்திருக்கும் இளமைந்தனின் தலையைமுகர்ந்து பார்த்து மூச்செறிவதிலிருந்து, அவள் என்னிடத்தில் கொண்டுள்ள அன்பின் திறம் விளங்கவில்லையா. கலங்கிய கண்களோடு மைந்தனிடம் காட்டும் அன்பு, என்னிடத்தில் காட்டும் அன்பாயிற்றே! ஆதலால் அவள் பொய்க் கண்ணீர் வடிக்கிருள். என்ற உனது கூற்று பொருந்தாது நெஞ்சே ......! நீ அப்படிக் கூறுவது தகாது!"

"அன்ப! அவள் பெரு மூச்செறிவதெல்லாம் ஒப்புக்காகும். இது பெண்களுக்கு வழக்கமானதொரு பழக்கம். அது கண்டு நீ மயங்கிவிடாதே!"

"நான் காதலிக்காகப் பரிந்து பேசுகிறேன் என்று எண்ணுதே நெஞ்சமே! மைந்தனின் தலையில் சூட்டியிருந்த செங்கழுநீர் மலர் மாலையை அவள் முகர்ந்து பார்க்கவும், அவளது உயிர்ப்பிலுள்ள வெப்பத்தால், அம்மலர் மாலை செந்நிறம் கலைந்து, பொலிவற்று விளங்குவதைப் பார்! நாம் பிரிந்து செல்வது குறித்து, அவள் வருந்தி உடல் குமுறியுள்ளாள் என்பது, அவளது வெப்பம் பொருந்திய பெரு மூச்சால் தெளிவாகிறதல்லவா?"

"அப்படியானுல் நீ பொருள் தேட வெளியூர் வரப்போவதில்லையா?"

"நெஞ்சே! நில்லாய்! வருந்தாதே! நாம், அவள் அண்மையில், இருக்கும் போதே இவ்வளவு வருத்தம் அடைகிருள். நாம் அவளைவிட்டுப் பிரிந்தால் அவள் உயிர் வாழமாட்டாள், ஆகவே நிலைமை இவ்வாறிருக்கும்போது, நாம் வேற்றூர் செல்வது எப்படி முடியும்?" தன் காதலி பிரிந்து வாழ இயலாத நிலையிலிருக்கிருள் என்பதை அறிந்த காதலன், அந்த நிலையில் அவளை விட்டுச் செல்ல மனமில்லாதவனுய்த் தன் வெளியூர்ப் பயணத்தை நிறுத்திக் கொள்கிருன்

* * * *

அளிநிலை பொருஅ தமரிய முகத்தள்
விளிநிலை கேளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலவடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற

வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை யொண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன் படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரன்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதிராயின் அறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே.

* * *

இதுமன்னர்மன்னனாகவும் மாபெரும் புலவனாகவும் பன்னூற்றாண்டுகளுக்கு முன் திகழ்ந்த பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடிய அகநானூற்றுச் செய்யுள். அகப்பொருள் காட்சியைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுவதே புலவரின் நோக்கம். பொருள் தேடும் பொருட்டுத்தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் தலைமகன் தன்னுடைய நெஞ்சிற்குச் சொல்லி, தன் பயணத்தை நிறுத்திக்கொள்வது என்பது, அகப் பொருள் பற்றிய துறைகளுள் ஒன்று. அத்துறை பற்றிய இலக்கணத்தைத் தம்மனதில் வைத்துக் கொண்டு, கற்பனைக் காட்சியை அழகு ஒழுக சொல்லோவியத்தில் தீட்டிக் காட்டுகிறார் புலவர்.

'காதலுடையாரைப் பிரிதல் அறநெறி ஆகாது' என்றமையக் கருத்தைப் புலப்படுத்துவதாகவே இப்பாடல் அமைந்துள்ளது. காதலரிருவரும் களஒழுக்கங் கொண்டிருந்தகாலத்தில், "நான் உன்னை எக்காலமும் பிரியேன்" என்று அவன் அவளுக்குக் கூறிய கூற்றை நினைவுப்படுத்தவே, வேற்றூர் செல்ல நினைக்கும்

தலைவன் முன் நீர், வார்ந்த கண்ணோடு, மைந்தனை மார்போடு அணைத்துக் கொண்டு, தோற்றம் அளிக்கிறாள். அந்தத் தோற்றம் அவனது கடுஞ்சிந்தையைக் கலங்க வைத்து, இரக்கங் கொள்ளச் செய்கிறது.

குனிந்த தலையோடு நிலத்தைக்காற் பெருவிரலால் கிண்டிக்கொண்டிருக்கும் தலைவியைத், தலைமகன் பார்த்தவுடனே அவனுக்குத் தெரிந்தது அவளது நெற்றியாதலால், தன் நெஞ்சிற்கு, சொல்லுவதாகச் சொல்லும்போது, அவளை, ஒளி பொருந்திய நெற்றியையுடையவள் என்னும் பொருள்பட "ஒண்ணுதல் என்று குறிப்பிடுகிறான்.

காதலனின் மனதை இரங்க வைக்க வேண்டும் என்பதற்காகவே, தன் மைந்தனையும் உடன் தூக்கிக்கொண்டு அவன் முன் வருகிறாள் அத் தலைவி. காதலனின் மனதில் ஏற்படும் எண்ண அலைகளின் மோதுதலைக் குறிக்கவே அவன் தன் நெஞ்சுடன் பேசுவதாகப் புலவர் கூறினர். உள்ளத்தின் ஒரு எண்ணம் வெளியூர் போகச் செய்கிறது; மற்றொன்று தடுக்கிறது. போகச் சொல்லும் எண்ணத்திற்குத் தடுக்கும் எண்ணம் கூறும் கூற்று "நெஞ்சே! நில்லாய்!"



"பாமர மனிதன் பாராளுங்காலமிது! பழங்காலச் சின்னங்களைப் பாரிலே அகற்றுங்கள். வயலிலே விளையும் உணவு, விவசாயிக்கு உரிமையில்லை என்றால், அவ்வயலிலே நிற்கும் அவ்வளவு கதிர் மணியையும் அழித்துப் பொசுக்குங்கள்."

— கவி இக்பால்.

# காதற் காட்சி

இரா. குழூஉத்தலைவன்

1. தென்றல்வரும் வெளிக்கதவைத் திறந்து விட்டால்!
தேமலரின் மணங்கள்வரும் தோட்டம் சென்றால்!
அன்றலரும் மலர்முகத்தாள் வருவாள்! அங்கே;
அலரிவரும் வண்டுவரும் அவளின் பின்னே,
சென்றுவரும் ஊஞ்சலைப்போல் என்றன் கண்கள்;
திரும்பிவரும் அவள் இருந்த திசையே நோக்கி;
என்றும் அவள் உலவிடுவாள் எனினும் அந்தோ!
ஏறெடுத்துப் பார்த்ததைநான் கண்டதில்லை!

2. வழிநடக்கும் சமயமெல்லாம் மயில் நடக்கும்
வகைநடக்கும் அழகிஅவள் வகுப்பில் வந்தால்,
விழிநடக்கும் அவளிடத்தில் யாவ ருக்கும்;
வேண்டுமென்றே உரைநடக்கும் அவளைப் பற்றி;
சுழிநடக்கும் வெள்ளத்தில் துரும்பைப் போல;
சுழன்றுநடக் கும்அவள்பால் எனது நெஞ்சம்!
பொழில்நடக்கும் நிகழ்ச்சிகளும் அறிவா ளேனும்
புன்னகைபூத் திட்டதைநான் கண்ட தில்லை!

3. மொழிவளரும் அவளிடத்தில் தமிழ்த்தேன் போல,
முல்லைமலர் வளரும்அவள் பவள வாயில் ;
விழிவளரும் மின்னலைப்போல் ; குழலில் வான
வில்வளர்தல் போல்வளரும் மலரின் கூட்டம் ;
பழிவளரும் உலகில் அவள் பகல்வ ளர்வாளோ,
பாதியிர வும்வளர்வாள் என்உள் ளத்தில் !
எழில்வளரும் அவள்உடலில் எனினும் அந்தோ !
எதிர்வளரும் என்னையவள் கண்ட தில்லை !

4. மணிஅடிக்கும் அவள்குரல்போல் ; வகுப்பில் வந்தால்
வம்படிக்கும் மாணவர்க்கு வாய்அ டிக்கும் ;
துணிஅடிக்கும் வண்ணானைத் தோற்க டிக்கும்
தோகையவள் எதிர்வந்தால் எனது நெஞ்சம் ;
பணிஅடிக்கப் பொன்உருக்கும் தட்டார் போன்று
பாய்ச்சிவிட்டாள் தனைஉருக்கி என்உள் ளத்தில் ! ;
அணி அடிக்கோர்அடிக்கோர்முறை அணிவாளேனும்
ஆசையுடன் பார்த்ததைநான் கண்ட தில்லை !

5. குடியிருப்பாள் என்வீட்டின் பக்கல் என்பர்
கூறுவதுபொய் ! ; இருக்கும் இடமே வேறு,
வடிவிருப்பாள் மலர்மகள்போல் என்பர் மற்றோர்
வழி ஏது ? அம்மகட்கு என்னுள் ளத்தில் !
படிப்பதுவும் கலைக்கழகத் தென்பதும் பொய் !
பயிற்றுகின்றாள் பலகலையும் என்னுள் நின்று ;
நடிப்பதுவும் அறிவாள்அப் பருவ நங்கை
நயனங்கள் சுழன்றதைநான் கண்ட தில்லை !

# தேய்ந்த மெருகு

[ ப. வாணன் ]

“இதை உங்களிடம் கொடுத்து வரச் சொன்னார்கள்” என்று கூறிக்கொண்டே ஒரு அட்டைப் பெட்டியை மாலதியிடம் கொடுத்தாள் அந்தச் சிறுமி.

ஒரு சிறியபெண் தன்னிடம் பார்சல் கொடுப்பதைக் கண்டு அதிசயத்துடன் “யார் கொடுக்கச் சொன்னார்கள்?” என்று கேட்டாள் மாலதி. அந்தச் சிறுமிக்கு உடனே பதில் கூற தைரியம் வரவில்லை. மெதுவாக, பயத்துடன் “அம்மா கொடுத்துவரச் சொன்னார்கள்!” என்றாள். மாலதிக்கு இன்னும் ஆச்சரியமாக விருந்தது. “உங்களம்மா எங்கேயிருக்கிறார்கள்?” என்றாள். “மோட்டுத் தெருவில்...” என்று கூறி வாக்கியம் முடியும் முன்பே ஓடிவிட்டாள் சிறுமி. மாலதிக்கு வேடிக்கையாக விருந்தது. அப்பொழுதுதான் கச்சேரிக்குச் சென்று விட்டு இரண்டரை மணி நேரம் பாடிய களைப்பில் தங்கியிருக்குமிடத்திற்கு வந்தாள். இந்தபுதியவூரில் எதிர்பாராத விதமாக ஒரு சிறுமி தன்னிடம் என்ன கொடுத்துப் போனாள் என்றே புரியவில்லை. அந்தச் சிறுமியை அதற்கு முன் அவள் பார்த்ததில்லை. அவள் தாயும், அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அந்தப் பெண்ணிடமிருந்து முழுவிபரம் அறிவதற்குள் அவளும் ஓடிவிட்டாள். ஒன்றும் புரியாமல் அந்தப்பெட்டியைத்திறந்தாள். அதனுள் இருந்த பொருள், மாலதியின் மகிழ்ச்சியைப் பறந்தோடச் செய்தது. அவள் முகம் திடீரென்று வாட்டமுற்றது. அந்தப் பெட்டிக்குள் இருந்தது. வேறொன்றுமில்லை. இரண்டு ஜிமிக்கிகள்! அதுவும் வெள்ளியில் செய்து மூலாம் பூசப்பட்டவை. தங்க மூலாம் தேய்ந்துபோய், வெள்ளி ஆங்காங்கே தலை நீட்டிக்கொண்டிருந்தது. இந்த பழையஜிமிக்கிதான் அவளுக்கு அந்தச் சிறுமிகொடுத்தது. ஆனால் அந்தஜிமிக்கிகள் அவளுடைய உள்ளத்தில் எவ்வளவு குழப்பத்தையும், கலக்கத்தையும் உண்டாக்கிவிட்டன! கச்சேரிக்குச் சென்றபொழுது, அவளுக்கிருந்த மகிழ்ச்சியில், ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இப்பொழுது இல்லை. அந்த ஜிமிக்கிகள், அவளுடையநினைவுகளைப் பழைய நாளைக்கு அழைத்துச் சென்றன. அந்த ஜிமிக்கிகள் அவளுக்கு புதிதல்ல. அவளிடமிருந்து அவைகள் எப்படிப்பிரிந்தனவோ அப்படியே இன்னும் தோற்றமளித்தன. அவளுடைய சிந்தனைகள் பழைய நாட்களுக்கு ஓடின.

இவைகள் நடந்து கிட்டத்தட்ட மூன்றுவருஷங்களிருக்கும். இப்பொழுதிருப்பதுபோல், அந்தக் காலத்தில், பிரபல பாடகியல்ல, சாதாரண மூன்றும் தர பாட்டுக் கச்சேரிகளுக்குச் சென்று வந்தவள்தான் மாலதி. அப்பொழுது அவளுக்கு வருமானம்கூட அதிகம் கிடையாது. மாதத்திற்கு ஓரிரு கச்சேரிகள் செய்வாள். அதில்வரும்வருமானத்தைக் கொண்டு காலந்தள்ளி வந்தாள். அப்பொழுது இவளுக்காகப் பரிதாபப்பட்டவர்கள் யாருமே கிடையாது. இந்தநிலையில், எதிர்பாராமல் அவளுக்குக் கிடைத்த உதவி நாயகம் செய்தது தான். நாயகம் மருவூர் கலைக் கழகத்தின் செயலாளர். கலைக்கழகத்தின் செயலாளர் என்ற முறையில் நாயகம்

அநேக தடவைகள் மாலதியைச் சந்திக்க நேர்ந்தது மருவூரில் அடிக்கடி அவளுக்கு கச்சேரி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவளுக்காக நாயகம் அதிகமான உதவி செய்தார். நாயகத்திற்கு மாலதியின் பேரில் அளவுக்கதிகமான அன்பு உண்டு. செயலாளன் என்ற முறையில், மாலதியைச் சந்திக்க ஆரம்பித்த நாயகம் நாளடைவில் அடிக்கடி அவள் வீட்டுக்குவர ஆரம்பித்தார், சென்னைக்கு வரும்போதெல்லாம் மாலதியைப்பார்க்காமல் நாயகம் போவதேயில்லை. சந்திப்பு வளர வளர, நாயகத்திற்கும் மாலதிக்கும் ஏற்பட்ட தொடர்பு, வளர்ந்து கொண்டே போயிற்று. ஆரம்பத்திலிருந்ததைப்போல, நாயகம் கலைக்கழகத்தின் செயலாளர் என்ற முறையில் மாத்திரம் மாலதி எண்ணவில்லை. ஏதோ தனக்கும் அவருக்கும் ஒரு தொடர்பு இருப்பதாகவே எண்ணினாள். நாயகமோ இந்த எண்ணத்தை உண்டாக்க வேண்டுமென்றுதான் அடிக்கடி அவள் வீட்டுக்கு வந்து போனார். எதற்காக இவ்வளவு செலவு பண்ணிக்கொண்டு சென்னை வந்து, தன்னைப் பார்த்துப் போகிறார் என்று, ஆரம்பத்தில் மாலதி எண்ணினாள். நாளடைவில் இந்தப் பைத்தியம் இன்னும் வளர்ந்தது. அவள் வீட்டுக்கு வந்தது மாத்திரமில்லாமல் அவள் செய்யும் ஒவ்வொரு கச்சேரிக்கும் நாயகம்தான் முதல் சீட்டில்உட்கார்ந்திருப்பார். அவளுக்கும் நாளடைவில், நாயகம் தன் எதிரில் உட்கார்ந்திராவிட்டால், கச்சேரி செய்வது கஷ்டமாகவிருந்தது.

அந்தத்தடவை அவர் சென்னை வந்து கிட்டத்தட்ட ஒரு வாரமாகிவிட்டது. மாலதியின் வீட்டிலேயே தங்கிவிட்டார். ஆரம்பத்தில் சாதாரணமாக விருந்த நாயகம்,ஒரு வாரமாகியும்,தன் வீட்டிலேயே தங்கியிருப்பதைக் கண்ட மாலதி ஆச்சரியமடைந்தாள். ஆனால் அந்த நாட்கள் அவளுக்கு இன்பமாகவே கழிந்தன.

காலையில் எழுந்தவுடன் சாப்பிட்டு நாயகத்துடன் பேச ஆரம்பித்தால், பொழுது போவதே தெரியவில்லை. அன்று வேடிக்கையாகப், பேச்சுவாக்கில் "வந்து ஒரு வாரமாகிறதே, எப்பொழுது ஊருக்குப் போகிறீர்கள்" என்று கேட்டாள் மாலதி. அதற்கு நாயகம் கூறிய பதில், அவளை சிந்தனையில் ஆழ்த்தியது..

"ஏன்? இனிமேல் இங்கேயே இருப்பதாகத்தீர்மானித்துவிட்டேன்!" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். மாலதிக்கு இந்தபதில் சங்கடமான நிலையை ஏற்படுத்தியது. இவ்வளவு நாட்களும் ஏதோ வேலையாகத்தான் சென்னையிலிருக்கிறார் என்று எண்ணியிருந்தாள். தன் பொருட்டுத்தான் சென்னையிலிருக்கிறாரென்பது இப்பொழுது நன்றாகத் தெரிந்தது, இந்த நிலை சரியா? மாலதிக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. "என்மேல் நாயகம் ஆசை கொள்வது சரியா? எனக்குக் கூட அவருடன் வாழப் பிரியமிருக்கிறது. ஆனால் நான் எப்படி அவரைச் சொந்தமாக்கிக்கொள்ள முடியும். அவருக்குத்தான் மணமாகி ஒரு குழந்தை கூட இருப்பதாகக் கேள்விப் பட்டேன்! இந்த நிலையில் நான் அவரை நினைப்பது ஒழுக்கீனம். ஆனால் அவராகவே என்னைத் தேடி வந்திருக்கிறாரே! வந்தால்தான் என்ன? அவருடைய மனதைத் திருப்பி அவரை அவர் மனைவியிடம் சேர்ப்பது என்னுடைய கடமைதானே. ஆம் ஒரு சகோதரியின் சுகத்தை நான் அடைய நினைப்பது தவறு" என்று தன் மனதையே தேற்றிக் கொண்டு தூங்கிவிட்டாள்.

நாட்கள் ஓடின. ஊரிலிருந்து வந்து ஒரு மாதமாகியும் நாயகம் ஊருக்குப் புறப்படும் வழியாயில்லை. மாலதிக்கும் அவர் மனதைத் திருப்பும் சக்தியில்லை. தனியாயிருக்கும் நேரத்தில், நாயகத்தை எப்படியாவது சரிப்படுத்தி ஊருக்கு அனுப்ப வேண்டும் என்று எண்ணினாள். நாயகத்தைப் பார்த்தவுடன் சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. அவர் கொஞ்சநாழிகூட அவளை சும்மா விடுவதில்லை. ஏதாவது பேசிக்கொண்டோ அல்லது சிரித்துக் கொண்டோ நாழியைக் கடத்துவார். எவ்வளவுதான் திடமனதுடனிருந்தாலும், மாலதியின் மனமும் மனித

உள்ளம்தானே. அதுவும் நாயகத்திடம் இபற்கையாகவே சென்றது. ஆனால், அதை அடக்கி எப்படியாவது இந்த சஞ்சல வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கத் தீர்மானித்தாள். அதற்கேற்றாற் போல் அன்று ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று தற் செயலாகத் தெருவில் "முல்லைப் பூ" விற்றுக் கொண்டிருந்தான். நாயகம் போய் வாங்கி வந்தார். அப்பொழுது ஹாலில் யாருமேயில்லை. ஆகவே அவரே மாலதியின் தலையில் பூவை வைக்கப் போனார். மாலதிக்குத் திடீ ரென்று ஆவேசம் வந்துவிட்டது. அவர் தலையில் வைக்கு முன் தன் கையில் வாங்கிக் கொண்டாள். பிறகு கொஞ்சம் கடுமையாகவே பேச ஆரம் பித்தாள்.

"நாயகம்! நான் உங்களுக்கு அதிகமாக கூறவேண்டிய அவசிய மிருக்காது என்று எண்ணுகிறேன். நீங்கள் எப்பொழுதாவது நாம் என்ன செய்கிறோம்; ஏது செய்கிறோம்; என்ப வைகளைப்பற்றி எண்ணியதுண்டா?" என்று பொதுப் படையாக ஒரு கேள் வியைக் கேட்டாள் மாலதி. நாயகம் சமாதானமாக நாற்காலியில் சாய்ந்து கொண்டே "மாலா! தற்சமயம் நான் எதைப் பற்றியும் கவலைப் படப்போவ தில்லை. உன் அருகில் இருந்தால் எந்த துன்பமும் என்னை நெருங்காது. என் வாழ்வு உனக்காக அர்ப்பணம் செய்யப்பட்டு நீண்ட நாட்களாகிவிட் டன!" என்றார்.

மாலதிக்கு ஒன்றுமே புரியவில்லை. கடுமையாக அவள் கேள்வி கேட்டாள். அவரோ சமாதானமாகப் பதில் கூறி னார்.

"நாயகம்! என்மீது உங்களுக்கு ஏற்பட்டுள்ள அன்பு கண்டு எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், அந்த அன்பை, காதல் என்ற வழிக்குத் தள்ளுவது தவறு. உங்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான். சில நிமிடங்கள் உங்கள் கவனத்தை உங் கள் குடும்பத்தின் பக்கம் திருப்புங்கள். உங்கள் வரவை நாள் தோறும் எதிர் பார்த்திருக்கும் உங்கள் மனைவி, உங் கள் அருமைப் பெண், உங்களை அண்டி யுள்ள நண்பர்கள் இவர்கள் எல்லோ ருக்கும் நீங்கள் பெரிய ஏமாற்றத்தை யளிக்கிறீர்கள். நான் என்ன, சாதா ரண பாட்டுக்காரி. உங்கள் சுற்றித்தால் கேவலமாக மதிக் கப்படுபவள். உலகத்தின் முன் இழி வான நிலையிலுள்ள என்மீது நீங்கள் விருப்பம் வைப்பது சரியல்ல. இதை உங்கள் நன்மைக்காகத்தான் கூறு கிறேன், என் வார்த்தையைத் தாங்கள் கவனிக்கவேண்டும்" என்று மிகப் பணிவாகக் கூறினாள்.

இவ்வளவு விரிவாக அவள் கூறியது நாயகத்தின் மனதை மாற்றும் முயற்சி யில் மாத்திரமல்ல. தன் மனத்திற்கே கூட கூறிக்கொண்டாள். நாயகத்தி டம் இவ்வளவு வெளிப்படையாகக் கூறியது, தன் உள்ளத்திலிருந்த பெரிய பாரமொன்றை இறக்கிய மாதிரி யிருந் தது. இனிமேல் அவள் மனசாட்சிக்கு விரோதமாக நடக்கவேண்டிய அவசிய மில்லை என்று எண்ணினாள். ஆனால் நாயகமோ இந்தவார்த்தைகளைக் காதில் போட்டுக்கொண்டதாகக்கூடத் தெரிய வில்லை. பழையபடியே மெதுவாக "உம். பெரிய உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டாய், ஏமாற்றமாம்! என்ன ஏமாற்றம்? நீயும் நானும் சேர்ந்து வாழ்ந்தால் அதில் என்ன ஏமாற்றமிருக்கிறது. நீ என்னதான் கூறினாலும், உன்னைவிட்டு நான் பிரிய முடியாது" என்று கண்டிப்பாக கூறி னார்நாயகம். மாலதிக்குமுன்பிருந்ததை விட இன்னும் கஷ்டமான நிலை ஏற் பட்டது. இனியும் அவர் மனதைளப் படித் திருத்துவது என்று அவளுக்கு புலப்படவில்லை. குழம்பிய மனதுடன படுக்கையறைக்குப் போய்விட்டாள். மேஜையின்மேல் முல்லைப்பூ கிடந்தது. நாயகம் நாற்காலியிலேயே உட்கார்ந் திருந்தார்.

இந்த நிலையில், இன்னும் சில நாட் கள் ஓடின. ஒரு நாள் நாயகத்தின் ஊரிலிருந்து மாலதிக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் நாயகத்தின் நண்பர் யாரோ ஒருவரால் எழுதப் பட்டது. அந்தக் கடிதம் வந்த போது நாயகம் வீட்டிலில்லை. அது அவளுக்கு

முக்கியமான செய்தியைத் தந்தது. நாயகத்தின் மனைவி, அவர் பிரிவால் வருந்தி, துன்புற்றிருப்பதாயும் அவர் மகளுக்கு உடல் நலமின்றி இறக்கும் தருவாயிலுள்ளதாயும், இந்த சமயத்தில் நாயகம் ஊருக்கு வரவேண்டியது அவசியமென்றும், ஆகவே மாலதி கொஞ்சம் இரக்கம் காட்டி அவரை ஊருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யும்படியும் அந்த நண்பர் கேட்டுக் கொண்டிருந்தார்.

இதைப்படித்ததும் மாலதிக்கு வருத்தம் எல்லை மீறியது. தன்னால் ஒரு குடும்பமே பாழாகிறதே என்று எண்ணி வருந்தினாள். எப்படியாவது இந்த பழியிலிருந்து தான் தப்பிக்கவேண்டுமென்று விரும்பினாள். நாயகத்தை விட்டும் பிரிவது மிகக் கஷ்டந்தான். ஆனால் என்ன செய்வது. அவருக்கு மனைவியாகும் பாக்கியம் அவளுக்குக் கிட்டவில்லை. அப்படியிருக்கும்பொழுது அவள் எப்படி அவரை தனக்குரிமையாக்கிக் கொள்ள முடியும். அவருடைய மனதை அவர் குடும்பத்தின் பக்கம் திரும்ப முயன்றாள். அது முடியவில்லை எது நேர்ந்தாலும் அவளை விட்டுப் போக அவர் தயாராயில்லை.

இப்பொழுது நிலைமை மிகவும்மோசமாற்று. அவர் மனைவி ஆழ்ந்த துக்கத்திலிருக்கிறாள். மகள் சாவை கட்டிக் யணைக்கத் தவிக்கின்றாள், இந்த நிலையில், மாலதிதான் ஒரு வழி கண்டுபிடித்து, நாயகத்தை அவர் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அன்றிரவு பூராவும் யோசனை செய்து கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை, வழக்கம்போல சிரித்து விளையாடிக்கொண்டே மாலதியும் நாயகமும் பொழுதைப் போக்கினர். என்றுமில்லாதபடி மகிழ்ச்சியுடனிருந்தாள் அவள். இதை காண நாயகத்திற்கு ரொம்ப சந்தோஷம். அன்று மாலை மாலதி நாபகத்தை ஒரு உதவி கேட்டாள்.

“இதோ என் இரண்டு ஜிமிக்கிகள். ஏழைக்கேற்ற எள்ளுருண்டை என்பது போல. இவைகள் வெள்ளியில் செய்யப்பட்டு தங்கமுலம் பூசப்பட்டவை. நாளகி விட்டகாரணத்தால், முலாம் மங்கிபோய் வெள்ளிதெரிய ஆரம்பித்து விட்டது. தயவுசெய்து மறுபடியும் முலாம் பூசிவருகிறீர்களா?” என்றாள் மாலதி. நாயகத்திற்கு பரமசந்தோஷம் “ஓ! இப்போதே போய்வருகிறேன்” என்று வாங்கிக்கொண்டு வேளியே சென்றா. ஜன்னல் வழியாக அவர் உருவம் மறையும்வரை அவரையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். அவள் அவரை கடைசியாகப் பார்த்தது அப்பொழுதுதான். அதற்கு பிறகு இன்றுவரை அவரைப் பார்த்ததேயில்லை! அன்றிரவு வீட்டை விட்டுப் புறப்பட்டாள். எப்படியோ பம்பாயில்ஒருஎக்ஸ்டராவாகச்சேர்ந்து பிறகு இந்துஸ்தானி சங்கீதமும் கற்றுக்கொண்டு, பிரபல பாடகியாக தென்னாடு திரும்பினாள். இப்பொழுது அவள் மனதில் முன்பிருந்த பயமில்லை. எப்படியும் நாயகம் தன் மனைவியையடைந்திருப்பார் என்று கண்டிப்பாக நம்பினாள். திரும்பவும் சென்னை வந்த பிறகு நாயகத்தைப் பற்றிய தகவல் எதுவுமே கிடைக்கவில்லை. இன்று தற்செயலாக இரண்டு ஜிமிக்கிகள் கிடைத்தன. அவைகள் அவள் நாயகத்திடம் கொடுத்து முலாம்பூசச் சொன்னவையே இன்னும் முலாம் பூசப்படாமல் இத்தனை வருடங்களுக்குப் பிறகு அவளுக்கு அவை திரும்ப வந்திருக்கின்றன.’

இதுதான் அந்த ஜிமிக்கிகள் அவளுக்கு ஞாபக மூட்டிய வரலாறு.

‘இப்பொழுது அந்த ஜிமிக்கிகளைக் கொண்டு வந்தபெண் யார்? அவள் தாயிடம் எப்படி இவைகள் வந்திருக்கக்கூடும்? அப்படி வந்திருந்தாலும் அதை ஏன் தன்னிடம் அவள் கொடுத்தனுப்பவேண்டும்? ஒருவேளை நாயகம் இங்குதானிருக்கிறாரோ?’ இம்மாதிரி பல கேள்விகள் மாலதியின் மனதில் உண்டாயின. நாயகம் இங்குதானிருக்கிறாரென்று நிச்சயமாக அவளுக்குத் தோன்றியது. மறுநாள் காலை எப்பொழுது வருமென காத்துகொண்டிருந்தாள். பொழுது விடிந்தவுடன் காரை எடுத்துக்கொண்டு மோட்டுத்

தெருவை நோக்கிப் போனாள். எப்படியோ சொல்லிவைத்தாற் போல் நாயகத்தின் வீட்டை அவள் சரியாகக் கண்டுபிடிக்க முடிந்தது. அவளைக் கண்டதும், வாசற்படியில்விளையாடிக் கொண்டிருந்த சிறுமி அம்மா! அம்மா!! என்று கத்திக்கொண்டே வீட்டிற்குள் ஓடினாள். அந்தசிறுமிதான் முன தினம் ஜிமிக்கி கொண்டுவந்தது. ஆகவே தைரியமாக வீட்டின் வாசற்படியேறினாள் மாலதி. முன் ஹாலிலேயே ஒரு நடுத்தர மாது அவளை வரவேற்றாள். அந்த மாதின முகத்தில் சோகக் களை நனறாகத் தெரிந்தது. அவளைக் கண்டதும் "என் பெயர் மாலதி, நாயகம் இங்கேதான் வசிக்கிறாரா? தாங்கள்தான் இந்த ஜிமிக்கிகளை அனுப்பியதா?" எனறுவேகமாகக் கேள்விகளைக் கேட்டாள் மாலதி. மாலதி என்ற பெயரைக் கேட்டதுமே அந்தப் பெண்ணின் முகமே மாறி விட்டது. திடீரென்று அவள் முகத்தில் கோபத்தின் அறிகுறிகள் தென்பட்டன.

"ஓ! நீ தான் மாலதியா? கடைசியாக இங்கும் வந்து விட்டாயா? இன்னும் அவருக்கு உயிர்தான் பாக்கியிருக்கிறது. அதையும் பறித்துப் போகலாமென்று வந்தாயோ!" என்றாள். மாலதிக்கு ஒன்றுமே புரியவில்லை

"நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள். தாங்கள் யார்? தாங்கள் கூறுபவைகளைக் கொஞ்சம்விளக்கமாகக் கூறுங்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை." என்றாள் மாலதி. அந்தப் பெண் நகைதாள்.

"உம், ஒன்றும் புரியவில்லையா? புரியாதுதான். விளக்கமாகக் கூறுகிறேன் கேள். விளக்கமாக உன்னிடம் கூறாமல் வேறு யாரிடம் கூறப் போகிறேன. நான் யார் தெரியுமா! நான்தான் நாயகத்தின் அபாக்யவதியான மனைவி நளினி!" என்று கூறிவிட்டு கண்ணில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

மாலதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. குழம்பிய மனதுடன் நளினி என்ன கூறுகிறாள் என்று கவனித்துக்கொண் டிருந்தாள்.

அவள் திரும்பவும் ஆரம்பித்தாள்.

"நன்றாக வாழ்ந்து வந்த குடும்பத்தில் சூறவளிக் காற்றாக நீ தோன்றினாய். ஏதோ இசைக் கச்சேரிக்கு வருவதாகக் கூறிக்கொண்டு எங்களூருக்கு, (ஆம் மருவூரை விட்டு நாங்கள் புறப்பட்டு அதிக நாட்களாகிவிட்டன.) வந்த நீ எப்படியோ என் கணவனை மயக்கி, அவர் வாழ்க்கையையே கெடுத்து விட்டாய். உன் தாளே கதி என்று அநேக நாட்கள் சென்னையிலே உன் வீட்டிலேயே கிடந்தார். இங்கு நானும் என் அருமைக் குழந்தையும், எவ்வளவு துன்பத்திற்கு ஆளானோம் என்று உனக்கு தெரிந்திருக்க முடியாது. என் வாழ்க்கையின் இன்பமான பகுதிகள், உன்னால் சுரண்டப்பட்டன. பல மாதங்களுக்குப்பின் ஒரு நாள் 'இரண்டு ஜிமிக்கிகளுடன்' என் கணவர் இங்கு வந்து சேர்ந்தார். சூனியக்காரி உன்னை எப்படியும் அவர் மறக்க மறுத்தார். எப்பொழுது பார்த்தாலும் ஏன்? நேற்று வரை அந்த ஜிமிக்கிகளைப் பார்த்துக் கொண்டே காலந்தள்ளினார். வெள்ளி தெரியும் அந்தப் பாழும் ஜிமிக்கிகளில் கண்ட இன்பம்,என் கருமை நிறைந்த கூந்தலில் அவர் காணவில்லை. எப்படியோ அவரை வாழ முடியாதவராக்கி இங்கு அனுப்பிவித்தாய். இன்று வீட்டிற்கே வந்துவிட்டாய்" என்று கூறிக் கொண்டிருக்கும் பொழுது, திடீரென்று அழுதுவிட்டாள் நளினி. மாலதி அவசரமாக ஓடிப்போய் அவள் கண்களை துடைத்தாள். அவளுக்கு எப்படித் தன் நிலையை விளக்குவாள் மாலதி. விளக்கினாலும் அவளால் புரிந்து கொள்ள முடியுமா?

அவள் எந்தக் கொள்கைக்காக இத்தனை ஆண்டுகள் துன்புற்றாளோ அது தோல்வியுற்றது. நாயகம் தன் மனைவியுடன் சந்தோஷ வாழ்க்கை வாழவில்லைஎன்று நன்றாகத் தெரிந்தது. பாவம்! நளினியின் வாழ்வு அழிக்கப்பட்டுவிட்டது. அதற்குஅவளா காரணம்!

தைரியமாக வீட்டிற்குள் போனாள். பின்னடியே நளினி வந்தாள். நாயகம் பின்புறத் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார். தன்னைக் கண்டதும் ஆச்சரியத்துடன் நாயகம் தன்னை வரவேற்பார் என்று மாலதி எண்ணினாள். ஆனால் அவர் ஆடாமல் அசையாமல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். மாலதி அருகில் சென்றதும், தலை நிமிர்ந்து பார்த்தார். அவர் முகத்தில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை. மாலதியை அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. அவருக்குப் புத்தி சுவாதீனமேயில்லை மாலதியைக் கண்டதும்.

"எங்கே என் ஜிமிக்கி?" என்றுகேட்டார்.

மாலதி உண்மையாகவே கொடுக்கலாமென்று கைப்பையைத் திறக்கப் போனாள். அதற்குள் வாசற்படியில் நளினி நிற்பதைப் பார்த்தாள். அவள் முகத்தில்சோகத்தின் எதிரொலி நன்றாகத் தோன்றியது. அவருடைய இன்பத்தைப்பறித்த அந்த ஜிமிக்கிகளெதற்காக மறுபடியும் நாயகத்திடம் போக வேண்டும்? என்று பேசாமல் திரும்பினாள். நாயகம் அவளை மறந்து போய் விட்டார்; ஆனால் வாழ்க்கையையும் சேர்த்து மறந்து விட்டார்.

அதற்கு மாலதி பொறுப்பாளியல்ல. வாழ்க்கையில் திடீர்சந்திப்புகள் ஏற்படுகின்றன. சிறிது காலங் கழித்து பிரிவு உண்டாகிறது. பிறகுமறுபடியும் ஒன்று கூடும் சந்தர்ப்பங்கள் வருவதில்லை.



"மன்னன் கையில் செங்கோல் இருக்கிறது; அவன் கையசைத்தால் போர் வீரர் என்னைப் பழிவாங்க வருவார்கள். மதக் குருவின் கையில் சிலுவை யிருக்கிறது; அவன் முன் மண்டியிட்டுக் கிடக்கும் மக்களை என்மீது ஏவுவான். எனினும், இருவரையும் எதிர்க்கிறேன். அதைவிடப் பலமான பேனா இதோ! என் கையில் இருக்கிறது."

— வால்டையர்.

# அமைப்பு முறை வேண்டும்

"அமைப்பும், கட்டுப்பாடும், ஒரு கட்சிக்கு மிக்க அவசியம் என்பதை மறுப்பவர் இல்லை. ஆனால், போலி அமைப்புகள், கட்சிக்குப் புண்ணாக முடியும். உண்மையான அமைப்பு உண்டாக ஆங்காங்கு திடசித்தமும், தீவிர நோக்கமும், கடமையில் களிப்பும், பதவியில் வெறுப்பும், கஷ்ட நஷ்டத்தை ஏற்கும் துணிவும், கொண்ட இளைஞர்கள் பலநூறு—பல ஆயிரம் தோன்ற வேண்டும். அவர்களின் வியர்வையே, கண்ணீரே, இரத்தமேதான், அமைப்பு என்னும் அஸ்திவாரத்திற்குத் தேவை. இதன்றி, சர்க்கார் கெஜட்டுகளை வேதமாகவும், கலெக்டர் துரைகளின் கைலாகுகளை மோட்சமாகவும், சட்டசபைகளைச் சாம்ராஜ்யமாகவும், கருதுவோரும், காண்ட்ராக்ட் உண்டா, மந்திரி வேலை கிடைக்குமா, காசு திரட்டவழியுண்டா, பட்டம்கிட்டுமா, பதவிகாலிலே தட்டுமா, என்று கேட்கும் சபலசித்தம் படைத்தவர்கள், எத்தனை கிளைச் சங்கங்களை ஏற்படுத்தினாலும், அவை ஏற்படுவதை விட விரைவில் அழிந்துவிடும்; எதிரிகளால் அழிக்கப்பட்டு விடும். ஆகவே, அமைப்பு ஏற்பட்டு, அது அசைக்க முடியாததாக, நிலைத்து நின்று பணிபுரியக் கூடியதாக இருக்க வேண்டுமானால், அந்த அமைப்பு வேலையைத் தலைவர்கள் என்போர் செய்வதைவிட, இளைஞர்கள் செய்ய முற்படுவதுதான் சரி. மாலை தொடுக்க மலர் வேண்டும், மலர் கிடைக்கப் பூந்தோட்டம் வேண்டும், பூந்தோட்டம் வெறும் பொட்டலாக இருந்தால் அங்கு கிடைக்கும் காளானையும், ஊமத்தையும், எருக்கிலையையும் தொடுத்து மாலையாக்குவது வீண் என்று எலர்தான் கூறார். இதுபோது ஆங்காங்கு நடைபெறும் வாலிபர் மநாடுகள், பூந்தோட்டங்களாகவே காணப்படுகின்றன. இந்த மலர்களால் தொடுக்கப்படும் மாலை மணமும் குணமும் நிறைந்ததாக இருக்கும். ஆகவே, சிற்றூர்களிலும் வட்டாரங்களிலும் இனி வாலிபர்கள் முனைந்து நின்று அமைப்பு முறையைக் கைக்கொள்ள வேண்டுகிறேன்."

—இது 22—7—44-ல் ஜலகண்டபுரத்தில் நடைபெற்ற, ஓமலூர் தாலுக்காத் திராவிட இளைஞர் மாநாட்டுக்குத் தலைமைவகித்த தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் ஆற்றிய தலைமையுரையில் ஒரு பகுதியாகும்.

# ஆற்றாது அழுத கண்ணீர்

[ இரா. நெடுஞ்செழியன் ]

உலகப் பாட்டாளி சமூகமே இன்று ஒரு கேள்விக்குறியாகக் காட்சி யளிக்கிறது! ஒருகாலம் இருந்தது, பாட்டாளி வர்க்கம் முற்றுபுள்ளியாக முடங்கிக்கிடந்த காலம். சென்ற இரண்டு நூற்றாண்டுகாலத்தில், உழைத்துழைத்து உயிரைவாழ்வுக்கு அடகு வைத்து வாழ்ந்த பாட்டாளி மக்கள், தாங்களும் இவ்வுலகில்மக்களாகவாழப் பிறந்தவர்கள்தாம் என்றும், வாழ்வின் பயனை நுகரவேண்டிய உரிமையில் தமக்கும் பங்கு உண்டு என்றும் உணர்ந்து, உணர்ச்சிபெற்று வீறிட்டெழுந்தனர். இந்தக் காலத்தில்தான் பாட்டாளி உலகம், ஆச்சரியக் குறியாகக் காட்சியளித்தது! முற்றுப்புள்ளி ஆச்சரியக்குறியாகி, ஆச்சரியக்குறி கேள்விக்குறியாகியிருக்கிறது! கேள்விக்குறி அபாயக் குறியாக மாறும் கட்டம், சிலவிடங்களில் நிறைவேற்றப்பட்டும், வேறுவிடங்களில் நிறைவேற்றி வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டும் பாட்டாளி உலகம் உழன்று வருகிறது!

உண்மை உலகம், உழைப்போர் உலகம் நோக்கிச் சுழன்று வருகிறது. 'உலகம் உழைப்பாளிகளுக்கு உரிமையுடையது, என்ற கருத்து, உழைப்போர் சமூகத்தை இழுத்துக் கொண்டு முன்னேறுகிறது.

பாட்டாளி உலகம் விம்மி எழும் அளவுக்கு, அதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அநீதி இழைக்கப்பட்டு வந்திருக்கிறது!

“அவர்கள் காணத்தகுந்தது வறுமையாம், பூணத்தகுந்தது பொறுமையாம்” என்று புத்துலகக் கவி பாரதிதாசன் கூறியது போல் பாட்டாளிகளின் நிலை ஆக்கப்பட்டிருக்கிறது. நாகரிக உலகம் என்று கூறப்படுவது அவர்களைத் திரும்பிப் பாராமலேதான் நகர்ந்து வந்திருக்கின்றது.

பாட்டாளியின் வாழ்வு ஏன் துன்பப் படுகுழியில் தள்ளப்பட்டிருக்கிறது? அவன் உழைத்தும் உழைப்பின் பலனைத் தான்நுகரமுடியாமல், சேர்த்து வைக்கும் தேனைத் தான் குடிக்க வாய்ப்பு ஏற்படும் முன்பே, பிறரால் கவரப்பட்டு தேனீவருந்துவது போல வாழ வேண்டியவனாக இருக்கிறான். பாட்டாளித் துன்பப் படுகுழியில் வீழ்ந்து தத்தளிக்கத் தத்தளிக்கப் பணக்காரன் இன்பபுரியில் உல்லாசப் பயணம் புரியத் தொடங்குகிறான். ஏன் இந்த வேறுபாடு? உழைப்பவன் உழைப்பின் பலனைப் பெறமுடியவில்லை; ஆனால் உல்லாசச் சீமான் அந்த உழைப்பின் பலனை உழைக்காமலே நுகர முடிகிறது. இந்த முறைவருவானேன்? குடிக்கக்கூழில்லை, குந்தக் குடிசையில்லை, காலில் செருப்பு இல்லை, கையிலொரு காசும் இல்லை, கடன் கொடுப்பார் யாரும் இல்லை என்று ஏக்க விருத்தம் பாடும் நிலையில் பாட்டாளி; இருக்கும் சொத்துக்களை எண்ணிப் பார்க்க முடியாமல், மூன்றடுக்கு மாளிகையின் உச்சி மாடியில் நாலாந்தார மனைவியுடன் சபலமொழிப் பேசி பொருளைச் செலவழிப்பது எப்படி, பொற்கொடி மாதரின் புன்சிரிப்பைப் பெறுவதெப்படி என்று ஏக்கவிருத்தம் பாடும் சீமான் மற்றோர்புறம். இரண்டும் ஏக்கவிருத்தந்தான்; என்றாலும் மாறுபட்ட தேவை குறித்து இரண்டும் எழுகின்றன. இது ஏன்? பிறக்கும் போது ஒரே உரிமையில் பிறந்தாலும் ஒருவன் பொருளற்றவனாகவும், மற்றொருவன் பொருளுடையவனாகவும் கருதப்படுவானேன்? இந்த நிலைகள் ஏன் இன்னும் காப்பாற்றப்பட்டு வரு

கின்றனவென்றால், பாட்டாளி உலகம் முழுவதும் கேள்விக்குறியாக இன்னும சரியானபடி மாறாததுதான் !

பாட்டாளியைப் பாட்டாளியாகவும், பணக்காரனைப் பணக்காரனாகவும் விட்டுவைப்பதற்குக் காரணங்களாக உள்ளவை சாஸ்திர, சம்பிரதாய, உபநிஷத, வேத, கடவுள், கடவுளவதார, கடவுளருள் பெற்றோர் ஆகியோரால் கட்டளையிடப்பட்டகருத்துக்களாகச் சொல்லப்படுபவையே யாகும். அவைகளின் மேல் எழுபப்பட்ட சடங்குகளும், சட்டதிட்டங்களும்தாம் பேத முற்ற நிலையைக் காப்பாற்றி வருகின்றன. அந்த சட்ட திட்ட சம்பிரதாயங்களின் மீது நின்று ஆட்சி நடை பெறுவதாலும், அப்படிப்பட்ட ஆட்சி, நடை பெறுவதற்கான முறையிலேயே, பணக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்த வசதிக் கருவிகளைப் பயன்படுத்தி வந்ததாலும் பணக்காரர்கள்—பாட்டாளிகள், இன்றும் நின்று நிலவுகின்றனர்.

உலகம் பொது; அதில் தோன்றுகின்ற அனைத்துயிரும் தாங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்று, நுகர்ந்து, வாழ்ந்து, மடிகின்றன; மற்ற பறவை, விலங்கினங்களைப்போலவே மக்களினமும் தோன்றுகின்றன; அவைகளைப் போலவே மக்களினமும் தனக்குத் தேவையானவற்றைப் பெற்று வாழ முடியும்! ஆனால் அதைத்தான் நடை முறையில் காண முடியவில்லை. மக்களினம் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொண்டு வாழ்கிறது. 'கையடியும்,வாயாடியும்கொண்டபேர்கள்' ஏமாற்றுக்காரர்களாகவும், 'கண்மூடி மக்கள்' ஏமாறும் மக்களாகவும் வாழ ஆரம்பித்ததால், உரிமை, கூடக் குறைய பங்கு போடப்படுகிறது.

நாலாயிரம் ஏக்கர் நிலத்திற்கு உரிமையுடையவனாகக் கருதப்படும் ஒருவனுக்கு, ஒரு ஆண் மகன் பிறந்து விட்ட காரணத்தினாலேயே அந்த மகன் அந்த நாலாயிரம் ஏக்கர் நிலத்திற்கும் சொந்த முடையவனாகிறான். இந்த உரிமையை அந்த மகனுக்கு அளிப்பதற்கு காரணமாகவிருப்பது பிறப்பின் மேல்உரிமை ஏற்றபட்டிருப்பதே! ஏற்றபடக்கூடாது; பகுத்தறிவுக்கு ஒத்ததல்ல; பண்பிற்கு ஏற்றதல்ல; இயற்கை நீதிக்கு அடுத்ததல்ல; என்றாலும் ஏற்றப்பட்டிருக்கிறது. பிறப்பின் காரணமாகக் கிடைக்கும் அந்தச் சொத்துரிமையோடு, தன் 'திறமை' யால் தேவைக்கு அதிகமான பொருளைச் சேர்ப்பதற்கான உரிமையைப் பழைய சம்பிரதாயத்தின் மீது கட்டப்பட்ட அரசியல், பொருளாதாரப் சமுதாய சட்டதிட்டங்கள் அளிக்கின்றன. பாட்டாளி வீட்டில் பிறக்கும் ஒருவன் அந்தப்பாட்டாளிக்குச்சொந்தமெனகருதப்பட்டவைகளுக்குத்தான் உரிமை யுடையவன். அவனும் அவைகளைக்கொண்டுதான்தன் உழைப்பால் வாழ்க்கையோடு போராடிவெற்றிபெற வேண்டும். ஆகவேதான், சொத்துரிமையைப் பிறப்பின் மீது ஏற்றி, அதன் காரணமாகத் தேவைக்கு மீறின சொத்து ஒருவனிடம் போய்ச் சேரவும், மற்றொருவனிடம் ஒன்றும் சேராமல் போகவும் ஆன நிலையை, அடியோடு—வேரோடும் வேரடி மண்ணோடும் ஒழித்து, பிறப்பின் மீது சொத்துரிமையை ஏற்றுகின்ற கயமைத் தன்மையைச் சட்டதிட்ட ஆட்சி முறையிலே அழித்தொழிக்க வேண்டும். அந்த மாற்றத்தைச் செய்ய இன்றையபாட்டாளி உலகம் திரண்டெழவேண்டும்!

அவனவன் தேவையை அவனவனே தேடிக்கொண்டு வாழ வேண்டும் என்றிருந்த காட்டுமிராண்டி,வாழ்க்கையில் சொத்து பொதுவாகத்தான் கருதப்பட்டு வந்தது. தேவையானவற்றை மட்டும் அவ்வப்போது பெற்றுக் கொண்டு, தனக்கும் தன்னுடைய பிற்காலச் சந்ததிக்கும், என்றும் பயன்படட்டும் என்று தேவைக்கு மீறின அளவுக்குச்சொத்தைச்சேர்த்து வைத்துக்கொள்ளாமல் வாழ்ந்த நிலை, காட்டுமிராண்டி நிலையாக இருந்திருக்கிறது. அதிலிருந்து நாகரிக உலகிற்கு ஓடிவந்த மனிதன், காட்டு மிராண்டி வாழ்க்கையில் தன்னைப் பொறுத்து கொண்ட முறையை, சற்று ஒழுங்குபட்ட, பண்பட்ட முறையில் மக்கட் சமுதாயம் முழுதுக்கும் கொள்ளமுற்

பட்டிருந்தால், சக்திக்கேற்ற உழைப்பினைச் செய்து தேவைக்கேற்ற வசதியினைப்பெறுவதுஎன்ற உயரிய நிலையில், சமுதாயம் அறிவுத்துறையில் முன்னேறிக் கொண்டிருக்க வழியேற்பட்டிருக்கும். இயற்கையின் நியதியைக் கெடுத்து, சுயநலவாதிகளால் சட்டங்கள் இயற்றப்பட்டு, சமுதாயத்தைத் தங்கள் விருப்பப்படி மாற்றியமைத்துக்கட்டுப்படுத்திவைக்க முடியும் என்ற நிலையை மாற்றி, பொதுநலனுக்கேற்ற சட்ட திட்டங்களை வகுத்து, சமத்துவப் பொதுக் கட்டுப்பாட்டை நிலவச் செய்ய முடியும், என்றஉறுதிப்பாடு, உழைப்பாளிகளுக்கு என்று தோன்றுகிறதோ, அன்றுதான் பாட்டாளி உலகம், பழமைக்கு, அபாயக் குறியாக மாற முடியும். அப்படி மாறினால்தான், இன்பபுரியை அடைவதற்கான வழியை வகுக்க முடியும். பாட்டாளி தன்னறிவிலும், தன்னாற்றலிலும் நம்பிக்கைவைத்துச் செயலாற்ற முற்படும் போதுதான், பொருளாதார பேதம் ஒழியக்கூடும். அந்த நம்பிக்கையை, அவர்களுக்கு ஊட்டுவதற்கு, இளைஞர்கள் பாடுபடவேண்டும். ஆயிரங்கால நச்சு மரத்தின் ஆணிவேரைக் கெல்லி எறியும் பெரும்பணியில், ஈடுபட வேண்டியவராகிறார்கள் இளைஞர்கள்!

உலகிலுள்ள மக்களனைவர்க்கும் தேவையான அளவுக்கு உணவைக் கொடுக்கப் போதுமான அளவு விளை நிலமோ, விலங்கினமோ, பழமுதிர் சோலையோ, கனிகுலுங்கும் காடுகளோ இல்லை என்று கூறிவிட முடியுமா? இருந்தும் பெற முடியவில்லை! பெறமுடியாதபடி மனிதனாலேயே முட்டுக்கட்டைகள் போடப்பட்டிருக்கின்றன. மக்களுக்குப் போதுமான உடைகளைத் தயாரிக்க ஏற்ற அளவு தோலின் வகைகளோ, கம்பளமோ, பருத்தியோ, பட்டோ, ரப்பரோ இல்லையென்று சொல்லிவிட முடியுமா? இருக்கிறது! ஆனால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படிச்செய்யப்படவில்லை. மக்கள் குடியிருப்பதற்கான இருக்கைகளைச்செய்துகொள்ள, வேண்டிய அளவு மரமோ, கல்லோ, மண்ணோ இல்லையென்று மொழிந்துவிடமுடியுமா? இருக்கின்றன! எல்லோரும் பெறுமாறு செய்யப்படவில்லை. இந்த செய்யக்கூடிய—ஆனால் செய்யப்படாத செயல்களைச் செய்ய, பொதுநலத்திற்கான அறிவைப் பயன்படுத்தும் மக்கள் மூண்டெழவேண்டும்!

உலகில், பெரும் பகுதி மக்களாக வாழும் பாட்டாளிகள், வறுமையில் உழல இல்லாமை காரணமாகவில்லை, அதிகம் இருப்பதே காரணமாகிறது. பொருள் ஒரு சிலரிடத்தில் பயன்படாத அளவுக்கு முடங்கிக்கிடக்கிறது; அதனால் ஆயிரக் கணக்கானவர்கள் பயன்படுத்த வேண்டிய அளவுக்குக் கிடைக்கப் பெறாமல் வயிறு ஒட்டி மடிகிறார்கள். இதனால்மேட்டுக்குடியினரும், காட்டு குடியினரும் இருவேறு பிரிவினராக வாழ வேண்டியவராகிறார்கள். பிறப்பில் பேதமில்லை; பேதமிருக்கக் கூடாது;என்னும் போது வாழ்விலும் பேதம்தலை நீட்டக் கூடாது. பேதம் தலை நீட்டக் கூடாது என்றால் மேட்டுக்குடி நிலையும், காட்டுவாழ்க்கை நிலையும் மாறி, மேடும் பள்ளமும் சமத்தரையாக ஆக வேண்டும்.

நாம் வாழும் உலகம் உழைப்பாளரின் உழைப்பால் உருவாகியதாகும். உலகினை விலைகூற வேண்டுமானால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொழில்புரிந்த பாட்டாளிகளின் மொத்த உழைப்பிற்கு விலை கூறுவதாகப் பொருள். நீரோடை நிலங்கிழிக்க, நெடுமரங்கள் நிறைந்து பெருங்காடாக்க, பெருவிலங்கு நேரோடி வாழ்ந்திருக்கப் படுக்கைக் கல்லவின் நெடுங்குன்றிற் பிலஞ்சேர, பாம்புக் கூட்டம் போராடும் பாழ் நிலத்தை, அந்த நாளில், உழைப்பாளர் தம் தோளுழைப்பால் உருவாக்கிய பின்னரே, அது விலை போகும் நிலைமைக்கு வந்தது. பூமிக்கடியில் கிடந்துறங்கும் வரையில் பொன்னுக்கும், வைரத்திற்கும் விலைகிடையாது. அவற்றைப் பாட்டாளிகள், தம் உழைப்பினைக் கொடுத்து, வெளியே கொண்டுவரும் போதுதான், அவை விலைபோகிறது. ஆகவே, விலையில்லாத பொன்னுக்கு, விலைகொடுத்துவாங்கும் நிலையை, உண்டாக்கிய உழைப்புக்கே, கொடுக்கும்

விலை . உரிமையுடையதாகிறது. இது போன்றே கடலிற் கிடக்கும் முத்தும், காடுகளில் விளையும் அகிலும் தேக்கும், மலையிற் கிடர்கும் மாணிக்கமும், ஆறுகளில் தேக்கிய தண்ணீரும், அது பாயும் விளைநிலமும், விளைநிலத்தில் விளையும் பயிரும், பயிர்தரும் கதிரும், கதிரிலிருந்து எடுக்கப்படும் மணியும், அது தரும் உணவின் வகைகளும், மலையிலிருந்து பெயர்த்தெடுக்கப்படும் கல்லும், அது செதுக்கப்பட்டு கட்டப்படும் வீடும், காடுகளில் விளைவிக்கப்படும் பருத்தியும், அவற்றால் நெய்யப்படும் ஆடையும் விலை, பேசுகின்றன. அவை. அனைத்திற்கும் கொடுக்கப்படும் உண்மையான விலை, உண்மையான உழைப்புக்குப் போய்ச்சேர வேண்டிய உரிமையுடையதாகிறது. ஆனால் அப்படிச் சேரவிடாமல், இடையிலுள்ள தரகர்களுக்கும், ஏமாற்றுக்காரர்களுக்கும் போய்ச் சேரும் படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அநீதியான நிலை மாற, தரகர் நிலையிலுள்ளோரை உழைப்பாளர் உலகத்திற்குக்கொண்டுபோய்த்தள்ளி, எல்லோரும் உழைப்பாளர் பட்டியலில் வரும்படி செய்து, அப்பொழுது உழைப்பால் கிடைக்கும் விலையை அதாவது பலனை, எல்லோரும் தேவையான அளவுக்குப் பெறும்படியான நிலைமையை உண்டாக்கப் பாடுபடுவதே 'மே நாள், உலக மக்களுக்குக் கற்பிக்கும் பாடமாகும். "சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி" இது புத்துலகச் சிற்பிகளின் புரட்சிக் கீதமாகும்.

1. பொதுச் சொத்துரிமை.
2. பொது உழைப்பு.
3. பொது லாப உரிமை.
4. பொதுப் பகிர்வு உரிமை.
5. பொது ஆட்சி உரிமை.

இந்த உரிமைகள் மக்களுக்கு ஆக, உரிமைப் போர்கள் துவக்கப்பட வேண்டியிருக்கின்றன. அவைஏற்படாமல் பார்த்துக்கொள்ள ஆணவ வெறி பிடித்த மதப்பித்தரும், ஆணவ ஆட்சி புரியும் பணக்காரர்களும் தங்களாலான தடைகளைச் செய்து வருகின்றனர்.

**ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அழுத கண்ணீரோடுத் தேம்பித் தவித்துத் தத்தளித்து நிற்கும் பாட்டாளி உலகம், கேள்விக் குறியாகவும், பின் அபாயக்குறியாகவும்மாறி வருகிறது! பாட்டாளிகள் ஆற்றாது அழுத கண்ணீர் ஆணவப் போக்கினரின் செருக்கையும், செல்வத்தையும் தேய்க்கும் படையாகும் என்பது மட்டும் உறுதி!**

